

# ஞானச்சுடர்

சந்நிதியான் ஆச்சிரமம்

256 ஆவது மலர்

சித்திரை 2019

ஓம் முருகா

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்து மகத்தே நகும்.

**பொருள்:** கள்ள மனமுடையவனது குற்றமான ஒழுக்கத்தைப் பிறரறியாராயினும், அவனுடம்பிலுள்ள பூதங்கள் ஐந்தும் அறிந்து தம்முள்ளே பரிகசிக்கும். (271)

வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தானறி குற்றப் படின்.

**பொருள்:** குற்றமென்று அறிந்தும் அக்குற்றத்தை ஒருவன் மனமறியச் செய்வானானால் வானம்போல உயர்ந்த தவவேடம் அவனுக்கு என்ன பயனைச் செய்யும்? (272)

# நற்சிந்தனை

மறப்பேனோ குருநாதன் தன்னை

**முத்தி நல்குமே**

## தன்னையறிந்தோர் தலையானோர்

வெண்பா




சாற்று முடல்பொருளு மாவியுந்தந் தோர்களிந்த
மாற்றமாம் வையம் மதிப்பாரோ – தோற்றமெலாம்
தாமே யலவென்று தம்மையறிந் துய்வோருக்
காமாறென் காணு மறை 05

அறையும் மறைநாலு மாகமங்கள் தாமும்
இறையளவும் தெய்வ மியம்பா – தறநெறியே
கும்பிட்டார்க் கல்லால் குளிர்ந்த மலர்ப்பாதம்
இம்மட்டென் றேகூற லில் 06

இசையும் பெர்ருளை யிரப்போருக் கீந்தே
இசைபடவே வாழ்வார்க்கிப் பூமி – திசையறியப்
பூங்கோயி லாகப் பொருந்துமே யாதலினால்
நீங்காம லீந்தே நிலை 07

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

# ஞானச்சுடர்



வெளியீடு - 3 சுடர் - 256

2019 **பொருளடக்கம்** சித்திரை



| | | |
|---|---|---|
| விழித்தெழுவோம் சந்ததி காக்க | திருமதி ந. பரமேஸ்வரி | 01 -05 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 06 -09 |
| சித்திரா பூரணை | கு. சோமசுந்தரம் | 10 -12 |
| ஆனந்தக் கிருஷ்ணனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 13 -15 |
| எம் மதத்தையும் இனத்தையும்... | செல்வி ச. வர்ணி | 16 -17 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 18 -22 |
| மெய்வருத்தம் பாரார்... | கே.எஸ். சிவஞானராஜா | 23 -26 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 27 -28 |
| பொறுமையின் பெருமை | திருமதி த. வசந்தகுமாரி | 29 -30 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 31 -32 |
| இந்து சமயமும் இந்து... | ஆர்.வீ. கந்தசுவாமி | 33 -34 |
| ஔவையாரின் பாடற் சிறப்பு | மூ. சிவலிங்கம் | 35 -38 |
| கணநாத நாயனார் | க. சிவசங்கரநாதன் | 39 -40 |
| தலைவன் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 41 -42 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 43 -46 |
| அப்பர் சுவாமிகள்... | பு. கதிரித்தம்பி | 47 -49 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 50 -51 |
| மனிதனும் மனிதாபிமானமும் | பூ.க. இராசரத்தினம் | 52 -53 |
| அடிமுடி தேடிய.... | அ. சுப்பிரமணியம் | 54 -56 |




**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

**தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406**

**அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்**

# ஞானச்சுடர் பங்குனிமாத வெளியீடு

## வெளியீட்டுரை:-

ஞானச்சுடர் பங்குனி மாத மலருக்காகிய வெளியீட்டுரையினை இளைப்பாறிய அதிபரும், ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்பாடுகளுக்குத் தன்னாலான ஆதரவை நல்கி வருபவருமான திரு வ. கணேசமூர்த்தி அவர்கள் மேற்கொண்டார்கள்.

சந்நிதியான் ஆச்சிரமத்தோடு இணைந்து சேவையாற்றும் பேரவையினரின் ஆக்கபூர்வமான செயற்பாடான இந்த ஞானச்சுடர் மலர் வெளியீடு 255 மாதகாலம் தொடராக ஒரு ஆன்மீகம் சார்ந்த மலராக அதுவும் விளம்பரம் ஏதுமற்ற வகையில் வெளிவருவதென்பது ஒரு சாதாரண விடயம் அல்ல. அச் செயற்பாட்டை இப் பேரவையினர் பயபக்தியுடனும் காத்திரமாகவும் செய்து வருகின்றார்கள் என்றால் அவர்கள் போற்றப்படவேண்டியவர்களே. இத்தகைய கைங்கரியங்களுக்கு ஆச்சிரம சுவாமிகளது அர்ப்பணிப்புடன் கூடிய ஒத்துழைப்பானது உந்துசக்தியாக விளங்குவது டன் சந்நிதி வேலவனின் அருட்திறமும் அலைவீசுவதன் ஊடாக இப்பணிகள் இவ்விடத்தில் முன்னெடுக்கப்படுகின்றன என்று கூறித் தனது வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:-

பங்குனி மாதம் 255ஆவது மலருக்குரிய மதிப்பீட்டுரையினை சந்நிதியான் ஆச்சிரமப் பணிகளுக்கு முன்னுரிமை கொடுத்தவரும், அதன் பலனாக எல்லோர் மனங்களிலும் நீங்கா இடத்தைப் பெற்று மறைந்த அமரர் நித்தியதசீதரனின் சகோதரரும், ஆசிரியருமாகிய நி. பாபுதரன் அவர்கள் மேற்கொண்டார்கள்.

வயதில் இளையவராக இருக்கும் தன்னையும் ஒரு பொருட்டாக மதித்து சந்நிதி வேலவனது அருளாசியுடன் வெளிவரும் ஞானச்சுடர் மலருக்கு மதிப்பீட்டுரை ஆற்றுவதற்கு என்னை அழைத்த அனைவருக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய ஆசிரியர் திரு நி. பாபுதரன் மலரில் இடம்பெற்ற ஆக்கங்களின் தன்மை, அதில் உள்வாங்கப்பட்ட கருத்துக்கள் பற்றியும் சபையில் உள்ள அடியார்களுக்கு எடுத்துக் கூறினார்.

இறுதியாக தனது தமையனார் இருந்த காலத்தில் செய்துகொண்டிருந்த இப்பணியை ஆச்சிரம சுவாமி அவர்கள் என்னைச் செய்யுமாறு கூறியதன்பேரில் இப்பணியை முன்னெடுத்திருக்கிறேன் என்று கூறித் தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

நமது வாசற்படியில் - நம் கண்முன்னே அரங்கேறிய வன்முறையாளர்களின் வெறிச்செயலால் 300க்கும் அதிகமானவர்கள் பலியாகவும், இதைவிட 500க்கும் அதிகமானோர் படுகாயமடையவும் காரணமான குண்டுத் தாக்குதல்களால் ஏற்பட்ட இழப்புக்கள் இலங்கைத் திருநாட்டில் அனைத்து மக்களையும் கண்ணீர்விட வைத்துள்ளது.

யேசுபிரான் உயிர்த்தெழுந்த ஞாயிறன்று நாட்டின் அனைத்து கிறீஸ்தவ தேவாலயங்களிலும் காலைநேர ஆராதனைகள் நடைபெற்ற வேளையில், கொச்சிக்கடை புனித தேவாலயத்திலும் - மட்டக்களப்பு தேவாலயத்திலும் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவங்களே கூடுதலான உயிரிழப்பையும் - பல நூறுபேர் காயப்படவும் காரணமாகியது. இதைவிட ஐந்து நட்சத்திர விடுதிகளில் தங்கியிருந்த வெளிநாட்டவர் சிலரும் உயிரிழந்துள்ளனர்.

இழக்கப்பட்ட இன்னுயிர்களின் ஆத்ம சாந்திக்காக கடந்த ஞாயிறன்று (24.04.2019) ஒரு பூரண துக்கதினம் அனுட்டிக்கப்பட்டதும், இன - மத வேறுபாடின்றி அனைத்து மக்களும் தேவாலயங்களிலும் - கோவில்களிலும் - பொதுவிடங்களிலும் பிரார்த்தனையில் ஈடுபட்டதுவும் அனைத்து மக்களதும் ஒற்றுமையின் வெளிப்பாடேயாகும். இத்தகைய இன - மத ரீதியிலான ஒற்றுமையினால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பல்வேறு அனர்த்தங்களையும் ஓரளவுக்காவது தடுத்து நிறுத்தமுடியும்.

இந்தப் பயங்கரவாத சம்பவத்தில் காயமடைந்தவர்கள் அனைவரும் விரைவில் சுகமடையவும், இறந்துபட்ட இன்னுயிர்களின் ஆத்மசாந்திக்காகவும் நாமும் ஆண்டவனைப் பிரார்த்திப்பதுடன், பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எமது ஆழ்ந்த கவலையையும் - அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு

## 14. வேல்வாங்கு வகுப்பு

அடவிப டுஞ்சடை மவுலியில் வெம்பணி யம்பணி
யாமாங்கதர் வாமாங்கனை
அநுபவை யம்பிகை யநுதிதை யம்பைத்ரி யம்பகி
யாசாம்பரை பாசாங்குசை
அநகைய சஞ்சலை யதிகுண சுந்தரி யந்தரி
காலாந்தகி மேலாந்திரு
அமலைய லங்கருதை யபிநய பங்குரை சங்கினி
மானாங்கனி ஞானாங்குரை
அணிமுக பந்திகள் சிறுபொறி சிந்தவி ளைந்தழல்
வாய்கான றிடு நாகாங்கதை
அபயவ ரம்புரி யுபயக ரந்திக முந்தணி
யாமாங்கறி தாய்மாண்பினள்
அதுலைத ருந்திரு மதலையி பங்கொள்ப யங்கொடு
பாய்மாண்கலை வாய்மாண்புன
அணிகுற மின்புணர் தணிகையி லந்தண னிந்திர
ராசாங்கம தாராய்தவன்:,

வடவையி டும்படி மணிமுடி பஞ்செழ விஞ்சிய
மாடாம்புடை நாடாண்டகை
வசைகரு துங்குரு பதியொடு தம்பிய ரும்பட
வேபாண்டவர் தேருர்ந்தவன்
வளவில்வ ளர்ந்திடை மகளிர்கு விந்துத டங்குடை
வார்பூந்துகில் வார்பூம்புயல்
வரைநிரை கன்றின முழுதும யங்கிய பண்கெழு
வேயேந்திய வாயான்கழல்
மருதிடை சென்றுயர் சகடுத டிந்தடர் வெம்புளை
வாய்கீண்டொரு பேய்காய்ந்தவன்
மதசயி லம்பொர வரவிடு நெஞ்சினில் வஞ்சக
மாமான்பகை கோமான்றிரு
மருகனி ரம்பிய மதிமுக மஞ்சரி குஞ்சரி
வாகாம்பரை தோய்காங்கெயன்
மகபதி தனபதி பகைகிழி யும்படி யன்றடல்
வாளோங்கிய வேல்வாங்கவே.

# சித்திரைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**திருமதி எழில்மதி ஜெயநாதன்**
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி தெமட்டகொட, கொழும்பு)

**திருமதி S. லோஜினி**
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, வெள்ளவத்தை)

**அப்பர்சாமி கோபாலகிருஷ்ணன்**
(இளை. முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)

**நா. உமாசங்கர்**
(கயூரி வீடியோ விஷன், அச்சுவேலி)

**நா. குகன்**
(குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை)

**பொ. பாலசிங்கம்**
(பத்தமேனி, அச்சுவேலி)

**இராசையா சற்குணதாஸ்**
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)

**திருமதி ஸ்ரீனிவாசன்**
(பழம்றோட், கந்தர்மடம்)

**Dr R. பாக்கியநாதன்**
(பொன்னையா வைத்தியசாலை, திருநெல்வேலி)

**திருமதி T. ராமச்சந்திரன்**
(யாழ்ப்பாணம்)

**திருமதி சிவராஜா**
(நல்நடத்தை உத்தியோகத்தர், கொழும்பு)

**செல்வி சாவித்திரி செல்வரெத்தினம்**
(யாழ்ப்பாணம்)

**வீ. கிருஷ்ணராஜா**
(ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி)

**சி. கனகசபாபதி**
(சிவன் கோயிலடி, ஆவரங்கால்)

**மா. குலநாதன்**
(நாதன் கராஜ், அச்சுவேலி)

**ச. மனோகரி**
(சுண்ணாகம்)

**ஐயாத்துரை முருகதாசன்**
(யாழ். போதனா வைத்தியசாலை பரிசாரகர்)
**செ. மகேஸ்வரன்**
(கோப்பாய் வடக்கு)
**செ. சிவராசா**
(வாசிகசாலையடி, உடுப்பிட்டி)
**S. தர்மபாலகிருஷ்ணன்**
(தும்பளை பருத்தித்துறை)
**த. நடேசன்**
(உரும்பராய் தெற்கு, உரும்பராய்)
**க. கிரிதரன்**
(திரு இல்லம், கரவெட்டி)
**வீரையா சிவஞானம்**
(நவக்கிரிமேற்கு, புத்தூர்)
**க.கு. கிருபாகரராசா**
(பிரதானவீதி, ஆவரங்கால்)
**இ. மனோகரன்**
(மனோ லைற், கோப்பாய்)
**சி. நந்தகுமார்**
(வங்கி ஊழியர், உரும்பராய்)
**ச. கனகராசா**
(யாழ்ப்பாணம்)
**சின்னத்தம்பி கிருஷ்ணானந்தன்**
(உமாபதி தொலைத்தொடர்பகம், உரும்பராய்)
**வ.க. சாம்பசிவம்**
(வில்லூன்றி, யாழ்ப்பாணம்)
**சி. அமிர்தசாகரன்**
(அம்பாள் மோட்டோர்ஸ், ஆவரங்கால்)
**தி. பாலசிங்கம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**சி. சுகிர்தலிங்கம்**
(புலோலி கிழக்கு, பருத்தித்துறை)
**T. இரவீந்திரதாஸ்**
(சாமியன் அரசடி, கரவெட்டி)
**சி. குமாரவேல்**
(தலைவர், சுண்ணாகம் ப.நோ.கூ. சங்கம்)
**உரிமையாளர்**
(ஏகாம்பரம் ரெக்ஸ், யாழ்ப்பாணம்)

**க. ஞானச்சந்திரன்**
(நாகலிங்கம்வீதி, கொக்குவில்)
**ஐ. நற்குணநாதன்**
(உடுவில், சுண்ணாகம்)
**இ. ஸ்ரீஸ்கந்தராம்**
(உப தபாலதிபர், உரும்பராய்)
**வே. சந்திரசேகரம்பிள்ளை**
(சிறுப்பிட்டி, நீர்வேலி)
**K. இராமச்சந்திரன்**
(சங்கானை)
**த. இராஜசிங்கம்**
(நீர்வேலி)
**ம. புலேந்திரன்**
(கரணவாய், கரவெட்டி)
**கி. தவராசா**
(காந்தியூர், புலோலி)
**ஐ. சத்தியபாலன்**
(பலாலி வீதி, உரும்பராய்)
**க. இராஜேஸ்வரி**
(சுண்ணாகம்)
**செ. ஸ்ரீனிவாசன்**
(அல்வாய்)
**செல்வி சந்திரலிங்கம் மாதுமை**
(இன்பர்சிட்டி, பருத்தித்துறை)
**சுப்பிரமணியம் சுரேஸ்குமார்**
(மயிலணி வீதி, சுண்ணாகம்)
**க. கணேசதேவா**
(மாதகல்)
**அதிபர்**
(தமிழ்க் கந்தையா வித்தியாலயம், கந்தரோடை)
**வி. செல்வரெத்தினம் J.P**
(அராலிமத்தி, வட்டுக்கோட்டை)
**ஐ. குகேந்திரராணி**
(ஐயனார் கோயிலடி, சுண்ணாகம்)
**N. பாலசுப்பிரமணியம்**
(நீர்வேலி வடக்கு)

**ம. கந்தையா**

(சிவன்கோவிலடி, சாவகச்சேரி)

**க. மகேந்திரன்**

(சங்கத்தானை, சாவகச்சேரி)

**தங்கராசா கலாஜோதி**

(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)

**செல்வி பாலாம்பிகை கந்தசாமி**

(கட்டைவேலி, கரவெட்டி)

**S. தங்கேஸ்வரா**

(காட்டுப்புலம்)

**ம. சிவானந்தம்**

(நாவலர் றோட், யாழ்ப்பாணம்)

**எஸ்.ரி. குமரன்**

(மல்லாகம்)

**பொ. காசிலிங்கம்**

(கொக்குவில்)

**கா. செல்லத்துரை**

(உடுவில், சுண்ணாகம்)

**வீ. புஸ்பநாதன்**

(உரும்பராய் வடக்கு)

**சந்திரசேகரம் மகிந்தன்**

(சிறுப்பிட்டி மேற்கு)

**தர்சினி பகீரதன்**

(உப தபாலதிபர், நீர்வேலி)

**கு. குணரூபன்**

(மீசாலை கிழக்கு)

**வ. ஆறுமுகம்**

(இளை. அதிபர், ஆவரங்கால்)

**கி. வரதராசன்**

(அச்சுவேலி தெற்கு)

**அ. சந்திரகுமாரன்**

(சந்திரகோட்டம், சுழிபுரம்)

**வி. நாகம்மா**

(பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்)

**சர்மிளா இராசலிங்கம்**

(கோப்பாய்)

# விழித்தெழுவோம் சந்ததி காக்க

– **திருமதி பரமேஸ்வரி நடராஜா** அவர்கள் –

போதையிலே சிக்கிச் சீரழியும் சிறார்களுக்கு
வாதை போக்கி வளமான வாழ்வருளும்
பாதை காட்டிப் பக்குவமாய் அழைத்துச்செல்ல
வேதமுதல்வனே விநாயகனே விரைந்தருள் சுரந்திடுவாய்

இன்றைய சிறார்கள் நாளைய மனிதர்கள் போதையில் சிக்கிச் சீரழிந்து சிதைந்து போவது யாவரும் அறிந்த விடயமாகும். இதிலிருந்து இவர்களை மீட்டெடுப்பது பெற்றோர்களதும் பெரியோர்களதும் கடமையாகும். பிரச்சினை எதனால் உண்டாகின்றது என்பதை அறிந்தால்த்தான் அதற்குத் தீர்வு காண முடியும். மனிதனின் உண்மையான இயல்பு (மகிழ்ச்சி) ஆனந்தம் ஆகும். தன் இயல்பை இழந்த நிலையில் தற்காலிக மகிழ்ச்சியை அனுபவிக்கும் நோக்கிலேயே இப் போதைவஸ்துப் பயன்பாடு ஆரம்பமாகி இருக்கின்றது. "கலி" என்றால் அவா, பேராசை என்பது பொருளாகும். கலியுகத்தில் மனிதன் குறுகிய காலத்தில் அதிகமான ஆசைகளை நிறைவேற்றத் துடிக்கின்றான். படிப்படியாக முன்னேறும் எண்ணம் இன்றி நினைத்தவுடன் எல்லாம் கைக்குக் கிட்டவேண்டுமென்ற ஆசையினால் உந்தப்பட்டுப் பணிக்குமேல் பலனை எதிர்பார்ப்பதால் உண்டாகும் மனக்குழப்பமும் விரக்தியுமே இயல்பான ஆனந்தத்தைத் தொலைக்க வைக்கின்றது. அந்த விரக்திக்கு மருந்தாக தற்காலிக மகிழ்ச்சிக்காக இவை பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் இது அறிவை மயக்கி நன்மை தீமைகளைப் பகுத்தறிய முடியாத நிலைக்கு மனிதனைத் தள்ளி விடும். இதனை அருந்துவதால் பழிவாங்கும் பாதகச் செயலைச் செய்வதும் சமுதாய விரோதச் செயல்களைச் செய்து சீரழிந்து பெற்றோர் வயிற்றில் நெருப்பை அள்ளிக் கொட்டி வேதனைக்காளாக்கித் தன்னிலை மறந்து திரிகின்றனர். இது முதலில் தற்காலிகமாக மனத்தை மயக்கி ஓர் ஆனந்த உலகில் சஞ்சரிக்கும் உணர்வைத் தூண்டுதலால் அத் தற்காலிக சுகத்திற்கு ஆசைப்பட்டு இதற்கு அடிமையாகின்றனர்.

இதனால் மூளையும் நரம்பு மண்டலங்களும் பாதிக்கப்படுவதால் சுயமாகச் சிந்திக்கும் ஆற்றலையிழந்து எடுப்பார் கைப்பிள்ளைகளாக வஞ்சகர் வலையில் சிக்கிக் கூலிப் படையாக என்ன செய்கின்றோம், இச் செயலின் பின்விளைவு என்ன? என்று அறியாமல் வஞ்சகர் கைப்பொம்மைகளாகச் செயற்படுகின்றனர்.

இவர்களைத் திசைதிருப்பச் சிவ போதத்தை ஊட்ட வேண்டும். பிள்ளைகள் படித்து அதிக பணம் சம்பாதிக்கும் பதவியில் அமர்ந்து வாகன வசதிகளோடு வசதியான வாழ்க்கை வாழவேண்டுமென்று ஆசைப்படுவது இன்றைய உலகில் பெற்றோரின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. பிள்ளைகளை முதலில் நல்ல பிள்ளைகளாக ஒழுக்க சீலர்களாக வளரச் சிறுவயதிலிருந்தே பழக்க வேண்டும். அத்திவாரம் ஒழுங்காக இருந்தால்த்தான் கட்டிடம் உறுதியாக இருக்கும்.

*ஒருவனது அறிவை அறிந்துகொள்வதற்கு அவனது பேச்சே அளவுகோல்.*

மனிதன் என்ற அத்திவாரம் ஒழுங்காக அமைந்தால் எப்பணியையும் சிறப்பாகச் செய்யலாம். உயர் பதவிகளையும் சிறப் புடன் வகிக்கலாம். கிடைத்ததைக் கொண்டு திருப்தியுடன் வாழலாம். தற்காலத்தில் இவை சாத்தியமின்றி இருப்பதற்குக் காரணம் அவ நம்பிக்கையே ஆகும். மனித அறிவால் சாதிக்க முடியாததை இறையருளால் சாதிக் கலாம். அந்த இறையருளைப் பெற மனிதன் முயற்சிக்க வேண்டும். பிள்ளைகளால் அன் றாடம் அல்லற்படும் பெற்றோரே விழித்து எழுங்கள். இறைவனை அன்புடன் கூவி அழைப்போம். "இறைவா இன்னல் தீர்க்க இரங்கிவா நீ இறங்கிவா" என அன்புடன் அழைப்போம். உலகெங்கும் ஞான ஒளி யாகிய மெய்யறிவைப் பரப்ப வந்த ஞானி களே இறையருளோடு இறங்கி வாருங்கள். போதையால் கொடுவாள் கொண்டு கொடுமை புரியும் கூட்டத்திற்கு ஞானவாள் நல்கி நலம் பெறச் செய்யுங்கள். உலகை அஞ்ஞான இருள் சூழ்ந்துகொண்டது ஞானஒளி பாய்ச்சி நலமளிக்க விரைந்து வாருங்கள். ஞானி களே! முனிவர்களே! மாயப்படையழிக்கும் ஞானவாள் ஏந்தி வாருங்கள் என்று கூவி அழைப்போம்.

அன்புடன் அழைத்தால் இறைவன் இரங்கி இறங்கி வருவான். இன்னல் தீர்ப் பான். கலியுகத்தில் அதிக பணம் செல வழித்து யாகங்கள், வேள்விகள் செய்வதை விட அன்புடன் நாம ஜெபம், பிரார்த்தனை ஆகியவற்றைச் செய்வதால் இறைவனைப் பிரீதி செய்யலாம் என்று சத்திய சாயிபாபா அவர்களும் கூறியிருக்கின்றார். இதற்கு அன்பும் பக்தியும் நம்பிக்கையுமே முக்கியம் ஆகும்.

ஆலகாலமுண்டு நீலகண்டனான சிவ பெருமான் போதையெனும் நஞ்சை அமிர்தம் ஆக்குவான். சிவபோதமளித்துச் சிவக் கொழுந்துகளை உலகுக்கு ஈவான். அன்று பாற்கடலில் விளைந்த நஞ்சைக் கண்டு அஞ்சிய தேவர்கள் யாரிடம் முறையிட்டனர்? யாரால் நஞ்சையுண்டு உலகைக் காக்க முடிந்தது? பெற்றோரே பெரியோரே எண்ணிப் பாருங்கள். "சிவ சிவ" என்று சொல்லித் தீவினையழிப்போம். அன்னையரே தந்தை யரே இளைஞர்களே யுவதிகளே பெரியோர் களே நலம்விரும்பிகளே பிள்ளைகளால் தினம் தினம் செத்துப்பிழைக்கும் அவல நிலையை மாற்றும் மருந்து சிவமே; சிவபோதமேயாகும். சிவனிடம் சென்று முறையிடுவோம். சேர்ந்து வாருங்கள். சிவபுராணம், நமச்சிவாயப் பதி கம், திருநீற்றுப் பதிகம், கோளறு பதிகங் களைத் தினமும் தொடர்ந்து சேர்ந்து ஓதிச் சிவனாரிடம் விண்ணப்பம் செய்வோம். சிலையை உடைக்கலாம், மலையை உடைக்கலாம் இத னால் இறைவன் இல்லாமற் போய்விடுவாரா? இதயத்தில் குடியிருக்கும் இறைவனைக் கொள்ளையடிக்கவோ உடைத்தெறியவோ யாராலும் முடியாது. இன்னலுற்றிருக்கும் இவ்வேளையில் இதயக் கதவைத் திறவுங் கள். இறைவனை உள்ளே நுழைய விடுங் கள். செயற்கரும் செயல்களைச் செய்யலாம். இறைவனை இதயத்தில் குடிவைப்போம். நாளும் பொழுதும் அவனை இறைஞ்சு வோம். இருள் சூழ்ந்த உலகை ஒளியால் நிரப்புவோம். விரைந்து வாருங்கள்; சேர்ந்து வாருங்கள் இருளை நீக்கி இன்பம் சேர்க்க விரைந்து வாருங்கள்.

உலகத்தில் இருள் சூழ யார் கார ணம்? இறைவன் லீலையேயன்றி வேறில்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அன்று ஏன் பிரம்மா சிறையில் அடைக்கப்பட்டார்? உலக உயிர்களைப் படைக்கும் பிதாவான பிரம்மா பிரணவப் பொருளை மறந்ததால் அல்லவா? பிரணவத்தை (பிரம்மத்தை) அறி யாத பெற்றோர்க்குப் பிறக்கும் குழந்தைகள்

*அன்புள்ள மனம் சலனமற்று ஓடும் நதி போன்றது.*

கண்ணில்லாதவர்க்குப் பிறந்த கண்ணில் லாத குழந்தைகளே. உலகில் இருள் சூழ்ந்து இன்னல் விளையும் என்றுதானே கலியுகவரதன் கார்த்திகேயன் பிரம்மனைச் சிறையிலடைக்கும் நாடகத்தை நடத்தினான். ஆதியை அநாதியை மறந்து இடையில் இருளர்களாகி இன்னலுக்காளானோம். தெரியாமற் செய்த பிழை சிவனார் பொறுத்திடுவார். அறியாமற் செய்த பிழை அரனார் பொறுத்திடுவார். நெற்றிக் கண்ணைத் திறந்திடுவார். நேர் வழியைக் காட்டிடுவார். உள்ளத் தூய்மையுடன் எப்பெயர் கொண்டு அழைத்தாலும் இறைவன் இரங்கி வருவார். கருணைக் கடலான கடவுள் அறிவுக் கண்ணைத் திறந்திடுவார். அன்புக் குழந்தைகட்கு நிச்சயம் ஒளிநிறைந்த உலகைக் காட்டுவார். அன்புடன் உள்ளத் தூய்மையுடன் அழைப்போம்.

சிவபோதம் (ஞானபோதம்) அளித்து இன்னல் தீர்த்திட ஞான குருவாய் வருவார். ஞானிகள் புடைசூழ வருவார். திருநீற்றுக் கவசம் அணிவோம். சிவநாமமாம் இறை நாமம் செப்புவோம். விண்ணையும் மண்ணையும் இணைக்கும் பிரம்மத்துக்குப் பிதாவான பரமபிதா அன்பு சொரூபமானவன், சிவமயமான எம் தந்தை ஞான குருவாக வந்து ஞால இருளைப்போக்கி வாழ்வில் ஒளியை நிறைப்பார். பிரபஞ்சப்போர் (அஞ்ஞானிகளுக்கும் மெஞ்ஞானிகளுக்கும்) ஏற்பட்டபோது பேரின்ப உலகைக் கைப்பற்றுவதற்காகத் தொண்டர்களைப் போர்க்கோலம் கொள்ளுமாறு கூறி மாணிக்கவாசகர் தில்லையில் அருளிச் செய்த திருப்படையெழுச்சியைத் தினமும் பாடுவோம்.

**ஞானவாள் ஏந்தும்ஐயர் நாதப்பறை யறைமின்**
**மானமா ஏறும்ஐயர் மதிவெண்குடை கவிமின்**
**ஆன நீற்றுக்கவசம் அடையப் புகுமின்கள்**
**வானவூர் கொள்வோம் நாம் மாயப்படை வாராமே**

**தொண்டர்காள் தூசிசெல்லீர் பக்தர்காள் சூழப்போகீர்**
**ஒண்திறல் யோகிகளே பேரணி உந்தீர்கள்**
**திண்திறல் சித்தர்களே கடைக்கூழை சென்மின்கள்**
**அண்டர் நாடாள்வோம் நாம் அல்லற்படை வாரமே.**

இது கலிவிருத்தம் எனத் திருவாசகத்தில் கூறப்பட்டுள்ளது.

எப்போதும் கோயிலுக்குச் செல்லவும், தொண்டர்கள் அடியார்களுடன் சேர்ந்து பாடவும் எல்லார்க்கும் முடியாதிருக்கலாம். அதனால் இவற்றை வீட்டிலிருந்து படித்தாலும் பலனுண்டு. வீட்டு வேலைகள் செய்யும்போதும், சமைக்கும்போதும் மற்றும் ஓய்வு நேரங்களிலும் எந்நேரமும் திருவருட்பாக்களை ஓதலாம். இறை சிந்தனையில் இருந்துகொண்டு செய்யும் பணிகள் எல்லாம் சிறப்படையும். ஆகவே நேரமில்லையென்ற கவலையைவிட்டு எப்போதும் இறை சிந்தனையிலிருந்து இல்லத்தில் அமைதியை நிலைநாட்டுவோம். இன்றைய நவீன காலத்தில் எவ்விடயத்தைப்பற்றி அறியவிரும்பினாலும் இணையத்தளங்களில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம் என எல்லோரும் கூறுவர். உலகம் முழுவதும் இந்த வலைக்குள்தான் சிக்கிக்கொண்டிருக்கின்றது. உலக அறிவென்னும் வலைக்குள் சிக்கிச் சிக்கலையேற்படுத்தும் மனிதர்களை சிக்கலிலிருந்து விடுவிக்கும் வழியான இறையறிவையும் அந்த வலைக்குள் சேர்த்துவிட்டால் மனிதர்கள் சிக்கலிலிருந்து விடுபடும் அறிவையும் பெற்று விடுதலை பெறுவர்.

"அன்பெனும் வலைக்குள் அகப்படும் மலையே" என்று இராமலிங்க வள்ளலாரும் சிவனைப் பாடியிருக்கின்றார். அறிவுப் பசிகொண்ட உலகம் உலக வலையைப் பின்னி அறிவை விருத்திசெய்ய முனைந்தது. அவ்வறிவால் மனிதன் தன்னை மறந்து, சமயத்தை மறந்துவிட்டதால் அமைதி குலைந்து அல்லல் விளைந்து ஆனந்தம்

*அன்பும் இரக்கமும் இரட்டைக் குழந்தைகள்.*

அழிந்தது. இழந்த அமைதியை மீண்டும் நிலைநாட்ட அந்த அன்பெனும் வலைக்குள் இறைவனைச் சிக்க வைத்தால் அமைதியும் ஆனந்தமும் சமாதானமும் ஒவ்வொரு சீவனுக்கும் நிச்சயம் கிடைக்கும். இந்த அமைதியும் ஆனந்தமும் நிரந்தரமானது; நித்தியமானது. இதை அடைந்தபின் தேடுவதற்கு ஏதுமில்லை. இறையறிவு நிறையறிவு. மனிதன் தான் யாரென்பதை அறிந்துகொண்டால் பின் அமைதியுண்டாகும். அந்த இறையருளால் அவனே எல்லாவற்றையும் வேண்டியபோது வேண்டியவாறு அறிந்துகொள்வான்.

அ+உ+ம்= 1

"அ" அவன் "உ" உலகம் "ம்" முடிந்த முடிவு. அவனாகிய (சிவனாகிய) இறைவனும் உமையாகிய உலகமும் ஒன்று என்பதே முடிந்த முடிவாகும். உலகிலுள்ள இயங்கும், இயங்காத எல்லாவற்றிலும் இறைவன் உள்நின்று ஒளிர்கின்றான். இறைவன் தோற்றப்படாத உயிராயிருக்கின்றான். உமையாகிய அன்னை அவ்வுயிர்களைத் தோற்றுவிக்கும் தாயாக அகிலத்துக்கும் தாயாக இருந்து உலக நடைமுறையை வேதத்தின்மூலம் அறிவிக்கும் வேதமாதாவாக இருந்து உலகை ஒழுங்காக இயங்க வைக்கும் சக்தியாக விளங்குகின்றாள். இயற்கை விதியான வேதத்தைப் புறக்கணித்து மனித அறிவால் எதையும் சாதிக்கலாம் என மனிதன் அகங்காரம் கொண்டெழுந்தான். அன்னை தன் மாயா சக்தியால் உலகை விழுங்கிவிட்டாள். உலகம் இருளால் சூழப்பட்டுவிட்டது. இந்த மாயத் திரையை விலக்கி உலகுக்கு ஒளியை ஊட்ட அந்த மாதேவனே அருள்சுரக்க வேண்டும். இறைவன் அன்புமயமானவன். அன்பில்லா அறிவு வரட்டு வேதாந்தமாகும். உலகை வெறுத்து இறையருளைப் பெற முடியாது. அதேவேளை உலக ஆசையாகிய மாயைக்குள் சிக்கினாலும் இறையருளைப் பெறமுடியாது. உலகில் ஒவ்வோர் அணுவிலும் இறைவன் ஊடுருவியுள்ளான். எல்லாச் செயலும் அவன் செயலே என அறிந்தபின் துன்பமில்லைத் துயரமில்லை. ஆனந்தமே மிஞ்சும். ஆகவே சிவமயமான (அன்புமயமான) உலகைக் காண அன்பெனும் வலைக்குள் இறைவனைச் சிக்க வைப்போம். இறை அறிவே மெய்யறிவு. இதையறிந்தே விநாயகரும் அம்மையப்பனைச் சுற்றி வந்து உலகைச் சுற்றியதாக நிறுவினார். அவருக்கே ஞானப்பழமாகிய மாங்கனி முதலில் கிடைத்தது. முருகனோ உலகம் முழுமையும் சுற்றி வந்து எங்கும் தானே உள்ளதை அறிந்து தானே அந்த ஞானப்பழம் என்பதை நிரூபித்தார். முருகனுக்கும் அவ்வறிவை அம்மை அப்பனே ஔவையார் வடிவில் வந்து உபதேசித்தார். அன்னையும் தந்தையும் பிரிக்க முடியாத ஒன்று. அதேபோல் அன்பும் அறிவும் பிரிக்கமுடியாத ஒன்று. இறைவனும் உலகமும் பிரிக்கமுடியாத ஒன்று. இறைவனின்றி உலகமில்லை. உலகமின்றி இறைவனை அடைய முடியாது. அறிய முடியாது.

**அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன்**
**முதற்றே உலகு**

எழுத்துகட்கெல்லாம் எப்படி "அ" முதலாக விளங்குகின்றதோ அதேபோல உலகின் மூலசக்தியாகிய அன்பு எனும் அமிர்தமே பிரம்மம் ஆகும். பிரம்மம் எனும் அன்பில் இருந்து தோன்றிய உலகை ஆளும் ஆதிமுதல்வனே அன்பால் உலகையாளும் இறைவன். அன்பும் சிவமும் ஒத்தசொல் ஆதலால் இறைவன் "சிவன்" எனவும் இறைவி "சிவை" (சிவமாகிய வையம்) எனவும் அழைக்கப்படுகின்றனர். பிரம்மத்துக்குப் பிதாவாக (தந்தையாக) விளங்குவதால் இறைவன் பரமபிதா என்றும் அழைக்கப்படுகின்றார். இது மூலநாமம் ஆகும். காலத்திற்குக்

*உங்களைப்பற்றி நீங்கள் கொண்டுள்ள நம்பிக்கையே வெற்றி தரும்.*

காலம் உலகில் தர்மத்தை நிலைநாட்ட அவதாரமெடுத்து (மனித உருவெடுத்து இறங்கி) வரும்போது அந்தந்தக் காரண காரியத்திற்காக ஏற்றுக்கொண்ட நாமங்கள் பல. இதனால் இறைவன் ஒருருவம் இல்லாத வன் என்றும் எல்லா உருவமும் ஆனவன் என்றும் அழைக்கப்படுகின்றான். உருவமற்றது உருவமாகி வரும்போது அவதாரமாகின்றது. காலத்துக்குக் காலம் இறைவனை மறந்து மாயாசக்தியால் மாய உலகை உண்டாக்கி அதற்குத் தானே கர்த்தாவென்றும் கொக்கரித் துக்கொண்டு நல்லவர்களையும் நன்னெறி களையும் அழிக்க முற்படும் அசுர சக்தியை அழிக்கவே அவதாரம் எடுக்கும் அவசியம் இறைவனுக்கு ஏற்படுகின்றது. ஆகவே அன புடன் அழைப்போம். ஆதி மூலமாகிய சிவம் எம்மைக் காக்க நன்னெறியில் உய்ய வைக்க இறங்கிவரும். அன்புடன் அழைப்போம். அவன் சொற்படி நடப்போம். அழிவிலிருந்து துயரில் இருந்து அறியாமையிலிருந்து உலகைக் காப்பாற்றி ஆனந்த வாழ்வு வாழ்வோம்.

நம்பினோர் கெடுவதில்லை
நான்கு மறைத் தீர்ப்பதுவே.

## புத்தாண்டே வருக!

எல்லோரும் இன்புற்றிருந்திடவே வேணுமெனும்
எண்ணமிலார், தாம் வாழப் பிறரை இங்கு
பல்வேறு வழிகளிலும் தாழ்த்த நினைத்திடுவார்!
பாவச் செயல்களினால் பலர் வாழ்வைக் கெடுத்திடுவார்!
பொல்லாத் தனங்களினால் பொது வாழ்வைச் சிதைக்குமிந்த
பொறுப்பற்றோர் திருந்திடவும், பொதுப் பணிகள் செய்திடவும்
நல் வழிகள் காட்டிடவா! நற்றமிழர் புத்தாண்டே!
நாமுன்னை வாழ்த்தி, வணங்கி வரவேற்றிடவே!

எங்கள் கலாசார விழுமியங்களை மறந்து,
ஏற்றத் தாழ்வுகளை எங்கட்குள்ளே வளர்த்து,
பங்கமுற்று வேறுவேறு பாதைகளிலே சென்று,
பரிதவித்து நிற்கின்ற நிலைமைகளினை மாற்றி,
இங்கொன்றுபட்டு நாம் வாழும் அந்த
இன்ப நிலை உருவாக வழிகள் செய்தே,
மங்களங்கள் பொங்கிடவா புதிய ஆண்டே!
மகிழ்ந்துன்னை வரவேற்க வருவாய் நீயே!

நித்தம் மதுபோதையில் தம் நிலைமறந்து திரிவோரும்,
நெஞ்சில் வஞ்சகம் கொண்ட நேர்மையிலா மானிடரும்
உத்தமர்போல் வேடமிட்டு ஊழல்கள் செய்பவரும்,
உள்ளளவும் பொய்பேசி, கொலை, களவு செய்பவரும்
இத்தரையில் இன, மத, மொழி பேதங்களை வளர்த்து
இயல்பு நிலை கெடுப்பவரும் திருந்தி வாழ
புத்தாண்டே நீவருக! புது வழிகளைக் காட்டி!
பொல்லாதார் கொடுமைகளை புறந்தள்ளியே ஓட்டி!

-கி. குலசேகரன்-

நம்பிக்கை மட்டும் இருந்தால் போதாது. சிந்திக்கவும் தெரியவேண்டும்.

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பத்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்க நூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

### 08. ஆனந்தத்தழுந்தல்

**இறைவனது பேரின்பத்தில் முழுகி நிற்றல்**

**எழுசீர்க் கழி நெடிலடி யாசிரிய விருத்தம்**

81 எய்த லாவ தென்று நின்னை யெம்பி ரானிவ் வஞ்சனேற்
குய்த லாவ துன்க ணன்றி மற்றொ ருண்மை யின்மையின்
பைத லாவ தென்று பாது காத்தி ரங்கு பாவியேற்
கீத லாது நின்கண் ஒன்றும் வண்ணம் இல்லை யீசனே.

**ப-ரை:**

எம்பிரான்- எங்கள் தலைவனே; நின்னை எய்த லாவது என்று- யான் நின்னை அடைந்து ஒன்றுவது எப்போது? இவ் வஞ்சனேற்கு- இவ்வஞ்சகனாகிய எனக்கு; உய்தல் ஆவது உன்கண் அன்றி மற்று ஓர் உண்மை இன்மை- அடியேனுக்கு உய்தி கூடுதல் உன்னிடத்தன்றி பிறிதொரு பொருளிடத்து உளதாந் தன்மை இன்மையின்; பைதல் ஆவது என்று பாதுகாத்து இரங்கு- நின்னை எய்தாமையால் துன்பம் எனக்கு உண்டாகின்றது என்று திருவுள்ளம் கொண்டு இரங்கிப் பாதுகாத்தருள்வாயாக; ஈசனே- முத்திச் செல்வத்தை யுடையவனே; பாவியேற்கு ஈது அலாது நின்கண் ஒன்றும் வண்ணம் இல்லை- நின்னை அடையப்பெறாத தன்மையுடையேனுக்கு நீ இரங்கியருளுகின்ற இதுவேயல்லாமல் நின் திருவடிக்கண் இயையும் வழி பிறிதில்லை.

எம்பிரானே, நின்னை அடைந்து ஒன்றுவது எப்போது? இவ்வஞ்சனேற்கு உய்தலாவது உன்னிடத்தன்றிப் பிறிதொரு பொருளிடத்து உளதாந்தன்மையின்மையின் நின்னை எய்தாமையால் எனக்குத் துன்பம் உண்டாகின்றது என்று திருவுள்ளம் கொண்டு இரங்கிப் பாதுகாத்தருள்க. ஈசனே! பாவியேற்கு நீ இரங்கி யருளுகின்ற இதுவேயல்லாமல் நின் திருவடிக்கண் இயையும் வழி பிறிதில்லை என்பதாம்.

எய்தல்- அல்லீற்றுத் தொழிற்பெயர், என்று- எப்போது திருவருட்காட்சி நீங்கப்பெற்று அதனாற் பெரிதும் இடருறும் அடிகள் அவ்விடர் நீங்கும் பொருட்டு நின்னை எய்தலாவது என்று என வினவுவாராயினர்.

உயிர்க்கு உறுதி அளித்து உய்விக்கும் தன்மை இறைவனிடத்தன்றிப் பிறிதொரு பொருட்கண் உளதாந்தன்மை இன்மையின் "உய்தலாவதுன் கண்ணன்றி மற்றொரு உண்மை யின்மையின்" என்று அருளிச் செய்வாராயினர்.

*எதற்கும் தயாராக இருப்பவனை நோக்கித்தான் வாய்ப்புக்கள் வந்து குவியும்.*

"முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு, பந்தித்து நின்ற பழவினை
தீர்ப்பன .....ஐயாற னடித்தலமே"

நாவு 92:1.

"இழித்தனவே ழேழ் பிறப்பு மறுத்தன் .....ஐயாறனடித் தலமே"

92:2.

"கொடு நரகக் குழி நின்றருடரு கைக் கொடுத்தேற்று
மையாறனடித் தலமே"

நாவு 42:4.

"துன்பக் கடலிடைத்...
இன்பக் கரை முகந் தேற்றுந் திறத்தன ....ஐயாறனடித் தலமே"

நாவு 92:6.

"வாராவுலக மருள வல்லாய் நீயே" நாவு 251:9.

எனத் தேவாரத்து வருவனவுங் காண்க. உண்மை- உளதாந் தன்மை. மற்றொர் என்றது பிறிதொரு பொருளை உணர்த்தியது. அதனை அஃறிணையாற் கூறியது இறை உயிர் உலகு என்னும் முப்பொருள்களுள் இறைவனே உயிர்களுக்கு உய்தி அருள்பவனன்றி உலகமல்லாமையின்,

பைதல்- துன்பம். என்று- என்று கருதி இன்மைபைதல் உண்டாவதற்கு ஏது. பாதுகாத்து இரங்கு என்பதற்கு இரங்கிப் பாதுகாத்தருள்க எனப் பொருளுரைக்க. பாவி- பாவமுடையவன். பாவம்- தன்மை. அஃது இறைவனால் ஆட்கொள்ளப்பட்டும் பின்னர் அவனைப் பிரிந்து எய்த முடியாதிருக்கும் தன்மை. பாவியேற்கு- தீவினையேற்கு எனினுமாம்.

ஈது என்றது இறைவன் இரங்கியருளுதலைச் சுட்டியது; வீட்டின்பப்பேற்றிற்கு இரங்கியருளுதலே சிறந்த ஏதுவாமாகலின் "ஈதலாது நின்கண் ஒன்றும் வண்ணம் இல்லையே" என்றார். ஒன்றுதல்- இறைவனோடு அத்துவிதமாகக் கலத்தல்.

இதன்கண், எய்தலாவது என்று? என்றும், பைதலாவதென்று பாதுகாத்திரங்கு என்றும் வேண்டிக் கொள்ளுதலால் ஆனந்தத் தழுந்தும் ஆர்வமுடைமை பெறப்படுதலின் ஆனந்தத்தழுந்தல் என்னும் எட்டாம்பத்து நுதலியபொருள் போதருதல் காண்க. 77.

**82 ஈசனே நீ யல்ல தில்லை யிங்கும் அங்கும் என்பதும்**
**பேசி னேனொர் பேதமின்மை பேதை யேனென் எம்பிரான்**
**நீச னேனை யாண்டு கொண்ட நின்ம லாவொர் நின்னலால்**
**தேச னேயொர் தேவ ருண்மை சிந்தி யாது சிந்தையே.**

**ப-ரை:**

ஈசனே- முத்திச் செல்வத்தையுடையவனே; இங்கும் அங்கும் நீ அல்லது இல்லை என்பதும்- இகத்திலும், பரத்திலும் துணையான பரம்பொருள் நீ அல்லாமல் பிறிதொரு பொருள் இல்லை என்பதையும், பேதம் இன்மை- உயிர் வேறுபாடின்றி அத்துவிதமடை தலாகிய வீட்டின் இயல்பையும்; ஓர் பேதையேன் பேசினேன்- ஒன்றற்கும் பற்றாத அறிவிலியாகிய யான் எடுத்துரைத்தேன்; என் எம்பிரான்- எனக்குச் சிறப்புரிமையுடைய

*விடாமுயற்சியைத் தொடர்ந்து செய்வதே மேதைத் தனம்.*

எங்கள் தலைவனே; நீசனேனை ஆண்டுகொண்ட நின்மலா- கீழ்மையுடையவனாகிய என்னை ஆட்கொண்டருளிய தூயோனே, தேசனே- ஞானாசாரியனே; ஓர் நின் அல்லால்- ஒப்பற்ற நின்னையல்லாமல் ஓர் தேவர் உண்மை சிந்தை சிந்தியாது- பிறிதொரு தெய்வம் உண்டு என்பதை என் மனம் நினையாது; ஆதலின் நின்னோடொன்றுமாறு அருள்செய்ய வேண்டும்.

ஈசனே இகத்திலும் பரத்திலும் துணையான பரம்பொருள் நீயேயல்லாமல் பிறிதொரு பொருள் இல்லை என்பதையும்; உயிர் வேறுபாடின்றி அத்துவிதமடைதலாகிய வீட்டின் இயல்பையும் ஒன்றுக்கும் பற்றாத அறிவிலியாகிய யான் பேசினேன்; என்பிரானே! நீசனாகிய என்னை ஆண்டுகொண்ட நின்மலா தேசனே ஒப்பற்ற நின்னையல்லாமல் பிறிதொரு தெய்வம் உண்டு என்பதை என்மனம் நினையாது; ஆதலால் நின்னோடொன்றுமாறு அருள் செய்ய வேண்டும் என்பதாம்.

நீ யல்லது இல்லை என்றது நீயேயல்லாமல் பிறிதொரு பொருள் இல்லை என்றவாறு. ஈசனே என்று விளித்தமையால் இல்லை என்பதற்கு நின்போல் ஈசத்துவமுடைய பிறிதொரு பொருள் இல்லை எனக் கொள்க. இங்கும் அங்கும்- இகபரம் இரண்டினும், இம்மை மறுமை இரண்டினும் எனினுமாம். இங்கும் அங்கும் துணையாவார் இறைவனே என்பது.

"இகபரமுமாம் பேராளன்" ஞான 184:3.

"துஞ்சும் போதும் துணையென லாகுமே" நாவு 153:10.

எனத் தேவாரத்து வருவனவற்றாலுமறிக.

ஓர் பேதமின்மை என்றது முத்திநிலைக்கண் உயிர் இறைவனொடு பிரிவின்றி அத்துவிதமாய் நிற்கும் நிலையை உணர்த்தியது. பேதமின்மையென்பதன்கண் உம்மை விரித்துரைக்க. ஓர் பேதையேன் பேசினேன் என்றது, ஒன்றுக்கும் பற்றாத அறிவிலியாகிய யான் பேரறிஞன் போல நின்னியல்பினையும் நீ அருளும் வீட்டின் இயல்பினையும் எடுத்துரைத்தேன்; அதனைப் பொறுத்தருள்க என்றவாறு. என் எம்பிரான்- எனக்குச் சிறப்புரிமையுடைய எங்கள் தலைவன். நின்கழலிணையலாதினேன் என் எம்பிரான்" (சத 72) என வருதலும் காண்க.

மெய்யன்பும் பக்குவ முதிர்ச்சியுமாகிய உயர்வு நன்குடைய அடிகள் தம்மைத் தாழ்த்திக் கூறும் இயல்புபற்றி "நீசனேனை" என்றார். "யாதுமொன்றலல்லாப் பொல்லா நாயான நீசனேனை ஆண்டாய்க்கு" (சத 51) என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க. நின்மலன் அழுக்கற்றவன்; என்றது இயல்பாகவே பாசங்களினின்று நீங்கினவன் என்றவாறு. ஓர் இரண்டனுள் முன்னது ஒப்பற்ற என்னும் பொருளிலும் பின்னது ஒரு என்னும் பொருளிலும் நின்றன. தேசன்- ஒளிவடிவினன்.

எப்பொழுதும் இறைவனைச் சிந்தித்த பயிற்சி வயத்ததான அடிகள் சிந்தை இறைவனையன்றிப் பிறிதொரு தெய்வமுண்மையைச் சிந்தியாமையின் "நின்னலால் ஓர் தேவருண்மை சிந்தியாது சிந்தையே" எனச் சிந்தித்தலைச் சிந்தையின் செயலாக அருளிச் செய்தனர். "நற்றவாவுனை நான் மறக்கினுஞ் சொல்லுநா நமச்சிவாயவே" தே 48:1 எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியவாறுங் காண்க. அடிகள் பிற தெய்வத்தைச் சிந்தியாமை "உள்ளேன் பிற தெய்வ முன்னையல்லா தெங்கள் உத்தமனே (சத 2) என்பதனாலுமறிக.

*உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமையெல்லாம் கிடைக்கிறது.*

"நச்சே னொருவரை நானுமையல்லால் நாட்டியத்தான் குடி நம்பீ" (தே 15:2) "எந்தாய் நின்னையல்லா லினியாரை நினைக்கேனே" (தே 24:7) எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியமையுங் காண்க. சிந்தை சிந்தியாது- மனஞ் சிந்தியாது, நின்னோடொன்றுமாறு அருள்செய்ய வேண்டுமென்பது குறிப்பெச்சம்.

இதன்கண், நீசனேனை யாண்டு கொண்ட நின்மலா, தேசனே என் சிந்தை நின்னல்லால் ஓர் தேவருண்மை சிந்தியாது. ஆதலால் இரங்கி நின்னை ஒன்றும் வண்ணம் அருள் செய்ய வேண்டும் என்பது பெறப்படுதலின், ஆனந்தத்தழுந்தல் என்னும் எட்டாம்பத்து நுதலிய பொருள் போதருதல் காண்க. 78.

(தொடரும்...

## ஓங்காரப் பொருள் விளங்க ஒருமுறை சொல்லிப் பார்

சந்தனம் மணக்குது
கற்பூரம் யொலிக்குது
சந்நிதியான் வாசலிலே
தினம் தினம் நடக்குது.

பன்னிரு திருவிழியால்
பக்தரைப் பார்த்து விட்டால்
பறந்தோடும் துன்பமெல்லாம்
பக்தர் கூட்டம் அலைமோதும்.

புழுதிமணல் நடக்கையிலே
பட்ட துன்பம் தான் விலகும்
புண்ணியங்கள் சேர்ந்துவிடும்
புகழும் உன்னைத் தான் தொடரும்.

வங்கக் கடல் தான் குளித்து
எடுக்கும் முத்து எல்லாமே
கந்தனவன் கிரீடத்திலே
வைத்து பார்க்க மனமகிழும்.

மயிலேறி வந்திடுவான்
மனம் மகிழத் தந்திடுவான்
கைலைநாதன் புத்திரனாய்
காட்சி தந்து வரங்கொடுப்பான்.

முருகா எனும் நாமம் தான்
முத்தியைத் தந்துவிடும்
ஒருமுறை சொல்லிப்பார்
ஓங்காரப் பொருள் விளங்கும்.

-பொ. பாலேஸ்வரன்-

வெறுப்பது யாராக இருந்தாலும் நேசிப்பது நாமாக இருப்போம்.

# சித்திரா பூரணை

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

ஆண்டுதோறும் சித்திரை மாதத்தில் வருகின்ற பூரணையைச் சித்திரா பூரணை, சித்திரா பௌர்ணமி, சித்திரைப் பறுவம் என அழைப்பர். சந்திரன் முழுமதியாக, முழு நிலவாகப், பதினாறு கலைகளும் பொருந் தியதாக; வானில் பொங்கியெழும் அழகுக் காட்சியை அன்றைய தினம், இரவு முழு வதும் கண்டுகளிக்கலாம்.

பூரணை என்றால், முழுமை என்று பொருள் கொள்வர். மற்றைய நாட்களில், கலைகள் குறைந்து, பிறைச் சந்திரனாக, வானில் காட்சிதரும் சந்திரன்; பூரணையன்று பூரணச் சந்திரனாகப் பொலிவுற்றிருக்கக் காணலாம்.

மாதந்தோறும் வருகின்ற பூரணை களிலும்; சித்திரைமாதப் பூரணை; மகிமை யும், மகத்துவமும் மிக்கதாகச் சைவ சமயி களால் கொள்ளப்பட்டு வருகிறது. பூரணை நாட்களில் விரதமிருந்து, பிதுர் வழிபாடு மற்றும் தெய்வ வழிபாடு செய்தல் சைவ சமயிகளின் மரபு ஆகும். பூரணைத் தினங் களில் பொங்கு கடலிலோ, புனித தீர்த்தங் களிலோ நீராடி; இறை வழிபாடு; பிதுர் வழிபாடு, மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை கள் ஆகியவற்றில் ஈடுபடுதல்; தான தருமங் கள் செய்தல் என்பன சைவ சமயிகளின் ஆன்மீகக் கடமைகள் ஆகும். அவ்வாறு செய்து வருவதினால்; இம்மை வாழ்வு வள மும் நலமும் பெற்று இனியதாக அமையும்.

தென்புலத்தார் என்றால் பிதுர்கள்; இறந்த நம் முன்னோர்கள் என்பது ஐதீகம்.

**"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு**
**ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"** -திருக்குறள்.

இல்வாழ்வான் என்பான்; தென்புலத் தார், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்னும் ஐந்து தரப்பினரையும் காத்து, ஓம்பிவருதல் கடமையாகும். தென்புலத்தார் வழிபாடு பற்றித் திருவள்ளுவர் கூறியிருப் பதை நாம் சிரமேற்கொண்டு ஓம்பி வந்தால் ஒரு தீங்கும் நேர்ந்துவிடாது. வாழ்வில் அமைதி கிடைக்கும்.

மாதந்தோறும் வருகின்ற அமாவாசை, பூரணை தினங்கள்; பிதுர் வழிபாட்டிற்குரிய புண்ணியநாட்கள். எம்மைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய தாய் தந்தையருக்கு, அவர்கள் இறந்தபின், அவர்களின் ஆத்மசாந்திக்கு விரதம் இருந்து பிரார்த்தனை செய்வது, நம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமை யும் கடப்பாடும் ஆகும். அவ்வாறு செய்யாத வர்கள் தாய், தந்தைக்குச் செய்யும் கடமை யிலிருந்து தவறியவர்கள் ஆவர்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்னும் ஔவை வாக்கினை நாம் மறத்தலாகாது. தாயை இழந்தவர்கள், மாதந்தோறும் தவறாது பூரணை நாளில் விர தம் இருந்து தாயாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்யவேண்டியது பிள்ளை களின் தலையாய கடன் ஆகும். அவ்வாறே, தந்தையை இழந்தவர்கள் மாதந்தோறும் அமாவாசை விரதம் அநுட்டித்தல் கடமை ஆகும்.

தற்காலத்தில், பிதுர்க் கடன்களை நிறைவேற்றப் பெரும்பாலான சைவ மக்கள் தவறி வருகின்றார்கள். தாய், தந்தையர் வயோ திபப் பருவத்தில் வாழும்போது உரிய கடமை களைச் செய்யாது விடுதலும்; அவர்கள் இறந்தபின் பிதிர்க்கடன்களைச் செய்யத் தவறுபவர்களும் பிதுர் சாபத்திற்குள்ளாவர். அதனால் அவமிருத்துக்களையும், கஷ்ட நஷ்டங்களையும்; இழப்புக்கள், துன்பம்

துயர்களையும் சந்திக்க நேரிடுகிறது. தென் புலத்தார் வழிபாட்டில் சித்திரைப் பூரணையில் விரதமிருந்து, தாயாருக்குச் செய்யவேண்டிய கடமையை நிறைவேற்றுதல் மிக இன்றி யமையாதது. அவ்வாறே, ஆடி அமாவாசை அன்று; காலமாகிவிட்ட தந்தைக்குப் பிதுர் கடமையை நிறைவேற்றுதல் மிக முக்கியம் வாய்ந்தது. தவறினால் பிதுர் சாபத்துக்குள் ளாகி அல்லற்பட நேரிடும்.-

இப்புண்ணிய தினங்களில் புண்ணிய தீர்த்தங்களில் நீராடி; ஆசாரசீலர்களாய், பிதுர்தர்ப்பணம் செய்தும்; பிண்டதானம், எள்ளுந் தண்ணீரும் இறைத்தல், சிராத்தம் என்பவற்றைச் செய்தும்; இறைவனை வழி பட்டும்; அந்தணர்களுக்குத் தானமும்; விருந் தினர், உறவினர், ஏழைகள் மற்றும் ஆதர வற்றோர் ஆகியோருக்கு உணவு அளித்தும்; விரதத்தை நிறைவேற்றுவர்.

மனிதர்கள் தாம் வாழுங் காலத்தில் குற்றங்களைக் குற்றம் என்று தெரிந்தும் செய்கின்றனர்; தெரியாமலும் செய்கின்றனர். தெரிந்துகொண்டு குற்றங்களைச் செய்தால்; அவை புத்திபூர்வமாகச் செய்யப்படும் தீவினை கள் ஆகும். அவற்றைச் செய்தவர், அவற் றின் தீய பலன்களை அனுபவித்தே தீர்த் தாக வேண்டும். தெரியாமல் செய்யப்படும் குற்றங்களுக்குப் பிராயச்சித்தம் உண்டு. அபுத்திபூர்வமாகச் செய்யப்பட்ட இத்தகைய குற்றங்கள், அவர் இறந்தபின்; பிள்ளை களால் செய்யப்படுகின்ற அபரக்கிரியை களான தகனக்கிரியை, அந்தியேட்டி, சபிண்டீ கரணம், மாசிகம், சிராத்தம் (திவசம்), மஹா ளயம் மற்றும் அமாவாசை, பூரணை விரதங் கள் ஆகியவற்றின்மூலம் அகற்றப்பட்டு விடு கின்றன எனச் சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. அவர்களின் உயிர்கள் ஆன்ம ஈடேற்றம் பெறு கின்றன. அவர்களின் ஆசிகள் பிள்ளைகளுக் குப் பெரு நன்மைகளை அளிக்கின்றன.

**"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை**
**என்னோற்றான் கொல் எனுஞ் சொல்"**

-திருக்குறள்.

மகன் தன் தந்தை, தாய் ஆகியோருக் குச் செய்யத்தக்க கைம்மாறு "இவன் தந்தை, தாய் இவனை மகனாகப் பெற, என்ன தவம் செய்தார்களோ" எனப் பிறர் புகழ்ந்து சொல்லும் வார்த்தைகளாகும். இதுவே இக்குறள் தரும் செய்தியாகும்.

**"மைந்தனைப் பெறுகின்றது மாசிலாப்**
**புந்தியன்பொடு போற்றி வளர்ப்பதுந்**
**தந்தை மாண்டுழித் தம்முறைக் கேற்றிட**
**வந்தமில் கடனாற்றுதற் கேயன்றே"**

மைந்தனைப் பெற்று, வளர்த்து, சிறந்த கல்வியளித்து; அவையத்து முந்தி இருக்கவும், அனைவரினது மதிப்பையும் மரி யாதையையும் பெறச் செய்வதற்கு தந்தை, தாயார் இருவரும் எடுக்கும் இடையறா முயற் சிக்கு என்ன காரணம்? ஆம்! காரணமுண்டு. தந்தை, தாயார் இறந்தபின், முறைப்படி செய்யவேண்டிய பிதிர்க்கடன்களை நிறை வேற்றுவதற்கும்; பின்னர் ஆண்டுதோறும், பெற்றோரை நோக்கி அவர்கள் இறந்த திதி களில் சிராத்தம் செய்வதற்கும்; அவற்றின் பயனாகத் தாம் நரகத்தில் வீழ்ந்து வேதனை களை அநுபவிக்காது காப்பாற்றப்படுவதற் குமே என்பதை அனைவரும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

மேலும்; அமாவாசை, பூரணைத் தினங் களில் விரதம் அநுட்டித்து ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளில் ஈடுபடுவதன்மூலம்; கால மான பெற்றோர்களின் பழவினைகள் நீங்கப் பெற்று அவர்களின் உயிர்கள் சாந்தி, முத்திப்பேறு ஆகியவற்றை அடைவதற்கும்; தம் புத்திரர்களின் அர்ப்பணிப்புடனான, சிரத்தை பூர்வமான உதவி தேவை என்பதற்கேயாகும்.

"புத்" எனும் கொடிய நரகத்தில் வீழ்ந்து வேதனைப்படாது; பெற்றோரைக்

*புத்தகங்கள் மனிதப் பிறவிகள் அல்ல, ஆயினும் நீண்ட ஆயுளைப் பெற்றிருக்கின்றன.*

காப்பாற்றுவதால், மகன்; புத்திரன் எனவும்; மகள், புத்திரி எனவும் அழைக்கப்படுகிறார்கள்.

பிதிர்களின் ஆசிகள் நமக்குக் தேவை என்பதை நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண் டும். அவற்றினால் எமது வாழ்வு ஒளிபெறும். ஆபத்துக்கள், அகால மரணங்கள், அவமிருத் துக்கள், கொடிய நோய்கள், கெட்ட தேவதை கள், பேய் பிசாசுகளின் தாக்கங்கள் என்பவற்றிலிருந்து நாம் காப்பாற்றப்படுவோம்.

**சித்திரகுப்த விரதம்:**

சித்திரை மாதம், சித்திரை நட்சத் திரம், பூரணை மூன்றும் கூடிய புனித நாளில் சித்திரகுப்த விரதம் அனுட்டிக்கப்படுகிறது. யார் இந்தச் சித்திரகுப்தர் என்ற விடயம் இன்று பலருக்குத் தெரியாது.

சித்திரகுப்தர்; நீதி தேவனாகிய இயம தர்மராஜனின் கணக்காளர் ஆவார். மனிதர் களின் காலப்பதிவுகளைப் பேணிவருபவரும், உயிர்களின் ஆயுட்காலம் முடிவுற்றதும், நடுவு நிலைமை நின்று, இயமதர்மராஜனுக்கு, அது சம்பந்தமாக அறிக்கை சமர்ப்பிப்பவரும், இந்தச் சித்திரகுப்தரேயாவர்.

சித்திரபுத்திரன்; இந்திரனுக்கும், இந்திராணிக்கும் சித்திரை மாதத்துச் சித் திரை நட்சத்திரத்தில் பிறந்ததாகப் புராண வரலாறு கூறுகின்றது. ஆண்டுதோறும் சித் திரை மாதத்துச் சித்திரை நட்சத்திரத்தன்று, அவரை நினைவு கூருமுகமாக; சித்திரகுப்த விரதம் அமைகின்றது. சித்திரைக் கஞ்சி, அன்னதானம், சித்திரகுப்தர் கதை படித்தல் என்பன இப்புண்ணிய தினத்தில் இடம்பெறும் சிறப்பு நிகழ்ச்சிகளாகும்.

முன்னைய காலங்களில், யாழ்ப்பாணத் தில் ஊர்கள்தோறும், சித்திராபூரணையன்று மாலையில், கோயில்களிலோ, பொது இடங் களிலோ, மடங்களிலோ மக்கள் ஒன்றுகூடி; சித்திரகுப்தரின் கதை, பாடல்களை ஒருவர் பாட; மற்றையோர் பக்தி சிரத்தையுடன் கேட் டுக்கொண்டிருப்பர். சித்திரகுப்தருக்குப் பூசை வழிபாடு செய்வர். பாற்கஞ்சி காய்ச்சி யாவரும் அருந்தி மகிழ்வர். இவ்வாறு, சித்திரகுப்தர் வழிபாடு செய்து, விரதம் அனுட்டிப்பதால் நீண்ட ஆயுளைப் பெறுவர் என்ற நம்பிக்கை வீண்போவதில்லை. மருத்துவ வசதிகள் இல் லாத அந்தக் காலத்தில், இத்தகைய தெய்வ நம்பிக்கைதான், மக்களை நோய் நொடிகளின் தாக்கமின்றி அவர்களை நீண்டகாலம் உயிர் வாழ உதவியது. "நம்பினார் கெடுவதில்லை" இது நான்கு மறைத் தீர்ப்பு.

சித்திரை மாதம்; புதுவருடத்தின் முதல் மாதம்; அத்துடன் இளவேனில் தொடங் கும் காலம், அறுவடைக்குப் பின் உண்டு மகிழ்ந்து ஓய்வெடுக்கும் காலம். வசந்த காலத்தின் இயற்கை அழகினை வெளிப்படுத் தும் காலம்; மகிழ்ச்சியுடன் வாழுங்காலம். பண்டைத்தமிழ் மக்கள் இந்திரவிழாவெடுத்து, ஆடிப்பாடி மகிழ்வதற்கு சித்திரைப் பூரணை யையே தெரிந்து எடுத்திருந்தார்கள். அத் தகைய நன்னாளான, ஒளி நிரம்பியநாளை, வெறுமனே களியாட்டங்களிலும், சிற்றின்ப நுகர்வுகளிலும், வீணேகழிக்காமல்; ஆன்மீகத் தையும் சமய விழாக்கள் விரதங்களையும்; உலகியலுடன் இணைத்து, சித்திரா பூரணை யைப் புனித நாளாக்கிய பெருமை, நம் முன்னோர்களின் அறிவுத் திறனுக்கும் ஆன்மீக விழுமியங்களில் அவர்கள் கொண்டிருந்த சிரத்தைக்கும், சான்றுகளாக அமைகின்றன.

சைவர்களாகிய நாமும், பண்டைய மரபினை வாழ்வில் பேணி, அதன் நலங் காத்து, அடுத்த தலைமுறையினரிடம் கையளித்து, வாழ்வாங்கு வாழ்வோமாக.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"

"வாழ்க வையகம்; வாழ்க வளமுடன்"

*நல்ல செயல்கள் என்ற முத்துக்கள் நல் சிந்தனை என்ற நூலினால் கோர்க்கப்பட்டுள்ளன.*

# ஆனந்தக் கிருஷ்ணனின் அற்புத லீலைகள்

(தொடர்ச்சி...

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள் –

## பானைக்கும் மோட்சம்

காரணம் இல்லாமல் உலகில் எந்தக் காரியமும் நடைபெறுவதில்லை. எல்லாச் செய்கையும் வேறொரு உட்பொருளைத் தனக்குள் கொண்டுதான் இயங்குகின்றன. மனித வாழ்க்கையின் அடிப்படை இதுதான். அப்படியானால் பகவானை வணங்குவதற்கும் ஒரு காரணம் இருக்கவேண்டும் அல்லவா? நிம்மதியான வாழ்க்கை, பொருள் வரவு, வெற்றி, சொர்க்க வாழ்வு, மோட்சம் இப்படி ஏதோ ஒரு காரணம் இருக்கும்.

வணங்கத் தலையும், வாழ்த்த வாயும், கூப்பக் கரமும் கொடுத்தவன் பகவான். அந்த அருட்கடலை எண்ணிக் கசிந்துருகி வழிபட வேண்டியது நம் கடமை. மோட்சம்தான் உயர்ந்தது. அதை அருளக்கூடிய முத்தி தரும் முகுந்தனை வணங்கவேண்டும்.

பகவான் ஆயர்பாடியிலே தன் குறும்புகளால் எல்லோரையும் மகிழ்வித்துக் கொண்டிருக்கிறார். அவர் செய்த குறும்புகளில் ஒன்று வெண்ணெய் திருட்டு. கண்ணன் அப்படிச் செய்வதில் எல்லாக் கோபியர்களுக்கும் சந்தோசம்தான். ஆனால் அதை வெளிப்படுத்துவதில் ஒரு போலித்தனமான சலிப்பும், கோபமும்.


“யசோதா, இங்குபார். உன் பிள்ளை இன்று என்வீட்டில் வெண்ணெயைத் திருடிவிட்டான்” இது ஒருத்தி. இன்று என் வீட்டில் திருடியது மட்டுமல்ல மீதியைக் குரங்குகளுக்கும் ஊட்டிவிட்டான் இது மற்றொருத்தி! அன்று என் வீட்டில் அப்படித்தான் செய்தான். நான் பிடிக்க முயன்றேன். என் கையில் சிக்காமல் ஓடியவன், தூரத்தில் நின்று பழிப்புக் காட்டினான். இது இன்னொருத்தி. இது பரவாயில்லை, இவனுக்குப் பயந்து நான் தயிர், வெண்ணெய் எல்லாவற்றையும் மறைத்து வைத்துவிட்டேன். உள்ளே வந்து பார்த்த இவன் ஒன்றுமில்லையென்ற கோபத்தில் பானைகளையெல்லாம் உடைத்துவிட்டான். இது இன்னொருத்தி! இவன் குறும்புகளுக்கு எல்லையே இல்லை யசோதா. நாங்கள் சொல்வது பொய் என்றால் நீயே அவனைக் கவனித்துப்பார். உனக்குப் புரியும். இது வேறொருத்தி. யசோதைக்கு அவமானமாகிவிட்டது.

ஏன் இந்தக் கண்ணன் இப்படிச் செய்கிறான்? வீட்டில் பால், தயிர், வெண்ணெய் எல்லாமிருக்க அடுத்த வீட்டிற்கு ஏன் போகிறான். இவனை விடக்கூடாது. கையும் களவுமாகப் பிடித்துத் தண்டிக்க வேண்டும். கையில் பிரம்பை எடுத்துக் கொண்டு கண்ணனைத் தேடிப் போனாள். ஒரு கோபியின் வீட்டு உறியில் வெண்ணெயை அள்ளி உண்டவன் அம்மாவைப் பார்த்ததும் ஓட்டம் பிடித்தான். ஓடியவன் நண்பன் ததிபாண்டனின் வீட்டிற்குள் நுழைந்தான்.

ததிபாண்டன் என்ற பக்தன் தன் வீட்டில் தயிர் கடையும்போதெல்லாம் வெண்ணெயை எடுத்து கிருஷ்ணருக்கென்று ஒரு பானையில் வைப்பான். ஆனால் ஒருநாளும் கிருஷ்ணன் அவன் வீட்டிற்கு வரவில்லை.

*எல்லோரையும் நம்புவது ஆபத்து, ஒருவரையும் நம்பாதிருப்பது பேராபத்து.*

பானை பானையாக வெண்ணெய் சேர்ந்துவிட்டது. ததிபாண்டவன் வீட்டுக்கு வந்த கண்ணன், வெண்ணெய் நிரம்பிய பானைகளையெல்லாம் விட்டுவிட்டு, காலியாக இருந்த பானைக்குள் ஓடிப்போய் அமர்ந்தான். ததிபாண்டன் மகிழ்ச்சியுடன் கண்ணனை வணங்கினான். யாராவது தேடிவந்தால் தான் இங்கிருப்பதாகச் சொல்லவேண்டாமென்று ததிபாண்டனிடம் கூறிவிட்டு பானைக்குள் ஒளிந்து கொண்டான் பரந்தாமன். ததிபாண்டன் ஒரு பெரிய மூடியால் பானையை மூடிவிட்டு அதன்மேல் அமர்ந்து கொண்டான்.



யசோதையும், கோபியரும் கண்ணனைத் தேடி வந்தார்கள். கண்ணன் வரவில்லை என்று ததிபாண்டன் பொய் சொன்னான். வந்தவர்கள் போய் விட்டனர். கோபாலன், "ததிபாண்டா மூடியைத் திற. நான் வெளியில் வரவேண்டும்" என்றான். ததிபாண்டனோ, "கண்ணா எனக்கு மோட்சம் அளிப்பதாக வாக்களித்தால் மட்டுமே திறந்து விடுவேன்" என்றான். உடனே கிருஷ்ணன், "ததிபாண்டா உனக்கும் மோட்சம் தந்தேன். என்னை மறைத்து வைத்த பானைக்கும் மோட்சம் தந்தேன்" என்றான்.

எல்லோரிடமிருந்தும் பகவான் வெண்ணெய் திருடினார். ஆனால் ததிபாண்டனோ எல்லாம் உன்னுடையதே என்றான். அதனால் அவனைத் தேடிப் போய் முத்தி தரவே இப்படி ஒரு நாடகமாடினான் கண்ணன். அதோடு தன் திருவடியில் சரணாகதியடையும் சகலருக்கும் முத்தி கிட்டும் என்றுணர்த்தவே பானைக்கும் முத்தி தந்தான் முகுந்தன். ஒரு சாதாரண பானையும் மோட்சமடைய முடியுமென்றால், மோட்சத்தை விடவும் சிறந்தது வேறென்ன இருக்கமுடியும்?

இப்படி மனதை அலையாததாக, ஏதுமற்றதாக நிறுத்தி, அதில் பகவானை நிரப்பிக் கொண்டால்; பானைக்கு கிடைத்தமாதிரி நமக்கும் மோட்சம் உறுதி என்பது தாற்பர்யம்.

யசோதை கன்றுகளை மேய்ப்பதற்காக கண்ணனைக் காட்டிற்கு அனுப்பினாள். ஆனால் அவன் பிரிவு தாங்காது ஏங்கினாள். மாலையில் அவன் திரும்பி வரும்போது அவன் அலங்காரங்களைக் கண்டு மகிழ்ந்து, மற்றவர்களையும் அழைத்து அவன் அழகைக் காணச் செய்கிறாள். "கண்ணா! நாளைமுதல் கன்றின் பின் போகாமல் கோலம் செய்யாமல் இங்கே இரு" என்கிறாள். கண்ணன் பிருந்தாவனத்தில் புல்லாங்குழல் இசைத்தான். அக் குழலோசையை ஆயர் பெண்கள், தேவ மாதர்கள் கேட்டு தம் செயலை மறந்தனர். ஆனிரைகள் இசைகேட்டு அசையாமல் நின்றன. செடி கொடிகளும், மரங்களும் மகிழ்ந்தன. உலகத்தை குழலிசை மயக்கியது.

*அச்சம் பல வழிகளால் வெல்லப்படலாம். தைரியம், நம்பிக்கை, அறிவு ஆகியவை அவற்றுள் சில.*

இடவணரை இடத்தோளோடுசாய்த்து இருகைகூடப் புருவம் நெரிந்தேற
குடவயிறு படவாய் நடைகூடக் கோவிந்தன் குழல் கொடுதினபோது
மடமயில்களொடு மான்பிணைபோலே மங்கைமார்கள் மலர் கூந்தலவிழ
உடைநெகிழவோர் கையால்துகில்பற்றி ஒங்கியோடரிக்க கணோடநின்றனரே.

-பெரியாழ்வார்.

வைகுந்தக்குட்டன் வாசுதேவன், மதுரைமன்னன், நந்தகோனிளவரசு, கோவலர் குட்டன், கோவிந்தன், மழைமுகில் வண்ணன், ஆயர் பெருமான், மதுசூதனன், தேவகி சிறுவன், தேவர்கள் சிங்கம் குழலூதினபோதும் வேணுகானத்தால் பசுக்கள் எல்லாம் மயங்கின. அவன் குழலூதும் சிறப்போ கொள்ளை அழகு. பறவைகள் எல்லாம் கூட்டைவிட்டு, குஞ்சுகளை விட்டுவிட்டு வந்துவிடும். மான்களெல்லாம் மேய்வதைவிட்டு, மேய்ந்த புல்லும் கடைவாய் வழிசோர, அசையாது எழுது சித்திரம் போல் நிற்கும். குழலின் அமுத கீதத்தில் கந்தர்வர் தேவர்கள் அரம்பையர் எல்லாம் மயங்கினர். கோபியர்கள் எல்லாம் குழலோசை கேட்டதும் வீட்டையும், குடும்பத்தையும் துறந்து வந்துவிடுவார்கள். புருஷோத்தமன் புல்லாங்குழலூதி அண்ட சராசரங்களையும் வேணுகானத்தால் மயக்குவான்.

காற்றினிலே வரும் கீதம் காற்றினிலே வரும் கீதம்
கண்கள் பனித்திட பொங்கும் கீதம் கல்லும் கரையும் கீதம்

(காற்றினிலே...)

பட்ட மரங்கள் தளிர்க்கும் கீதம் பண்ணொலி கொஞ்சிடும் கீதம்
காட்டு விலங்கும் கேட்டே மயங்கும் மதுர மோகன கீதம்
நெஞ்சினிலே நெஞ்சினில் இன்பக்கனலை எழுப்பி நினைவளிக்கும் கீதம்.

(காற்றினிலே...)

சுனை வண்டுடன் சோலைக் குயிலும் மனங்குளிர்ந்திடவும்
வானவெளிதனில் தாரா கணங்கள் மயங்கி நின்றிடவும்
ஆ! என் சொல்வேன் மாயக்கண்ணன்
வேய்ங் குழல் பொழி கீதம்

(காற்றினிலே...)

நிலா மலர்ந்த இரவினில் தென்றல் உலாவிடும் நதியில்
நீல நிறத்துப் பாலகன் ஒருவன் குழல் ஊதி நின்றான்
காலமெல்லாம் காலமெல்லாம் அவன் காதலை எண்ணி
உருகுமோ என் உள்ளம் காற்றினிலே வரும் கீதம் காற்றினிலே.

"இசை கேட்டால் புவி அசைந்தாடும். இது இறைவன் அருளாகும்" அந்த இறைவனே வந்து பிருந்தாவனத்தில் இசைத்த இனிய வேய்ங்குழல் ஓசையில், அமுதகானத்தில் ஆனந்த மோகன வேணுகானத்தில் உலகமே மயங்கியதில், பறவைகள், கறவைகள், மான்கள், மரங்கள், அரம்பையர், கோவலர், சிறுமியர், கந்தருவர், தும்புருநாரதர், தேவர்கள் அண்ட சராசரங்கள் எல்லாம் கோவிந்தனுடைய கோமள வாயில் இசைத்த அமுதப் புனலில் மயங்கியதில் வியப்பேது?

குழந்தையாகக் கண்ணன் மீண்டும் பிறக்கமாட்டானா
புல்லாங்குழல் ஊதி எமை மயக்கமாட்டானா.

(தொடரும்...

*நல்லொழுக்கம் மட்டும் புயலுக்கும் அசையாமல் உறுதியாக நிற்கும்.*

# எம் மதத்தையும் இனத்தையும் தாங்கி நிற்கும் குருந்தூர் மலை

– **செல்வி ச. வர்ணி** அவர்கள் –

நெஞ்சை நிமிர்த்திப் போரிற்களைக் கும் தாலக் கூடல்களும், பச்சைத் தாவணி விரித்தாற்போன்ற களனிப் புனங்களும், எதிரி களை அஞ்ச வைத்து நடுநடுங்கச் செய்யும் பூதாகாரமான கானகங்களும், பதுங்கிப் பாயும் சருகுப் புலிகளும், ஆனை முகத்தோனின் அன்புக்குப் பிரியமான வாரணங்களும், கந்தன் தாள் போற்றும் மஞ்ஞைகளும், படையே நடுங்கும் சிவன் கழுத்தில் அசைந்தாடும் ஸர்ப்ப இனங்களும், வற்றாத புனல் நிறைந்த புனலூற்றுக்களும் இந்து மதத்தின் தொன்மை யைப் பறைசாற்றும் அகழ்வாராய்ச்சி இடங் களும் கொட்டிக் கிடக்கும் பதியே முல்லைத் தீவு.

ஆதிகால ஈழத் தமிழனினதும் ஆதி இந்துமதத்தின் பொக்கிஷங்களும் அடங்கிய பெறுமதியான மலையே குருந்தூர்மலை. முல்லைத்தீவிலே முள்ளியவளையின் கீழுள்ள பிராந்தியமே தண்ணிமுறிப்பாகும். தண்ணி முறிப்புக் குளத்திற்கு கிழக்கே 3கி.மீ தூரத் தில் இம்மலை நிலைபெற்றுள்ளது. குருந்தன் குளத்தைத் தன்னருகே கொண்டு இயற்கை வனப்புடன் கம்பீரமாய் எழுந்து நிற்கும் இம் மலை யாரும் அறியா வரலாற்றினைத் தன் னுள் அடக்கியுள்ளது.

கணுக்கேணியைத் தலைநகராகக் கொண்ட கணு மன்னனின் அந்தப்புரம் இம் மலையிலேயே அமைந்துள்ளது. அவனது பட்டத்து ராணியினுடைய நீச்சல் தடாகம் தூர்வடைந்த நிலையில் இன்றுமுள்ளது. அப்பகுதியைச் சூழவுள்ள கல்லாசனங்கள் மற்றும் கருங்கற் தூண்கள் வரலாற்றின் தொன்மையினை எடுத்துக் காட்டுகின்றன. இம்மலை சுமார் 150 அடிக்குமேல் உயரமும் உடையது. இம்மலையினை ஈழத்து ஆதிக் குடிகளான நாகர்கள் தமது வாழிடமாகவும், வழிபாட்டு இடமாகவும் வைத்திருந்தனர் என் பதற்குப் பல தடயங்கள் காணப்படுவதுடன் இம் மலையின் உச்சியில் ஐந்து தலை நாக பீடம் ஒன்றும் பண்டைய சிவலிங்கம் ஒன் றும் உள்ளது. இம்மலை எக்காலத்திற்குரி யது என்ற ஆய்வில் இம்மலையின் அருகே உள்ள குருந்தன் குளம் கி.மு. 3ஆம் நூற் றாண்டின் நடுப்பகுதியில் கட்டப்பட்டிருக்க வேண்டுமென்பது ஆய்வாளர் பார்க்கரின் கருத்தாகும். இம்மலையை ஆங்கிலேயர்கள் கூட ஆய்வு செய்துள்ளனர்.

நாகர்கள் ஆறுகளை மறித்து குளங் கள் கட்டியபோது தமது வழிபாட்டிற்காக ஐந்து தலை நாக சிலையினை பிரதிஷ்டை செய்வது வழக்கம். இவ்வாறான ஒரு சிலை யும் சிவலிங்கமும் இம்மலையில் இருந்தது. போர்ச் சூழலிற்கு பிற்பட்ட காலத்தில் இவ் இரண்டும் இம்மலையிலிருந்து காணாமல் போயுள்ளது. தற்போது ஐயப்பன் ஆலயம் ஒன்று மலையுச்சியில் உண்டு.

மலையின் உச்சிக்குச் செல்வதற்கு கருங்கல்லில் சீராகப் பொளியப்பட்ட படிகள் கட்டப்பட்டுள்ளன. படிக்கற்களை செருகி அடுக்குவதற்கு யானைத் தலை வாசல்கள் இருந்துள்ளன. படிக்கற்களைப் பொருத்தும் பல யானைத்தலை வாசல் கற்கள் துண்டு

*வருத்தமோ துன்பமோ இன்றி எவராலும் எளிதில் புகழைப் பெறமுடியாது.*

துண்டாக உடைந்த நிலையில் உள்ளன. மலை உச்சிக்குச் செல்வதற்கு முன்னர் ஒரு இடத்தில் சுற்றிவர கபுக் கல்லினால் அணைமதில்போல் கட்டப்பட்டு அதற்கு மேலுள்ள தட்டையான பகுதியில் ஆலயம் இருந்தமைக்கான அடையாளங்கள் இருக் கின்றன. ஆலயத்தின் தரைப் பகுதியிலும் உச்சிமலை அடிவாரத்திலும் கற்றூண்கள் பல காணப்படுகின்றன. அநேக கற்றூண்கள் தற்போது சரியாமல் நிமிர்ந்து நிற்கின்றன.

மலையின் உச்சியில் சைவ சமய சிவலிங்க வழிபாடு இருந்ததாக வரலாற்றுக் குறிப்புக்கள் தெரிவிக்கின்றன. ஆனால் தற் போது அங்கு எந்தவித அடையாளங்களும் இல்லை. குருந்தூர்மலை ஆலயத்தில் இருந்த வழிபாட்டுச் சின்னங்களில் சிலவும் கற்றூண் களும் முள்ளிவாய்க்கால் பிரதேசத்திற்கு 1858ஆம் ஆண்டளவில் எடுத்துச் செல்லப் பட்டதாக பார்க்கர் என்ற ஆய்வாளர் 1886இல் எழுதிய தனது குறிப்புகளில் தெரிவித்துள்ளார்.

மதம் கொண்ட யானையை அடக் கிய அரியாத்தை பற்றி யாவரும் அறிவோம். அந்த மதம் கொண்ட யானையை தேடிய இடங்களில் குருந்தூர்மலையும் ஒன்று என இவ்வாழ் முதியவர்கள் இன்றும் கூறுவர். இன்று மலை உச்சியில் மிஞ்சி இருப்பது படிக்கட்டுக்களில் சிலவும் உடைந்த யானைத் தலைகளும், வன்னிமைகள் ஆண்ட அரச சிம்மாசனமும், நீர்த்தடாகமும், கற்றூண்களில் சிலவும் ஓர் ஐயனார் ஆலயமும் ஆகும். ஸர்ப்பங்கள் இம்மலையில் அதிகம் இன்றும் வாழ்ந்து வருகின்றன. ஐந்து தலைகளை உடைய கருநாகம் ஒன்று இம்மலையின் நடுப்பகுதியில் படமெடுத்துப் பறந்த நிகழ்வை 2011இல் வேட்டைக்குச் சென்ற வயது முதிர்ந்த ஒருவர் பார்த்து ஊர் வாசிகளிடம் கூறியுள்ளார். இந்து மதம் நலிந்துபோகும் தன்மையில் அதன் தொன்மைகள் உயிர்ப் புடன் உலாவுவது மனமகிழ்வே!

இங்கு யாம் கருத்திற் கொள்ளப்பட வேண்டியது, இதே போன்று எமது பிரதேசங் களில் பல இந்துமத தொன்மைகள் மறைந்து காணப்படுகின்றன. அவை மாற்றான் கைகளில் அகப்பட்டு திரிவடைவதனைக் காட்டிலும் துணிந்து ஒற்றுமையாய் எதிர்த்து எம் மத அடையாளங்களைப் பொறுப்போடு பேணிப் பாதுகாப்பது எம்முடைய தலையாய கடமை யாக அனைவரும் உணரவேண்டும் என்பதே ஆகும்.

"அயரா அன்பின் அரன் கழல் செலுமே"

## குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| மே | 05 | சித் 22 | ஞாயிறு | சிறுத்தொண்டர் |
| மே | 07 | சித் 24 | செவ்வாய் | மங்கையற்கரசியார் |
| மே | 21 | வை 07 | செவ்வாய் | திருஞானசம்பந்தர். |
| | | | | திருநீலகண்ட யாழ்ப்பாணர் |
| யூன் | 07 | வை 24 | வெள்ளி | சேக்கிழார் |
| | | | | நமிநந்தியடிகள் |

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்

(விரிவான பொருளுரையும் தெளிவுரையும்)

முனைவர் ஆ. ஆனந்தராசன்



## 93. சிவனையன்றி வேறொன்றை அறியார்

எல்லாம் அறியும் அறிவுறினும் ஈங்கு இவர் ஒன்று
அல்லாது அறியார் அற.

**பொருள்:**

எல்லாவற்றையும் அறியக்கூடிய சிவனது அறிவாகிய திருவருளைத் தாம் பெற்றா ராயினும் அணைந்தோராகிய ஞானிகள் அவ்வறிவைக் கொண்டு சிவனைத் தவிர வேறு பொருள்களைச் சிறிதும் அறிய மாட்டார்.

**சொற்பொருள்:**

எல்லாம் அறியும் அறிவு- எல்லாவற்றையும் அறியக்கூடிய சிவனது அறிவாகிய திருவருளை, உறினும்- தாம் பெற்றாராயினும், ஈங்கு- இம் முத்தி நிலையில், இவர்- இவ் அணைந்தோர், ஒன்று அல்லாது- ஒரு பொருளாகிய சிவத்தையன்றி, அற அறியார்- வேறொரு பொருளைச் சிறிதும் அறியார்.

**விளக்கம்:**

**எல்லாம் அறியும் அறிவு:**

எந்நிலையிலும் ஆன்மா ஒரு துணையைக் கொண்டே அறிவதாகும். கட்டு நிலையில் அதற்குத் துணையாய் இருப்பவை கருவிகள். ஐம்பொறி முதலிய கருவிகளின் வழியாகவே அது உலகத்தை அறிந்து வருகிறது. அக்கருவிகள் உலக அறிவைத் தருமேயன்றி மெய்யறிவைத் தரமாட்டா. உலக அறிவு என்பது மயக்க அறிவே. பொருள் அல்லவற்றைப் பொருளென்று அறிந்து பற்றுவதனால் அது மயக்க அறிவாயிற்று. இம்மயக்க அறிவு உள்ளவரையில் மெய்யறிவு தோன்றாது. எனவே மயக்க அறிவைத் தருகின்ற கருவிகளை விட்டு நீங்கும்போதே மெய்யறிவு உண்டாகும்.

சுத்த நிலையில் கருவிகள் நீங்கியபோது மெய்யறிவைப் பெறுவதற்குத் துணைசெய்வது எது? அதுவே உயிர்க்குயிராய் என்றும் உடனாய் இருக்கும் சிவனது அறிவாகிய திருவருள். "எல்லாம் அறியும் அறிவு" என்று அதனைக் குறிப்பிடுகின்றார் ஆசிரியர் உமாபதிசிவம். கருவிகளை நீங்கிய நிலையில் திருவருளே கருவியாய் நின்று உயிருக்கு நேரே அறிவிக்கும்.

*அனுபவத்தைப் பெறும்போதுதான் வாழ்வின் சிக்கல் புலப்படுகிறது.*

கட்டு நிலையில் உயிர் மலத்தில் மறைப்புண்டு சிறுமைப்பட்டிருந்தது. அந்நிலையில் சிறியவாகிய கருவிகள் அதற்குத் துணையாகச் சிற்றறிவைத் தந்தன. கருவிகளை நீங்கிய நிலையில் உயிர் தனக்கு இயல்பாய் உள்ள வியாபக நிலையைப் பெற்றுவிடும். இங்ஙனம் வியாபகமாகிய உயிருக்கு வியாபகமாய் உள்ள திருவருளே துணையாகி அதன் வியாபக அறிவை விளங்கச் செய்யும்.

சிறியவாகிய கருவிகளால் உயிர் அறிந்தது சிறுமையுடைய உலகத்தை. வியாபகமாகிய திருவருளால் உயிர் அறிவது வியாபகமாகிய சிவத்தையேயாம்.

**ஆன்மாவின் இயல்பு:**

எப்பொருளை அறிந்தாலும் அப்பொருளிடத்து அழுந்தி விடுவது ஆன்மாவின் இயல்பாகும். அழுந்தி விடுதல் என்றால், ஆன்மாவினது அறிவு அப்பொருளின் வயப்பட்டு விடுதல். அப்பொருளோடு ஒன்றிப் போதல் என்பது பொருளாகும். அங்ஙனம் ஆன்ம அறிவு ஒரு பொருளோடு ஒன்றிப் போகுமானால் அது அச்சமயத்தில் வேறொரு பொருளை அறியமாட்டாததாய் நிற்கும். இதுபற்றியே ஆன்மா ஒரு நேரத்தில் ஒன்றையே அறியும் என்று சொல்லப்படுகிறது.

ஆன்மாவின் இயல்பு இப்படிப்பட்டதாகையால், மலம் முழுவதும் நீங்கிச் சிவத்தைச் சார்ந்தபொழுது அதனறிவு சிவம் ஒன்றையே அறியும் அன்றி வேறொன்றையும் அறியமாட்டாது. பளிங்கின் பக்கத்தில் மாணிக்கம் இருந்தால் அப்பளிங்கு மாணிக்கத்தின் ஒளியை முழுவதுமாகப் பெற்று நிற்கும். அந்நிலையில் அதன் அருகே வேறு பொருள்களை வைத்தாலும் அவற்றின் நிறங்களை அது கவராது விடும். அது போன்றதே ஆன்மா சிவத்தையன்றி வேறொன்றையும் அறியாத நிலை.

எல்லாம் அறியும் அறிவாகிய திருவருளைப் பெற்றும் உயிர் சிவத்தைத் தவிர வேறு பொருளை அறியாது என்றால் அஃது ஒரு குறையாய் முடியாதோ என வினவலாம்.

திருவருள் கண்ணாகச் சிவத்தை இனிது உணர்ந்து நிற்றலால் ஆன்மாவிற்குச் சிறிதும் குறைவில்லாத இன்பமே உண்டாவதன்றித் துன்பம் சிறிதும் உண்டாகாமையால், பிறிதொரு பொருளை உணராமை பற்றி ஆன்மாவிற்கு ஒரு குறையும் இல்லையாம்.

**பிறவற்றை அறிதல் பந்தம்:**

சிவம் ஒன்றே ஆன்மா அறிதற்குரிய பொருள். சிவமல்லாத வேறு எப்பொருளை அறிந்தாலும் அஃது ஆன்மாவிற்குப் பந்தமாய் முடியும். அதுபற்றியே ஞானிகள் சிவத்தைத் தவிர வேறு பொருளை அறியார். அங்ஙனம் பிறவற்றை அறியாமை அறியமாட்டாமையால் அன்று; அறிய விரும்பாமையினால் ஆம். பிறவற்றை அறிதல் பந்தமாய் விடும். அந்தப் பந்தம் முத்திப் பயனுக்கு இடையூறாய் விடும். ஆகவே, ஞானிகள் பிறவற்றை அறிதலைச் சிறிதும் விரும்பார்.

**பொற் கொழு:**

ஓர் உழவனுக்குக் கிடைத்தற்கரிய கொழு ஒன்று கிடைத்தது. கொழு என்பது நிலத்தை உழும் கலப்பையின் அடி முனையில் பொருத்தப் பெற்றிருக்கும் கருவி. அது பொதுவாக இரும்பினால் செய்யப்பெற்றிருக்கும். இவனுக்குக் கிடைத்ததோ உலகினில்

*கடவுளைத் தொழு. ஆனால் உழைப்பதை நிறுத்தாதே.*

எங்கும் இல்லாத கொழு; பொன்னால் இயன்ற கொழு; அதனை எவ்வளவு மதித்துப் போற்ற வேண்டும்; ஆனால், அவன் அதன் மதிப்பை உணராமல் அற்பமான வரகினை விளைத்தற் பொருட்டு வன்னிலத்தை உழுதற்குப் பயன்படுத்தினானாம். அவனது பேதமையை என்னென்பது!

பொற்கொழுக் கொண்டு வரகுக்கு உழுவது போன்றது திருவருளைப் பெற்ற பின்னும் அது கண்ணாக இறைவனையே உணர்ந்து அவனிடத்து அடங்கி நில்லாது, தற்போதத்தால் பிறவற்றை உணர்ந்து மீட்டும் உலக பந்தத்திற்கு ஆட்படுதல்.

## 94. ஆமையும் ஞானியும்

புலன் அடக்கித் தம்முதற்கண் புக்குறுவர் போதார்
தலன் நடக்கும் ஆமை தக.

### பொருள்:

ஆமை நிலத்தின் மேல் இயங்கும்பொழுது தனக்குத் துன்பந்தருவதொன்று எதிரில் வருவதாக உணர்ந்தால் அப்பொழுதே தனது ஐந்து உறுப்புக்களையும் தனக்கு காவலாய் உள்ள ஓட்டினுள்ளே அடக்கிக்கொண்டு அசைவற்றுக் கிடக்கும்.

அதுபோல, அணைந்தோராகிய ஞானிகள் உலக ஆசை தம்மைத் தாக்குவதாக உணர்ந்தால், உலகை நோக்கிச் செல்கின்ற மனத்தை அவ்வாறு செல்லாமல் அடக்கித் தமக்கு முதலாய் உள்ள சிவனது வியாபகத்துள்ளே ஒடுங்கி உலகை நினையாதிருப்பர்.

### சொற்பொருள்:

தலன்- நிலத்தில், நடக்கும் ஆமை- இயங்கும்போது தனக்குத் தீங்குவரின் தன் உறுப்புக்களைச் சுருக்கி ஓட்டினுள் அடக்கிக் கிடக்கும் ஆமை, தக- போல, புலன் அடக்கி- அணைந்தோர் ஐம்புல உணர்வை அடக்கி, தம் முதற் கண்- தம் அறிவிற்கு முதலாய் உள்ள சிவத்தினது வியாபகத்தினுள்ளே, புக்கு உறுவர்- ஒடுங்கி நிற்பார், போதார்- அந்நிலையினின்றும் நீங்கிப் புறம் வாரார்; அஃதாவது, உலகை நினையார்.

### விளக்கம்:

**அவா ஞானியர்க்கு ஆகா:**

வீட்டு நிலையில் உள்ள ஞானிகள் எப்பொழுதும் பரமே பார்த்திருப்பர்; பதார்த்தங்கள் பாரார். அவர்களிடத்திலும் ஆசை எழுமோ? என்று கேட்கலாம்.

உலகில் வாழும்போதே சிவத்தை அடைந்து அதனோடு ஒன்றி நின்ற பின்னும் பண்டைய பழக்கத்தால் உயிர்ச்சார்பு, பொருட்சார்பு ஆகியவற்றின்மேல் ஆசை நிகழ்தல் கூடும். திருவள்ளுவர் மெய்யுணர்தல் என்ற அதிகாரத்தை வைத்ததோடு நில்லாமல், அதன்பின் அவா அறுத்தலை வைத்துக் கூறியுள்ளமை கருதத்தக்கது.

அவா என்பது, உள்ளது போதும் என்று அமையாமல், இது வேண்டும், அது வேண்டும், இன்னும் வேண்டும், இதற்குமேல் வேண்டும் என மேலும் மேலும் பெற

விரும்பும் வேட்கையாகும். திருவள்ளுவர் அதனை "ஆரா இயற்கை அவா" என்பார். ஆராமையாவது நிரம்பாமை; எவ்வளவு பெற்றாலும் அதனால் மனநிறைவு ஏற்படாமை.

பிறப்பு நிலையில் உள்ள நம்மவரிடத்தில் இத்தகைய அவா இருத்தல் இயல்பு. ஆனால், ஞானத்தால் வீடுற்ற ஞானிகளிடத்தில் உலக ஆசை எழுமாயின் அவ் அவா அவரை மீட்டும் பிறவியிற் செலுத்திவிடும்.

**ஆசையால் விளைந்த நிலை:**

ஆசைக்கு இடங்கொடுத்தால் அஃது எதிலே போய் முடியும் என்பதைப் பின்வரும் நிகழ்ச்சியினால் அறியலாம்.

துறவி ஒருவர் தன்னந்தனியாக நடுக்காட்டில் சிறு குடிசை போட்டுக்கொண்டு வாழ்ந்தார். அவருக்கு ஒரு குறையும் இல்லை. ஒரு தேவையும் இல்லை. ஆனால், ஒரு சிறு தொல்லை அவ்வப்போது ஏற்பட்டது. அத் தொல்லை எலியினால் வந்தது. அது அடிக்கடி அவரது கோவணத்தைக் கடித்துக் கிழித்தது. எலியின் தொல்லையைப் போக்க என்ன வழி? பூனை இருந்தால் எலி வராது என்று எண்ணிப் பூனை வளர்த்தார். பூனைக்குப் பால் வேண்டுமே. அதற்காகக் கறவை மாடு ஒன்று வாங்கிக் கனிவோடு வளர்த்தார். அதற்கு வைக்கோல் வேண்டுமே. அதற்காக ஒரு நிலத்தை வாங்கித் தானே உழுதார். இத்தனை வேலைகளையும் தனியொருவராக இருந்து எப்படிப் பார்ப்பது? துணையொருவர் வேண்டும் என்று ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். குழந்தைகளைப் பெற்றார்.

ஆசைக்கு இடங்கொடுத்த இந்தத் துறவியின் நிலை இப்படியாயிற்று. ஆதலால் ஆசை எழுந்த அப்பொழுதே அதனைக் களைந்தெறிவர் ஞானியர்.

**சிவஞானத்துள் ஒடுங்குதல்:**

ஆசையைக் களைவது எப்படி? நிலையாதவற்றின் மேல் அவாக்கொண்டு ஓடி இடைவிடாது அவற்றைப் பற்றி நிற்பது மனமேயாகும். அதனை அவ்வாறு முடிவின்றி ஓடவிட்டால், உலக ஆசை முடிவின்றித் தோன்றிக்கொண்டேயிருக்கும். எனவே மன ஓட்டத்தை அடக்க வேண்டும். மனத்தை அடக்குவதற்கு உரிய வழி ஒன்றே ஒன்றுதான். ஒரு பொழுதும் உயிரைவிட்டு நீங்கிச் சேய்மையில் இல்லாமல் எப்பொழுதும் உடனாக இருக்கின்ற சிவனை இடைவிடாது உணர்ந்து நிற்பின், ஐம்புலன்களை நாடி ஓடுகின்ற மனம் மெல்ல மெல்ல அதனை விடுத்து அவனிடத்தே சென்று ஒடுங்கும். அங்ஙனம் ஒடுங்கிய நிலை வாய்க்குமானால் உலக வாசனை தாக்காதொழியும்.

ஞானிகள் இம்முறையில் மனத்தை அடக்கிச் சிவஞானத்துள்ளே ஒடுங்கி உலகை நினையாதிருப்பர். இக் கருத்தையே "புலனடக்கித் தம் முதற்கண் புக்குறுவர்" எனக் குறிப்பிடுகிறார் ஆசிரியர்.

தலன் நடக்கும் ஆமையை உவமை காட்டி ஞானியர் நிலையை விளக்குகிறார். ஆமை எப்படித் தனக்குத் தீங்கு வருவதை உணர்ந்தவுடன் தன் உறுப்புக்களை உள்ளே இழுத்துக் கொள்ளுமோ, அப்படியே ஞானிகளும் தம் உணர்வைத் தாக்குகின்ற விடய சுகங்களைக் கண்டதும் புலனடக்கித் திருவருளுக்குள்ளே ஒடுங்கியிருப்பர் என்கிறார்.

*இடைவிடாத ஊக்கத்திற்கு எந்தத் துன்பமும் இல்லை.*

**ஒரு குறிப்பு:**

மனம் மொழி மெய்களின் செயல் அடங்கி, ஐம்பொறிகளின் நுகர்ச்சியும் ஒடுங்கினால் அதனை "ஒடுக்கம்" என்பர்.

நமது திருமடங்களில் ஒடுக்கம் என்ற ஓர் இடம் உண்டு. ஆசாரிய மூர்த்திகள் இருக்கும் இடம் அது. இந்திரியங்கள் யாவும் ஒடுங்கித் தவம் செய்கின்ற இடம் ஆதலின் அதற்கு ஒடுக்கம் என்ற பெயர் ஏற்பட்டது. அங்கே உடனிருந்து பணிவிடை புரியும் அணுக்கத் தொண்டருக்கு ஒடுக்கத் தம்பிரான் என்பது பெயர். புலன்கள் ஒடுங்கியிருக்கும் தம்பிரான் என்பது அதற்குப் பொருளாகும். (தொடரும்...

## சப்பரம் - சப்பைரதமா?

"எம்பெருமான் சப்பைரதத்தில் வீதியுலா வருவார்". அண்மைக் காலங்களில் இந்த வசனத்தை அடிக்கடி ஊடகங்களில் பார்த்தும் கேட்டும் வருகிறேன். இதைக் கேட்குந்தோறும் நான் ஏதோவோர் அந்தரமான மனநிலைக்குத் தள்ளப்படுகின்றேன். "எம்பெருமான்... சப்பைரதத்திலா? சின்னவயதில் ஆச்சி நெல் புடைக்கும்போது, சாவி - சப்பட்டை (சப்பை) என்று கழிவுகளை அகற்றியது ஞாபகம் வருகின்றது.

குறித்த திருவிழாவை "சப்பரத் திருவிழா" என்றே நாங்கள் காலங் காலமாக சொல்லி வந்தோம். கிராமிய வழக்கில் சப்பரத் திருவிழா - சப்பறத் திருவிழா எனவும் சொல்லப்படுவதுண்டு. அண்மைக் காலங்களில்தான் இத் திருவிழாவை சப்பைரதத் திருவிழாவென யாரோ திரிபுபடுத்தியுள்ளார்கள் போலும்.

தமிழ் திரைப்படங்களிலும், சில நாவல் சிறுகதைகளிலும் "சப்பிர மஞ்சம்" என்ற சொல் சிலவேளைகளில் சொல்லப்படுவதுண்டு. முதலிரவுக் காட்சிகளில் மணமக்கள் உறங்கும் படுக்கை இவ்வாறு குறிப்பிடப்படுகின்றது. "சப்பிர" என்ற சொல் அலங்கரிக்கப்பட்ட, அழகுபடுத்தப்பட்ட, புனிதமான என்ற பொருளிலே இங்கு வழங்கப்படுகின்றது.

அவ்வாறே எம்பெருமான் பவனி வருகின்ற இரதம் - சப்பிர+இரதம்- சப்பரம் என எம் முன்னோர்களால் வழங்கப்பட்டிருக்கும். அதுவே எம்பெருமானின் மேன்மையையும், பெருமையையும், புனிதத்தையும் குறிப்பதாகவும் இருக்கும். ஆச்சி நெல் புடைக்கும்போது கழித்துவிடுகின்ற சாவி - சப்பை - சப்பட்டை எம்பெருமானது இரதத்திற்குப் பொருந்தி வராது.

மொழியியல் அறிஞர்களும், சமய அறிஞர்களும் இதைக் கவனத்தில் கொண்டு சரியான சொல் வழக்கில் வர ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.


-கற்கரை கற்பகன்-

*உண்மையான அறிவு என்பது தயக்கமற்ற உறுதி.*

# மெய்வருத்தம் பாரார் பசி நோக்கார் கண் துஞ்சார்

– **திரு கே.எஸ். சிவஞானராஜா** அவர்கள் –

95வயது இளைஞனான கலாபூஷணம் தம்பு துரைராஜா அவர்கள், பண் செய்யும் வண்டென, திருவாசகத் தேன் குடிக்கும் தேனியென, அறம் செய விரும்பும் சுறுசுறுப்பான எறும்பென இலங்கைத் திருநாட்டில் சைவநெறி போற்றும் சிவநெறிச் செல்வராகவும், குருவான ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகளின் இடையறாத பேரன்போடும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து வருகின்றார்.



ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளின் தொண்டர் சபையினூடாக மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயச் சூழலில் அவரது குருபூஜையையும், பற்பல சமூக நலத் திட்டங்களையும் ஆற்றிவருவதை சைவ சமய உலகம் நன்றியோடு கரங்கூப்புகிறது. இத் தொண்டர் சபையிலே கௌரவ தலைவராக திரு எஸ்.ரீ.ஆர். தியாகராஜா அவர்களும், கௌரவ செயலாளராக திரு தம்பு துரைராஜா அவர்களும், கௌரவ உப பொருளாளராக திரு வி.பி. மாணிக்கவாசகர் அவர்களும் திருத்தொண்டாற்றுகின்றார்கள்.

மேற்படி மூவரும், அச்சபையினரும் ஆற்றுகின்ற சமயப்பணிகளும் சமூகப் பணிகளும் மற்றும் சகவாழ்வுப் பணிகளும் திருக்கேதீஸ்வரப் பெருமானின் கிருபாகடாட்சத்தினாலும், திருவாசகப் பெருங் கடல் ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகளின் ஆசீர்வாதத்தினாலும், கொடை வள்ளல்களின் பேருதவியினாலும் நேர்த்தியாக நடைபெறுகிறது.

மாதாந்தம் பௌர்ணமிதோறும் மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு கிரமமாக நடைபெறுகிறது. இத்தகைய பேறானது கலாபூஷணம் தம்பு துரைராஜாவின் ஊக்கத்தினால் ஒப்பேற்றப்படுகிறது.

ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளின் கனவு மெய்ப்படும் வகையில் அவர் எண்ணியபடி நல்லபடி புண்ணியம் அரங்கேறி பூக்கிறது. தூர இடத்தில் இருந்து திருக்கேதீஸ்வரப் பெருமானைத் தரிசிக்க வரும் அடியார்களுக்குப் பசிப்பிணி நீக்கி பயபக்தி ஊட்டுகின்ற கைங்கரியம் சிறப்பாக அதுவும் மகோற்சவ காலங்களில் உச்சம் பெறுகிறது.

மேலும், வறுமைக்கோட்பாட்டுக்குத் தகுதியுள்ளவர்கள் எனச் சிபார்சு செய்யப்பட்ட மாணவர்களுக்கும், குடும்பங்களுக்கும்

*நம்பிக்கையே சகல நோய்களுக்கும் செலவில்லாத ஒரே மருந்து.*

துவிச்சக்கரவண்டி, தையல் இயந்திரம், சக்கர நாற்காலி என்றவாறு உபகாரங்கள் நடைபெறுகின்றமை பாராட்டப்படுகிறது.

ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் அல்வாய் ஊரைச் சேர்ந்த சின்னத்தம்பி என்பவருக்கும், பாண்டியன் தாழ்வு சின்னத் தங்கம் அம்மையாருக்கும், 1904.03.28ஆம் திகதி அவதரித்தார். தவத்திரு யோகர் சுவாமிகளின் அருட்பார்வை இவரை ஆட் கொண்டமையால் திருவாசகத் தேனில் ஊறித் தெய்வீக ஒளியில் திளைத்தார். இதன் பிரகாரமே தம்பு துரைராஜா அவர் களும் கவரப்பட்டார். திருப்பணித் தவமணி திரு சி. தியாகராஜா (எஸ்.ரி.ஆர்) அவர் களும் திருவாசகமணி திருவாசகம் ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளது பணியில் நனைந்த காரணத்தினால் தலைவராக இருந்து அவ ரது பணியினை மேற்கொள்கின்றார். மேற்படி ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகளது தொண்டர் சபையின் கட்டமைப்பிலே பொருளாளராக திரு வி.பி. மாணிக்கவாசகர் அவர்களின் சேவை மிகவும் பெறுமதியானது. திரிமூர்த்தி களாம் இம்மூவரினது அயராத முயற்சி யினால், அன்னதானம், கதாப்பிரசங்கம், பஜனைகள், கூட்டுப் பிரார்த்தனைகள், தியா னம், சமய நிகழ்வுகள், கருத்தரங்குகள், திருவாசகம் முற்றோதல், யாத்திரிகர் தங்கு மிட வசதிகள் எனப் பன்முகச் செயற்பாடு கள் நடைபெறுகின்றன.

ஸ்ரீமத் சபாரத்தினம் சுவாமிகள் ஆயுள்பூராகவும் தவப்பொழுதினை சிவப் பொழுதாக்கிய மகிமையினால், அவர் தம் தொண்டர் சபையினரும் தத்தம் சுகநலம் பாராது, சுயநலம் தேடாது, சிவமயமாக தொண்டாற்றி வருகின்றனர்.

**"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார்**
**கண்துஞ்சார்,**
**எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்**
**செவ்வி,**
**அருமையும் பாரார் அவமதிப்பும்**
**கொள்ளார்,**
**கருமமே கண்ணாயினர்"**



ஆம்! இவர்கள் ஆயிரம் பிறைகண்ட சிவநெறிப் புரவலர்களாக இன்றும் என்றும் இருப்பதனால், மன்னாரில் திருக்கேதீஸ்வரப் பெருமான் கௌரி அம்பாளோடு வரமீயக் காத்திருக்கின்றார்.

நாவலர் பெருமான், செட்டிநாட்டவர்கள், பசுபதிச் செட்டியார் வாயிலாகப் பேறு கொண்ட திருக்கேதீஸ்வரத்திலே, ஒரு தென்னங்கீற்றுக் கொட்டிலமைத்து திருத்தொண்டு புரிந்தவர்தான் சபாரத்தினம் சுவாமிகளாவார். 1940ஆம் ஆண்டு அளவில் இலங்கையின் திருத்தலங்களை எல்லாம் தரிசித்துக்கொண்டு ஈற்றில் திருகோணமலையிலிருந்து திருக்கேதீஸ்வரம் வந்து சேர்ந்தபோதுதான் அவருக்கு ஞான ஒளி வீசிற்று. கொட்டிலில் இருந்தவாறே நாளாந்தம் கோயிலுக்குச் சென்று திருக்கேதீஸ்வரப் பெருமானுக்குத் திருவாசகப் பாடல்களை நெக்குருகப்பாடி சொக்க வைப்பார். இறைவன் மட்டுமல்ல இறைவியோடு சேர்ந்து அடியார்களும் திருவாசகத்திற்கு உருகி நிற்பார்கள். இதன் பேறாகவே சபாரத்தின சுவாமிகள் திருவாசகம் என்றும் திருவாசகமணியென்றும் அழைக்கப்படலானார்.

திருவாசக முழுப்பாடல்களையும் மனனமாகவே பாடுந்திறமை கைகூடிவரப் பெற்றபேறதனால், சேர். கந்தையா வைத்திய நாதன் அவர்களையும் திருவாசக மான்மியம் கவர்ந்திழுத்தது. ஆதலால் பெரியாருக்குச் சுவாமிகள் வலதுகரமாகத் திகழ்ந்தார். இவ்வேளையில்த்தான் திருவாசக மடம் நிறுவியவராய் சுவாமிகள் பெரியாருடன் இணைந்து கௌரீசர் பாடசாலையையும், நெசவுசாலையையும் கட்டி முடித்தவராய், திருவாசக மடத்தில் முப்பத்தைந்து அடி ஆழமான கிணறு ஒன்றினை நேர்த்தியாகக் கட்டி முடித்தார். நல்லூர் திருவிழா நடைபெறும்போது, திருக்கேதீஸ்வரத்திலிருந்து கால் நடையாகவே சென்று வந்த காரணத்தினால் மன்னாருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையேயான ஒரு சமய சமூக சாத்வீக சகவாழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

28.03.1904 - 25.01.1988 வரையான காலப்பகுதியானது சைவ சமய வரலாற்றுக் காலப்பகுதியில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய காலமாகும். இவர் ஓர் ஆசிரியராகக் கடமையாற்றியபோதும் மேலதிகாரியுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் காரணமாக அப்பதவியைத் துறந்தார். பதவிகளும் பட்டங்களும் சிவப்பணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் என்பதனால் சுவாமிகள் ஆச்சிரம வாழ்க்கைக்குச் சரண் புகுந்தார்.

“திருப்பணி கருப்பிணிக்கு வித்திடக் கூடாது” என்பது சுவாமிகளது தாரக மந்திரம். ஆதலால் சுவாமிகள் சரவணமுத்துச் சுவாமியிடம் திருவாசக மடத்தை ஒப்படைத்து விட்டு ஞானபதம் புகுந்தார். திருவாசகம் முழுவதையும் பொருளோடுணர்ந்து பாடுவதிலும், பயன் சொல்லுவதிலும் வல்லவரான ஸ்ரீமத் சபாரத்தின சுவாமிகளது தவப்பயனின் விளைவாக மேற்படி தொண்டர் சபையினர், சுவாமிகள் எண்ணியபடி அவர் வழி குரு பணி சிறக்க, 25.01.2019, 26.01.2019 ஆகிய இரு தினங்களிலும், திருவடி வழிபாட்டினையும், குருபூஜையையும் நடாத்தி இருப்பது ஒரு சமய எழுச்சியை ஏற்படுத்தி உள்ளது.

நல்லை ஆதீன முதல்வர், மன்னார் இந்து ஆலயங்களின் ஒன்றியத் தலைவர் வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன் அவர்கள், கொழும்பு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபைத் தலைவர் விடைக்கொடிச் செல்வர் சி. தனபாலா அவர்கள், தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் டாக்டர் செ. மோகனதாஸ் அவர்கள்,

*வெற்றி பல நண்பர்களைப் பெற்றுத்தரும்.*

சின்மயாமிஷன் சுவாமி சிதாகாசானந்தா அவர்கள் கலந்து சிறப்பித்து விழாவினைப் பேறாக்கினார்கள்.

சூரிய சந்திரர் உள்ளவரை இக் கைங்கரியங்கள் சிவபூமிக்கு வரந்தர வேண்டும். பாலாவித் தீர்த்தம் மெய்யடியார்களின் வாழ்வில் நிலைபேறாகும்படி நாமும் திருக்கேதீஸ்வரம் சென்று வரம் பெறுவோமாக.

## தண்டையும் சிலம்பும் சிலம்பூடுருவப் பெருவடிவேல் கொண்டருள்வதும் செல்வச்சந்நிதியானே!

பந்தமகற்று மனக்குணப்பரப்பு மெவன்பாலுதிக்குமோ
எந்தவுலகு மெவனிடத்திலீண்டியிருந்து கரக்குமோ
சந்தமறையாகமங்கலை களனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த விறையாம் செல்வச்சந்நிதிவேல் கூரத் தொழுவோர்க்கு!

உலகுமுழுது நீக்கமற ஒன்றாய் நிற்கும் பொருளொன்று சந்நிதியே!
உலகிற் பிறக்கும் விகாரங்களுறாத மேலாவொளியாவதும் வேலே!
உலகம் புரியும் வினைப்பயனையூட்டும் களைகளென வுறாதவர்க்கு
உலகமுதலோங்கும் மேலாய செல்வச்சந்நிதியைச் சரணடைவோமே!

மூர்த்தியாகித்தலமாகி முந்நீர் தொண்டையாற்றுக் கங்கையான முதல்வேல்!
தீர்த்தமாகி யறிந்தறியாத் திறத்தினா லெவர்க்கும்வேல் மோட்சமாகும்!
நல்மனத்தினாளும் யறியாமையகற்றியாளும் செந்தில்வேல் மோகனன்நீறே!
கடவுண்முதலோர்க் கூறின்றிக்வேல் கொண்ட திருக்கரம் மோகன் ஆச்சிரமந்தானே!

செய்யும் வினையின் முதல்யாவும் செய்யப்படும் பொருள் சிவமயமே!
மெய்யனைய மோகனதாசின் உளமதாகுமந்தக் கருமப்பயன் யாவும் சிவமே!
உய்யும் வினையின் பயன்அகற்றி ஊட்டுவிப்பானெம் மோகனனே!
பொய்யிலிறையைச் சந்நிதிவேலினைப் புகழ்ந்து சரணமடைவோமே!

வேதமளந்து மறிவரிய செம்மல்யாவன் விழுத்தகைய ஆச்சிரமசுவாமியே!
வேதமுடிவில் வேல்நவிலும் விமலனாயோங்குவதும் மோகன சுவாமியே!
நாதமுடிவில் வீற்றிருக்கும் வேல்கண்ட சந்நிதியழகன் பாரோங்கும் மோகனனே!
போதமுதலின் ஞானவொளியைப் புகழ்ந்து பாடவென்றும் மருள்கூடுதுமே!

பாரெட்டிலுள்ளோரைக் குணமாக்கி வதிவான்வேலன் செல்வச்சந்நிதியே!
பாங்குடனமர்வார் வாழ்வெலாம் பதமலர்க் கூறின்றி சித்தமுத்தியாவதும் சந்நிதியே!
எண்ணுமிரண்டுமொன்றாகி யானந்தவானிடை யோங்கவைப்பதும் சந்நிதியே!
மண்ணுலக வாழ்வெலாம் மதிகாட்டி பதியூட்டும் செல்வச்சந்நிதியானே சரணம்!

-க. தெய்வேந்திரம்-

*விசுவாசமான நண்பன் தெய்வத்தின் சாயலானவன்.*

# வழித்துணை 22

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 பிரச்சினைக்கு உரியஇடம் கோயிலென்று எண்ணாதீர்
பிரச்சினையைத் தீர்ப்பதுவே கோயிலதன் அர்த்தமாகும்
அர்ச்சனையால் மட்டுமவன் அருளைப்பெற முடியாது
கரிசினையும் காட்டினால்தான் கருணைபெற முடியும்.

02 மரத்துக்கு மலருண்டு மலருக்கு வாசமுண்டு
பாலுக்கு சுவையுண்டு பழத்திற்கு ரசமுண்டு
மானுக்கு புள்ளியுண்டு மயிலுக்கு தோகையுண்டு
உனக்கிங்கு என்ன உண்டு காலமுண்டு பதிலைத்தேடு.

03 ஆலயம் என்பது இறைவனின் இல்லமாகும்
இறைவனது இல்லத்தில் எல்லாமும் எல்லோரதும்
நானென்றும் எனதென்றும் எனதென்றும் உனதென்றும்
நாமெண்ண நமைவிட்டு நெடுந்தூரம் இறைசெல்லும்.

04 வல்லமை அற்றேரென்று வையத்தில் சிலரைநாங்கள்
மெல்லவே தள்ளிவிட்டு மேற்கொண்டு நடந்துவந்தால்
அல்லைதொல்லை சூழ்ந்துளமை வல்லமை அற்றோராக்க
புல்லெனநாம் நினைத்தவரே பின் வல்லமைக்கு வாரிசாவார்.

05 பிச்சைகேட்டு வருவோர்தனையும் கொச்சைபடப் பேசிடாதீர்
பச்சைமனம் வருந்திநின்றால் உச்சமாகும் ஆத்மசக்தி
எச்சமது போட்டகொக்கும் எரிந்ததந்தச் சக்தியாலே
அச்சமின்றி அணைப்பீரவரை நிச்சயம்நீர் உயர்வீர்வாழ்வில்.

06 புகழ்ச்சிக்கு பூக்களும் மகிழ்ச்சிக்கு கனிகளும்
நிகழ்ச்சிக்கு இருக்கையும் திகழ்ச்சிக்கு பொருட்களும்
வெகிழ்ச்சிக்கு தடிகளும் அகழ்ச்சிக்குப் பிடிகளும்
இகழ்ச்சிக்கு இடமேயின்றி மரம்தரும் மாந்தரேதோ.

*பிறரிடம் குற்றம் காணாமல் நீ உன்னை ஒழுங்குபடுத்திக்கொள்.*

07 விமர்சனங்கள் மட்டுமிங்கு விளைவெதையும் தந்திடாது
அவரவர் கடமைகளை அவரவரே செய்ய வேண்டும்
உவர் நிலத்து மண்ணும்கூட உயர்தரத்து உப்பைநல்கும்
எவரிங்கு வேண்டாதவரோ அவராலும் இங்கொன்றாகும்.

08 படைப்பதற்கு தட்டமும் காப்பதற்கு கனியதுவும்
அழிப்பதற்கு தேங்காயும் அருள்வதற்கு தீபமும்
மறைப்பதற்கு வெற்றிலையும் அர்ச்சனைக்காய் கொடுத்திடுதல்
ஐந்தொழிலும் செய்தென்னை ஆட்கொள்வாய் என்பதற்காம்.

09 நீங்கள் நினைப்பதெல்லாம் சரியென்று எண்ணுமுன்னர்
உங்களில் ஒருவரிடம் கேட்டுமதைப் பாருங்கள்
எங்களது எண்ணங்கள் தவறாயும் இருந்திடலாம்
பங்கம் பிறர்க்கானால் பாவங்கள் எமக்காகும்.

10 பரிபாலனம் என்பது சரியாசனம் பெறுவதன்று
மரியாதையோடுசில பரிகாரம் புரிவதாகும்
தெரிந்ததை நடந்தாலே விரிந்திடும் இறைபக்தி
புரியாமல் நடப்பதெல்லாம் பரிதாபத்திற் குரியதாகும்.

சந்நிதி வேலனை சொல்லி மகிழ்வார்க்கு
அன்பின துணைமை புரியும்.

வல்வினை தீர்த்திடும் வேல்முருகன் சந்நிதியில்
எல்லாந் தருவான் எமக்கு.

சந்நிதிச் சண்முகன் ஆற்றங் கரைநின்றால்
எந்நிதியும் தானாக எட்டும்.

ஞானச் சுடராய் ஒளிவீசும் கந்தனை
யானறிவு மாற்ற லிலன்.

எல்லார்க்கும் வழிகாட்டும் சந்நிதி மைந்தன்
நல்லார்க்கு நல்லதே செய்வான்.

அறவழி வாழும் அறிவுடை ஸ்வாமி
பிறர்கெட எண்ணுவாரா கார்.

நெஞ்சு உவந்தீயும் ஆச்சிரம ஸ்வாமிகள்
அஞ்சுதலில் லாதவரா வார்.

சந்நிதியில் நின்றருளும் சண்முகா நீயெமக்கு
தந்திடென்றும் ஞானச் சுடர்.

- சீ. சாந்தநாதன் -

*கடுமையாக உழைப்பதால் சாதனைகளைப் படைக்க முடியும்.*

# பொறுமையின் பெருமை

– திருமதி த. வசந்தகுமாரி அவர்கள் –

மார்ச் மாதம் 8ஆம் திகதி சர்வதேச மகளீர் தினம் வெகு விமரிசையாக நாடு பூராவும் கொண்டாடப்பட்டது. இம் மகளீர் தினமானது எமது சமூகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களுக்கு எந்த வகையில் பொருத்தமானதாக அமைந்தது என்கின்ற வினாவுடன் இக்கட்டுரையைத் தொடர்கின்றேன்.

கடந்த 10ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஓர் ஆலயத்தில் இறை வழிபாட்டிற்காக பலர் நிறைந்திருந்தனர். பூஜைகள் ஆரம்பமாகி சுவாமி உள்வீதி உலா வருவதற்காக எழுந்தருளி வசந்தமண்டபத்தில் இருந்து சற்றுத் தூரம் சென்றதும் அடியார்கள் அனைவரும் அம்பிகைக்குப் பின்னும் முன்னும் சென்றுகொண்டிருக்கிறார்கள். எனக்கு தடிமன் காய்ச்சல் காரணமாக நான் அமைதியாக வசந்தமண்டப வாயிலில் அமர்ந்திருந்து பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தேன். அவ்வேளை 12 வயது மதிக்கத்தக்க சிறுமி. மிகவும் ஆழமாக மெய் மறந்து இறைவனைப் பிரார்த்தனை செய்வதை அவதானித்த எனக்கு இந்தச் சிறுமிக்கு என்ன பிரச்சினை? இவ்வளவு நேரம், அதுவும் தனிமையில் நின்று வழிபாடு செய்கின்றாள். மனம் கேட்கவில்லை. எதற்கும் அச்சிறுமியின் அருகில் சென்று என்னம்மா அம்பாளிடம் இவ்வளவு கவலையுடன் என்ன வரம் கேட்கின்றீர்கள் என்றேன். அச்சிறுமி எனது கரங்களை இறுகப்பற்றிய வண்ணம் "எனது அம்மாவும் அப்பாவும் ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் நீண்டகாலம் வாழவேண்டும்" என்றுதான் இறைவனைக் கேட்கின்றேன் என்றது. அந்தப் பிஞ்சு மனது வெந்து கண்ணீர் துளிகள் கண்ணில் நிரம்பியது. ஏன் அம்மா எங்கே? அப்பா எங்கே? என்ற எனது அடுத்த வினா தொடர எனது அப்பாவும் அம்மாவும் பிரிந்து வாழ்கின்றார்கள். எதிர்வரும் 18ஆம் திகதி வழக்கு அன்று இவர்கள் இருவரையும் நீதவான் ஒற்றுமையாக்கி விடவேண்டும் என தனது வேண்டுதலை அம்பாள் நிறைவேற்றுவாவா? என என்னைத் திருப்பி கேள்வி கேட்டாள் அந்தப் பாலகி. நம்பிக்கையுடன் ஏங்கி நிற்கும் அச்சிறுமிக்கு நிச்சயமாக இருவரும் ஒன்று சேர்ந்து நீங்கள் அனைவரும் சந்தோஷமாக வாழ அம்பாள் அருள்புரிவாள் என அக்குழந்தைக்கு நான் ஆறுதல் கூறினாலும் எனது மனம் ஆறுதல் அடையவில்லை.

எத்தனையோ பெற்றார்கள் பிள்ளைகள் பிரச்சினைக்குரியவர்களாக இருக்கின்றார்கள். அவர்களை வழிப்படுத்தி நெறிப்படுத்தித் தரும்படி இறைவனிடம் பிரார்த்தனை செய்ய இங்கு, நிலைமை மாறாக இருக்கின்றது. இந்த விடயம் ஆன்மீகம் சம்பந்தப்பட்டதாக இல்லாவிட்டாலும் எமது ஞானச்சுடர் பல சமூகப் பணிகளையும் இணைத்துக் கொண்டிருப்பதால் இந்த மகளீர் தினத்தில் எனது அன்புச் சகோதரிகளிற்கு பண்பான அறைகூவல் ஒன்றை விடுக்கின்றேன். பெண் என்பவள் பொறுமை மிக்கவளாக இருக்க வேண்டும் என ஏன் நமது முன்னோர்கள் கூறிச் சென்றார்கள் என்றால் ஒவ்வொரு பெண்ணும் பொறுமை காப்பவளாக மட்டுமன்றி அடுத்தவருக்கு தீங்கு செய்ய எண்ணாதவளாகவும் இருந்து

*உழைப்பில் பலர் பங்கெடுத்துக்கொண்டால் வேலை எளிதாகிவிடும்.*

கொண்டாலே நீதிமன்றிற்கு பல விவாகரத்து வழக்குகள் அரங்கேறமாட்டாது. இந்தச் சிறுமி யின் வேதனைபோல எத்தனை பிஞ்சு உள் ளங்கள் அன்பிற்காகவும் பாசத்திற்காகவும் ஏங்கித் தவிக்கின்றார்கள். சற்று சிந்தியுங் கள். நாங்கள் நாங்களாக இருக்கும்வரை எம்மை யாரும் வெல்ல முடியாது. எமக்குச் சுதந்திரம் வேண்டும் என்கிறோம். எமக்கு எது சுதந்திரம் பெற்றோருடன் வளரும்வரை. அவர்களுடன் அன்பாகவும் ஒற்றுமையாக வும் வாழ்வோமேயானால் எமக்கு அதுவே பெரிய சுதந்திரம். இல்லறத்தில் கண வனைப் புரிந்து வாழ்ந்தால் அதுவும் ஒரு வகையான சுதந்திரம்தான். பெண்களாகிய நாம் பொறுமையை இழக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பலருடைய உள்ளங்களை வேக வைக்கின்றோம். இதனை நாம் நன்கு உணரவேண்டும். கல்வி கற்று தொழில் செய்வதுதான் சுதந்திரம் அல்ல. அதற்கு மேலாக எமது உறவுகளை நேசிக்கப் பழக வேண்டும். பதவி என்பது 60 வயதுடன் முடிந்துவிடும். உறவுகள் என்பது உயிர் உள்ளவரை தொடர்கின்றது.

பல்வேறு நல்ல விடயங்கள் நய முடன் எடுத்துரைக்கும் ஞானச்சுடர் மலரின் ஊடாக பாரதி கண்ட புதுமைப்பெண்களைப் படைத்திட சந்நிதிவேற் பெருமான் துணை நிற்கட்டும்.

## எங்களை என்றும் காத்து அருள் புரிவான்!

செல்வச்சந்நிதி முருகனிடம் வந்து பாருங்கள்
அல்லலெல்லாம் தீர்த்துவைப்பான் அமர்ந்து பாடுங்கள்
அன்னதானக் கந்தனிடம் வந்து பாருங்கள்
சொன்ன குறைகள் தீர்த்திடுவான் இருந்து கேளுங்கள்

வேல்பிடித்த வேலனிடம் வந்து பாருங்கள்
சூல்கொண்ட நோய்தீர்ப்பான் உருண்டு வாருங்கள்
தெய்வயானை மணாளனிடம்வந்து பாருங்கள்
செய்தபாவம் அழித்திடுவான் அமர்ந்து போற்றுங்கள்.

உமையம்மை பாலனிடம் வந்து பாருங்கள்
சுமையிருந்தால் இறக்கிடுவான் தியானம் செய்யுங்கள்
நின்றும் இருந்தும் கிடந்தும் என்றும் நினையுங்கள்
என்றும் காத்து அருள்புரிவான் செல்வச்சந்நிதி முருகன்.

-உ. நிந்துஜா-

*நற்குணம் உள்ள இடத்தில் வணக்கமும், இன்சொல்லும் இருக்கும்.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...

| | | |
|---|---|---|
| நா. ரஞ்சன் | புன்னாலைக்கட்டுவன் | 5000. 00 |
| க. தங்கவேல் | குப்பிளான் | 5000. 00 |
| மு. பிரதீபன், பார்த்தீபன் | குப்பிளான் | 2000. 00 |
| த. சர்மிளா | கனடா | 5000. 00 |
| விஜயசுந்தரி சபாரத்தினம் | மலேசியா | 5000. 00 |
| நியூ மைதிலி நகைமாடம் | யாழ்ப்பாணம் | 500. 00 |
| கா. தயாபரன் | கொழும்பு | 6மூடை அரிசி |
| ச. ஜனகன், ச. கிருபன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| V.T. நவரெத்தினம் | திருகோணமலை | 1000. 00 |
| S. சிவச்சந்திரன் | பிரான்ஸ் | 5000. 00 |
| மா. சுஜீபன் | லண்டன் | 25000. 00 |
| சி. மங்கையற்கரசி | நாவற்குழி | 5000. 00 |
| க. சரவணபவன் | சாவகச்சேரி | 1000. 00 |
| சே. சுதாகரர் | இடைக்காடு | 1000. 00 |
| ம. பாலசுப்பிரமணியம் | கோண்டாவில் | 7000. 00 |
| S. சுசீபன் | கரணவாய் | 10000. 00 |
| இ. நகுலேஸ்வரி குடும்பம் | குப்பிளான் | 5000. 00 |
| ம. ரிதுஷன் குடும்பம் | அச்சுவேலி | 5000. 00 |
| திருமதி கணேசு | பருத்தித்துறை | 5000. 00 |
| மு. அமிர்தலிங்கம் குடும்பம் | லண்டன் | 5000. 00 |
| ஸ்ரீரஞ்சினி யோகேஸ்வரி | புன்னாலைக்கட்டுவன் | 2000. 00 |
| சி. சாந்தினி | புன்னாலைக்கட்டுவன் | 1000. 00 |
| N. முரளி | லண்டன் | 15000. 00 |
| J. விஜயமாலா | பருத்தித்துறை | 2000. 00 |
| சி. கலைவாணி | சாவகச்சேரி | 2000. 00 |
| S. கந்தசாமி குடும்பம் | அளவெட்டி | 1500. 00 |
| S. துவிதாஸ் | கனடா | 10000. 00 |
| N. சிவசங்கர் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| ஆ. சறோஜாதேவி | நவக்கிரி | 1000. 00 |
| வை. ராசம்மா | நவக்கிரி | 1000. 00 |
| அஜந்தன் சரண்யா | தாவடி | 1000. 00 |
| திரு சந்திரகாசன் குடும்பம் | லண்டன் | 1000. 00 |
| திரு லோகநாதன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |

*நம்மை உயர்த்துவது செயலன்று; செய்வதிலுள்ள ஆர்வமே.*

| | | |
|---|---|---|
| தம்பு தேவராஜா | பண்டத்தரிப்பு | 2000. 00 |
| ஜெ. அகிலன் | கோண்டாவில் | 2000. 00 |
| ர. ரேணுகா | ஜேர்மனி | 2500. 00 |
| இ. மணிவாசகன் | அவுஸ்திரேலியா | 20000. 00 |
| ச. கஜன் | கொழும்பு -6 | 1000. 00 |
| யோகநாதன் சக்திவேல் | சங்குவேலி (சுவிஸ்) | 10000. 00 |
| ந. அபிநயா | மீசாலை | 15000. 00 |
| வே. ஜெயக்குமார் | சுவிஸ் | 1மூடை அரிசி |
| திரு தனேஸ்குமார் குடும்பம் | நவக்கிரி | 5000. 00 |
| ச. தர்ஷன் | கொழும்பு | 500. 00 |
| S. ராஜேஸ்வரி | பத்தமேனி | 1000. 00 |
| பொ. பரமநாதன் குடும்பம், ப. பகீரதன் குடும்பம் | கொழும்பு | 30000. 00 |
| J.A. சகன் | அச்சுவேலி | 2000. 00 |
| M. பாலகிருஷ்ணன் | பருத்தித்துறை | 5000. 00 |
| மு. அட்சயன் | பன்னாலை (U.K) | 10000. 00 |
| சி. குமாரசாமி குடும்பம் | பத்தமேனி | 1000. 00 |
| K. சுதாகரன் | U.K | 2000. 00 |
| பா. அபினாஸ் | புத்தூர் | 1000. 00 |
| K. சிவலிங்கம் | கரவெட்டி | 1000. 00 |
| J. சஞ்சிகா | சங்கானை | 1000. 00 |
| R. யசாந் | கொக்குவில் | 4000. 00 |
| ம. ரஜனி | U.K | 2000. 00 |
| N. குணரட்ணம் | புன்னாலைக்கட்டுவன் | 1000. 00 |
| S. ஹரி | கொழும்பு | 1000. 00 |
| மயூரன் பிரனேஷ், மயூரன் நவீனா அந்திரான் | நெல்லியடி | 2000. 00 |
| திருமதி ச. சக்திவேல் | அவுஸ்திரேலியா | 1மூடை அரிசி |
| இ. திருக்குமரன் | சங்குவேலி | 1000. 00 |
| K. கணேசலிங்கம் | கொழும்பு | 10000. 00 |
| T. சிவகுமார் | சாவகச்சேரி | 1000. 00 |
| திருமதி பி. ரஜனி | வயாவிளான் | 2000. 00 |
| திரு ஞானச்சந்திரன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| திரு ரட்னேஷ்வரன் குடும்பம் (பிள்ளையார் ஸ்ரோர்ஸ்) | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| ரங்கநாயகி நினைவாக | மல்லாகம் | 5000. 00 |
| ஆனந்தராசா, ஞானசொரூபன் | சுண்டுக்குளி | 1000. 00 |
| திருமதி A.S.S. ராமச்சந்திரன் | அல்வாய் | 5000. 00 |
| க. கந்தவனம் | லண்டன் | 10000. 00 |
| மு. சாரா | நெல்லியடி | 2000. 00 |

(தொடரும்...

*கடினமான உழைப்பு தெய்வ வழிபாட்டுக்குச் சமம்.*

# இந்து சமயமும் இந்து மக்களும்

– திரு ஆர்.வீ. கந்தசுவாமி அவர்கள் –

இந்த உலகில் மிகவும் தொன்மை யானது இந்து மதம். காலங்காலமாக நமது முன்னோர்கள், ஆன்றோர்கள், சமயக் குரவர்கள் முதலியோரால் கட்டிக் காத்து வந்தது இந்துமதம். இன்று மனிதனின் விஞ்ஞானத்தின் ஆரம்பத்துக்கு அன்றே அடித்தளம் வகுத்தது இந்துமதம். எம்மதமும் சம்மதம் என்ற உயரிய கோட்பாட்டுடன் கடவுள் ஒருவனே என்று உலகிற்கு இடித்துரைத்தது இந்துமதமாகும். மனிதனை மனிதப் பண்புடன் வாழ வழிகாட்டியது இந்து மதம். இத்தகைய பெருமைக்குரிய மதமானது இன்று எங்கே போய்க்கொண்டிருக்கின்றது? நாம் வளர்ச்சி கண்டு கொண்டிருக்கிறோமா? அல்லது வீழ்ச்சியின் ஆரம்பத்துக்கு அடித்தளம் இட்டு வகுத்துக் கொண்டிருக்கிறோமா? நமக்கே விளங்காத நிலையில் உள்ளோம் என்பதுதான் நிதர்சனமான உண்மையாகும்.

"நாம் புத்தகங்களினூடாகப் படித்துத் தெரிந்த சமய உண்மைகள், நம் தாய் தந்தை, பாட்டன், பாட்டி வழியாகச் செவி வழி புகுந்த சமயக் கோட்பாடுகள் எந்த அளவு நம்மால் கடைப்பிடிக்கப்படுகின்றன.?

இன்று நமது நாட்டிலே இந்து சமயத்திற்கு மாறான பல கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றன. தற்போது பாடசாலைப் படிப்பில் எவ்விதமான தெய்வீக சம்பந்த பாடத்தையோ, நீதிப் பாடங்களையோ காண்பது மிகவும் அரிதாக உள்ளது. இந்த நிலையில் எமது வருங்கால இளைஞர்களின் வாழ்க்கையில் நீதி, நேர்மை, கடவுள் பக்தி காணப்படுவது அரிதாகிவிடும். நம் குழந்தைகளின் மனதில் இறையருள் கனியும்படி வளர்க்க வேண்டும். நாம் அறத்தைக் காப்பாற்றினால், அறம் நம்மைக் காப்பாற்றும். அறத்தை அழித்தால் அறம் நம்மை அழிக்கும். அத்தகைய அழிவில் இருந்து காப்பாற்றச் சமயக் கல்வி இன்றியமையாதது. மாணவர்களை ஒன்று திரட்டி சமய வகுப்புக்களை நடத்தி நாட்டிற்கும், நமக்கும் நாம் நலம்தேட வேண்டும்.

அற்ப ஆசைகள் நிறைவேறும் என்னும் மோகத்தில் மத மாற்றங்கள் மலிந்து காணப்படுகின்றன. மக்கள் எமது சமய கலாசாரத்தை விடுத்து வெளிநாட்டு நாகரிக மோகத்தால் பித்தேறி ஒழுக்கம் கெட்டு வருகின்றனர். சிறார்களின் உள்ளங்களில் மனித விழுமியங்களைப் பதியச் செய்வதற்கு அறநெறிப் பாடசாலைகள் இன்றியமையாததாகும். ஒழுக்கம் நிறைந்த சமுதாயம் ஒன்றிற்கு வித்திடுவது அறநெறிப் பாடசாலையாகும்.

ஒவ்வொரு மனித உள்ளத்திலும் மனச்சாட்சி தெய்வீகக் குரலாக இருக்கின்றது. அத்தெய்வீகக் குரலை வெளிப்படுத்துவது அறநெறிக் கல்வியாகும். நம் கோவில்களில் சமய வழிபாட்டு முறைகள் காலங்காலமாகக் கடைப்பிடித்து வந்த பாரம்பரிய முறைகளில் இருந்து விலக ஆரம்பிப்பதை நம்மால்

*உற்சாகமான உழைப்பு இல்லாமல் உயர் வெற்றி எதையும் சாதிக்க முடியாது.*

காணமுடிகின்றது. மனித சக்திக்கு அப்பாற் பட்ட ஒரு சக்தி உண்டு என்பதை எல்லா மதங்களும் ஏற்றுக்கொண்டுதான் இருக்கின் றன. அதைத்தான் கடவுள் என்கின்றோம். மனிதனை நல்வழிப்படுத்தி இந்த மானிட வாழ்வை பயனுள்ளதாக்குவதற்கு வழிகாட்டி யாக அமைந்துள்ளது இந்து சமயமாகும்.

இன்று நம் நாட்டில் காணப்படும் சில பிரசித்தி பெற்ற கோவில்கள் தொடக்கம் ஏனைய கோவில்கள்வரை எவ்வாறு நம் பாரம் பரியச் செயற்பாடுகளில் இருந்து விலகிச் செல்கின்றன என்பதைக் காண முடிகின்றது.

சில மதத் தலங்களுக்கு வேற்று மதத்தவர்கள் செல்ல முடியாது. ஆனால், நாம் எம்மதமும் சம்மதம் என்ற நிலையில் நமது சமயத் தலத்தில் எல்லோரையும் அனுமதிக்கின்றோம். எமது ஆலயங்கள் பல உல்லாசப் பிரயாணிகளின் காட்சிக் கூடங் களாக மாறிவருகின்றது. பூஜை நடக்கிறதோ இல்லையோ அந்த அரைகுறை ஆடைகளுடன் நிற்கும் உல்லாசப் பிரயாணிகளுடன் நாம் கும்பிடவேண்டிய நிலை. நம் மதம் கட்டுப்பாடு இல்லாத மதம்தான். யாரும் வரலாம், போக லாம். அதற்காக நமது சுயக் கட்டுப்பாட்டை மீறவைக்கும் இந்தக் கலாசாரச் சீரழிவுகளை நாம் அனுமதித்தல் வேண்டுமா?

எமது சமயத்தைச் சரியாக வழி நடத்தக்கூடியவை ஆலயங்கள். ஆனால் இன்று எமது இளைஞர்கள் ஆலயம் சென்று வழிபடுவது என்பது குறைவாகவே இருக் கின்றது. எமது சமய வாழ்வு நல்ல நிலைக்கு வரவேண்டுமென்றால் இந்துக்களாகிய நாம் தான் அதனை வழிநடத்த வேண்டும். இப் பொழுது எந்தப் பத்திரிகையைப் பார்த்தாலும் கோவில் உண்டியல் உடைப்பு, விக்கிரகங் கள் திருட்டு என்றுதான் செய்திகள் வெளி வருகின்றன. எமது இந்துமதம் ஏன் இவ்வா றானவற்றுக்குள் செல்கிறது என்று பார்க்க வேண்டிய பொறுப்பு எங்களுக்குத்தான் இருக் கின்றது. எமது சமயத்தைப் பாதுகாக்க வேண்டிய கடமை நம் ஒவ்வொருவருக்கும் உரியதாகும்.

மனித வாழ்க்கையில் இளைஞர் பருவம் என்பது முக்கியமான காலப் பருவ மாகும். இளைஞர்கள் சமய சமூகக் கடமை களுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயற் பட்டால் நமது சமூகத்தில் பாரிய மாற்றங் களை ஏற்படுத்தலாம்.

ஒரு ஏழை விவசாயியின் மதப்பற்றை கீழ்வரும் கதைமூலம் அறிந்து, நாமும் பின் பற்றி வாழ்வோமாக.

ஓர் ஊரில் ஒரு ஏழை விவசாயி இருந்தார். அவர் தன் காலில் ஏற்பட்ட புண் ணிற்கு பலவிதமான சிகிச்சைகள் மேற்கொண் டும் புண் ஆறவில்லை. ஆகவே அவர் ஒரு கிறிஸ்தவ பாதிரியாரின் ஆலோசனைப்படி ஒரு, கிறிஸ்தவ மிஷன் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார்.

ஒருநாள் அப்பாதிரியார் அந்த ஏழை விவசாயியிடம் மருந்துச் செலவு 10,000 ஆகியுள்ளது தாங்கள் நிச்சயமாய் கிறிஸ் தவராக மதம் மாறினால் நீங்கள் பணம் ஏதும் தரத் தேவை இல்லை எனக் கூறினார்.

அந்த ஏழை விவசாயியிடம் ஒரு தோட்டம்தான் இருந்தது. அதைக்கொண்டு தான் அவர் தன் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தார். என்றாலும் அவர் அந்த தோட்டத்தை விற்று ரூபா 10,000 கொடுத்துவிட்டு பாதிரியா ரிடம் பின்வருமாறு கூறினார். "இந்துமதம் என்பது விற்கும் பொருள் அல்ல" எனக் கூறி பாதிரியாரைத் தலை குனிய வைத்தார்.

இந்தக் கதையின்மூலம் இந்து மதத் தில் பற்றுறுதிகொண்டு, எதற்கும் விலை போகாத உண்மையான சமயியைக் கண்டு பெருமைப்பட முடிகிறது.

*ஏழ்மை என்ற நோய் அகல வேண்டுமானால் உழைப்பு என்ற மருந்தைக் கொடு.*

# ஔவையாரின் பாடற் சிறப்பு

– **திரு மூ. சிவலிங்கம்** அவர்கள் –

முழுமுதற் கடவுளாம் சிவபெருமான் அநாதியானவர். உலகம் உய்யும் வண்ணம் தமது சிவநெறியையும் ஆதியானதும், வழிபாடு செய்ய மிகவும் தெளிவானதுமான செந்தமிழையும் உபதேசிக்குமாறு பல்லாயிரம் வருடங்களுக்கு முன் திருமூலருக்கு ஆணையிட்டார். தமிழ் மக்கள் தமிழில் உபதேசம் பெற இறையருள் தூண்டியது. திருமூலர் தென் தமிழகத்திலமைந்த திருவாவடுதுறையில் அமர்ந்து மாலாங்கர் முதலான சித்தர்கள் எழுவருக்குச் செந்தமிழில் உபதேசித்துத் தெளிய வைத்தார். செந்தமிழில் உபதேசித்ததைப் பாடல்மூலம் குறிப்பிட்டார்.

**"செந்தமிழ் ஆதி தெளிந்து வழிபடு**
**நந்தி இதனை நவம் உரைத்தானே"** (நந்தி இறைவன்)

இறைவன் தமது திருவிளையாடல்மூலம் சைவத்துடன் தமிழை வளர்க்கும் ஆதரவு ஆதியில் அமைந்ததாகும். அன்றுமுதல் தமிழ் சீருடன் சிறப்புற வளர்ந்தது. நீடிய காலத்தின் பின் மொகலயர்கள் மற்றும் வேறின மதத்தவர்கள் தமது சுயநல நோக்கில் எம்மக்களைத் தமது மொழி மதத்தைத் தழுவ வற்புறுத்தினர். இதனால் காலத்துக்குக் காலம் சைவமும் தமிழும் நலிவடைந்தன. தமது சைவமும் தமிழும் சிறப்படைய வேண்டியதை நோக்கிய இறைவனின் சித்தப்படி சரஸ்வதிதேவி கடைச்சங்க காலத்தில் ஔவையாக அவதரித்தார் என்பது புராண வரலாறாகும்.

## ஔவையாரின் அவதாரம்

பகவன் என்னும் அந்தணர் தீர்த்த யாத்திரைக்குச் சென்றவர். அக்காலத்தில் தீர்த்த யாத்திரை செல்பவர்கள் காசிக்குப் போய் இராமேஸ்வரம் வரை பாதயாத்திரையாகச் சென்று அவ்வவ்விடங்களில் ஆலய தரிசனஞ் செய்தும் அருகேயுள்ள அன்ன சத்திரங்களிற் தங்கியுமே பாதயாத்திரையைத் தொடர்ந்தனர். இதற்கமைவாக பாதயாத்திரை சென்ற பகவன் அன்னசத்திரமொன்றில் தங்கிய காலத்தில் அன்னசத்திர மேலாளரின் மகளான ஆதியைக் கண்டார். பகவன் தமது மையலினால் ஆதியைத் தாம் மணம் செய்வதாக ஆதியின் தந்தையிடம் கூறி அழைத்துச் சென்றார்.

பகவனால் அழைத்துச் செல்லப்பட்ட ஆதி சாதியால் குறைந்தவளென அறிந்ததும் அவளை விட்டுப் பிரிய முற்பட்டார். பின் இருவரும் இணக்கத்துடன் தமக்குப் பிறக்கும் குழந்தைகளைப் பிறந்த இடத்திலேயே விட்டுச் செல்லவும் ஏற்பாடானது. இந்த நியதிப்படி சோழநாட்டின் உறையூரிலுள்ள சாவடியில் முதற் பிள்ளையாகப் பெண்மகவொன்று பிறந்தது. பெண் பிள்ளையின் அழகும் அதன் கவர்ச்சியும் இதனால் ஏற்பட்ட தாய்ப்பாசமும் ஆதியின் சிந்தனையைத் திகைக்க வைத்தது. அச்சமயம் கணவர் முன் நிபந்தனைப்படி அழைக்கிறார். ஆதி தயங்குகிறாள். தெய்வீகக் குழந்தை தமது ஞான உணர்வால் தாயின் நிலையை உணர்ந்து பிறந்த சில நொடிகளில் தாயைத் துணிந்து செல்லுமாறு பாடிய பாடலை அறிவோம்.

*கடுமையாக உழைப்பதைத் தவிர வெற்றிக்கு ரகசியம் வேறு இல்லை.*

"இட்டமுடன் என்தலையில் இன்னபடி என்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ - முட்ட முட்டப்
பஞ்சமே யானாலும் பாரம் அவனுக் கல்லாய்
நெஞ்சமே அஞ்சாதே நீ"

என்று பாடியதும் ஆதி மனத்தேற்றத்துடன் பிள்ளையை விட்டகன்று கணவனுடன் சென்றாள். அடுத்த சேரியிலுள்ள பாணனொருவன் அப்பிள்ளையை எடுத்துச் சென்று ஔவை எனப் பெயரிட்டு அன்புடன் அரவணைத்து வளர்த்தான். ஔவை பாணனின் சேரியிலுள்ள அயற்சிறார்களுடன் கூடி விளையாடியும் அயலிலுள்ள பிள்ளையார் கோயிலுக்குச் சென்று இடையறாது வழிபட்டும் வந்தாள்.

## ஔவை முதுபெரும் பாட்டியானார்

இறையருளால் தெய்வாம்சமாக உதித்த ஔவை பாணர்களின் கல்வி கலைகளையும் நன்கு கற்றுத் தேறிய சைவ பக்தியுள்ள பருவ மங்கையானார். ஔவைக்கு தமது அவதாரப்படி தமிழ் வளர்க்கும் கடமையை இறையருள் உணர்த்தியது. தமது மங்கைப் பருவம் அக்காலத்துப் புலவர்களான கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி போன்ற பெரியார்கள் மத்தியில் தலை நிமிர முடியாதென உணர்ந்தார். வழமைபோலப் பிள்ளையாரை வழிபடச் சென்ற ஔவை தமக்கு இடையூறாக உள்ள இளமைப் பருவத்தை நீக்கி முதுமைப் பருவத்தைத் தருமாறு வேண்டி ஆலய முன்றலில் வீழ்ந்து வணங்கினார். பிள்ளையாரின் பேரருளால் எழும்போது முதுபெரும் பாட்டியானார்.

ஔவை மூதாட்டியாகப் பார் போற்றும் பெண் புலவரான காலம் கடைச்சங்க காலமாகும். இச் சமகாலத்தில் ஆதி பகவன் தமது தொடர்பில் உப்பை, உறுவை, வள்ளி, அதியமான், கபிலர், வள்ளுவர் என மேலும் ஆறு பிள்ளைகளைப் பிறந்த இடங்களிலேயே விட்டுச் சென்றனர். ஔவையைப்போல ஏனைய ஆறு பேரும் பிறரால் எடுத்து வளர்க்கப்பட்டு பெரும் புலவர்களாகத் தமிழுக்கு அணி சேர்த்தனர். வள்ளுவர் ஔவையைப்போலப் பிரகாசித்துத் திருக்குறளைப் படைத்தார். ஏனைய ஐவரும் ஏனைய புலவர்களைப்போல வாழ்ந்தனர். இவை யாவும் இறைவனின் சித்தப்படியான தமிழ் வளர்க்கும் திருவிளையாடலாகும்.

## ஔவையின் புலமை

ஔவை மூதாட்டி இறைவனின் அருட்சித்துப்படி தொடர்ந்த கல்விப் புலமையால் அக்காலத்து ஏனைய புலவர்கள் போலன்றி ஏழையாய், எவர்மீதும் அன்பும் பரிவும் காட்டும் மாதாவாகவும் வாழ்ந்தார். அக்காலத்தில் கம்பர் ஆயிரம் பொற்காசுகள் வாங்கிப் பாடிய கர்வத்தை நீக்கவும் இறையருள் பாலித்தது. சரஸ்வதி தேவியின் அம்சமாகப் பிறந்ததால் நாவில் சரஸ்வதி நர்த்தனமாட ஏழைப் புலவராக அன்பே உருவான மூதாட்டியாகப் பவனி வந்தார்.

அக்காலத்தில் புலவர்கள் தம் பணிக்காக வெகுதூரம் நடந்து சென்று வசதி படைத்தோரிடம் பசிக்கு உணவாகவும் பொருளாகவும் பெற்றே வாழ்ந்தனர். புலவர்களுள் கம்பர் கவிபாடுவதில் வல்லவர். இவர் ஒருவர்மீது பரிந்து பாடினால் பாடல் பெற்றவர் பல சீரும் பெற்றுச் சிறப்படைவர். இதனால் கம்பர் கல்விச் செருக்கினால் யாரேனும் தம்மைப்

பற்றிப் பாடுமாறு கேட்கும்போது ஆயிரம் பொன் கிரயமாகப் பெற்றே பாடுவது வழக்கம். கம்பரின் கவித்திறமையை சிலம்பி என்னும் தாசி அறிந்தாள். அக்காலத்தில் வறுமையால் தமது வாழ்வாதாரம் ஏதுமின்றி வாடிய சிலம்பி தமது பெயரில் கம்பர்மூலம் பாடுவித்து நன்மையடையலாமென எண்ணினாள். இதன் நோக்கில் அதுவரை தான் தேடிய பொன் ஆபரணங்கள் யாவற்றையும் விற்றதால் 500 பொன் கிடைத்தது. தனது ஏழ்மையைக் கூறியாவது பாடலைப் பாடுவிக்கும் பேராவலுடன் கம்பரை நாடிச் சென்றாள். சிலம்பி தன்னிடமிருந்த 500 பொன்னையும் கம்பரிடம் கொடுத்துத் தன்மீது பாடல் பாடுமாறு பணிந்தாள். கர்வம் கொண்ட கம்பர் ஆயிரம் பொன் பெற்றே பாடும் என்னால் முழுமையாகப் பாடமுடியாது எனக்கூறி பின்வரும் இரு வரிகளையும் மட்டும் பாடினார். அவர் பாடியவை

**"தண்ணீரும் காவிரியே தார் வேந்தன் சோழனே**
**மண்ணாவதும் சோழ மண்டலமே"**

என்னும் இரு வரிகளையும் பாடியவர் சிலம்பியின் வீட்டுத் தெருவாயிற் சுவர்மீது எழுதிவிட்டுச் சென்றார்.

இதனால் கலக்கமுற்ற சிலம்பி, தெய்வமே! எனது உடமைகளை விற்று பாடலும் நிறைவேறவில்லை. வயிற்றுப் பிள்ளையை நம்பிக் கையிற் பிள்ளையை ஆற்றில் வீசியது போல யாவற்றையும் இழந்து சோகக் கடலில் மூழ்கினாள். உண்ண உணவுமின்றி உடுக்க ஆடையுமின்றித் தவித்தாள். உயிர் வாழ்வதற்காக ஒருவேளை கூழோ கஞ்சியோ தயாரித்து காலமெல்லாம் வருந்தினாள்.

### கூழுக்குப்பாடி

சிறந்த கல்வி வித்தகராகவும் அன்பே உருவான பாட்டியாகவும் அயலூரிலிருந்து பாதசாரியாகத் தெருவோரம் சென்ற ஔவை ஒரு வீட்டின் புறத்திண்ணையில் பசியால் வாடிய வண்ணம் அமர்ந்தார். இறையருட் சோதனை சிலம்பிக்கு நற்காலம் வருவதை இலக்காகக் கொண்டே ஔவையை சிலம்பியின் வீட்டுத்திண்ணையில் அமர வைத்தது. வீட்டின் புறத்திண்ணையிலிருந்த ஔவை சிலம்பியை நோக்கி நடந்ததால். சோர்வும் மெத்தப் பசியும் வாட்டுகிறது. கொஞ்சம் கூழாவது தருவாயா? என்றார். ஔவையின்மீது இரங்கிய சிலம்பி தான் குடிக்க வைத்திருந்த கூழை எடுத்து வந்து ஔவையிடம் தந்து உபசரித்தாள்.

கூழை ஆவலுடன் அருந்திய ஔவை பசிக்களை நீங்கியதும் எதிரே இருந்த சுவரில் எழுதப்பட்டிருந்த இரு வரிப் பாடலை இது ஏன் எனக் கேட்டார். சிலம்பி தனது கவலையை விபரமாகக் கூறினாள். அதைக் கேட்டதும் ஔவையார் உடனே அப்பாட்டினை நிறைவு செய்தார். அதன் விபரம் ....... பெண்ணானவள். அம்பற்சிலம்பி அரவிந்தத் தாளணி யும் செம் பொற் சிலம்பே சிலம்பு" எனப் பாடினார். ஏற்கனவே கம்பர் 500 பொன் பெற்றுப் பாடிய இரு வரிகளால் சிலம்பிக்குப் பயனேதும் இல்லை. ஔவையார் சிலம்பியிடம் வாங்கியுண்ட கூழின் நன்றிக்கடனாகக் கம்பர் பாடிய பாடலை நிறைவு செய்தார். அச்சமயம் ஔவையாரின் பாடலின் மகிமையால் சிலம்பிக்கு நிதிவளம் பெருகும் இறையருள் கிட்டியது. சிலம்பி பொருட்செல்வத்தால் உயர்ந்தாள். கூழைக் குடித்துப் பாடிய ஔவை "கூழுக்குப்பாடி" என அழைக்கப்பெற்றார். தன்னலம் கருதாது பொதுநல நோக்கில் கிடைத்த சிறு பொருளுக்காக

*தூய மனச்சான்று உடையவர்கள்தான் நல்வாழ்வு பெறுவர்.*

நன்றிக்கடன் செலுத்தும் பண்பு அன்று கவி பாடும் தமிழ்ப்புலவருக்கு அணியாக அமைந்தது. இதனால் தமிழ் மொழிச்சிறப்பு மேலோங்கியது.

### கம்பனின் சீற்றமும் ஔவையாரின் சொல்லடியும்

கம்பர் தாம் பாடிய இரு வரிகளைத் தாசியிடம் கூழ் வாங்கிக் குடித்து நிறைவு செய்ததால் ஔவையார்மீது சினமுற்றார். தமது பாடல்மூலம் ஔவையாரை நிந்திக்கும் நோக்கில் போட்டியாக அடி என்று ஆரைக் கீரையும் ஔவையாரையும் சிலேடையாக நோக்கி ஒரு காலடி! நாலிலைப் பந்தலடி! என்பதன் பொருள் யாதெனக் கம்பர் கேட்டார். ஔவையார் பதிலாக,

"எட்டேகாலட்சணமே! எமனேறும் பரியே!
மட்டில் பெரியம்மை வாகனமே! முட்டமேல்
கூரையில்லா வீடே! குலராமன் தூதுவனே!
ஆரையடா சொன்னாயது?"

ஔவையாரின் பதிலடியான பாடலைக்கேட்ட கம்பர் வெட்கித் தலை குனிந்தார்.

(தொடரும்...

### சந்ததமும் உன்தன் புகழ்பாடி

**பல்லவி**

சந்ததமும் உன்தன் புகழ்பாடி மகிழ்ந்திடுவோம்
சண்முகனே சங்கரன் திரு மைந்தனே

**அநுபல்லவி**

வஞ்சகம் நிறை இம் மாய உலகிலே நாம்
சிந்தித்தும் சஞ்சலம் இன்றி வாழ்ந்திடவே
(சந்ததமும்...

**சரணங்கள்**

சூரனை வென்றுமே தேவர் குறை தீர்த்தவனே
தேவி குஞ்சரியைக் கைப்பிடித்தே மகிழ்ந்தவனே
ஊர் சுற்றி அலைந்த அருணகிரி நாதனை
பேர் பெற்ற ஞானி ஆகிட அருள்புரிந்தவனே
(சந்ததமும்...

போர் மேக வலையிலே சிக்கித் திணறியே
யார் என்ன செய்தாலும் மீண்டிட நாதியற்று
சீர் கெட்டே சிந்தை நொந்திட்ட எம் இனத்தை
பார் போற்றும் இனமாய் மீண்டும் வர அருளிடுவாய்.
(சந்ததமும்...

-திருமதி புனிதவதி சண்முகலிங்கம்-

*குழந்தைகளைக் குறைசொல்வோரைவிட அவர்களுக்கு வழிகாட்டுவோரே அதிகம் தேவை.*

# கணநாத நாயனார்

– **திரு க. சிவசங்கரநாதன்** அவர்கள் –

மக்களின் வழிபாட்டிற்காக ஆலயங்கள் பலவற்றையும் கட்டி பூசை வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றுவர ஒழுங்குகள் செய்தும் சிவநெறி போற்றிய சோழ மன்னரின் ஆட்சியில் சிறந்து விளங்கியது சீர்காழிப் பதியாகும். சீர்காழி என்றதுமே ஞானக்குழந்தை தவழ்ந்த புண்ணிய பூமி எனச் சைவன் எவனும் திசை நோக்கித் தொழுவான். அந்தச் சிவபுரியில் மறையவர் குலத்திற் பிறந்த இன்னொரு குழந்தை வளர்நிலையிற் காழியர்கோனை மானசீக குருவாக வரித்துக் கொண்டது. குருவே ஒருவருக்கு ஆன்மஞானம் அளிப்பவர். குருவின் அருளின்றி ஞான நிலை அடைதல் சாலாது.

**ஞானம் இவன் ஒழிய நண்ணியிடும் நற்கல்அனல் கல்லை**
**பானு ஒழியப்படின்.** -திருவருட்பயன் 6-10.

உமாபதி சிவாச்சாரியார் உதாரண மாகக் காட்டி விளக்குகிறார். சூரியகாந்தக் கல்லை வெய்யிலிற் பிடிக்கும்போது நெருப்பு உண்டாகக்கூடிய வெப்பம் ஏற்படுகின்றது. காந்தக்கல் ஊடாகவே அத்தகைய சூடு வெளிப்படும் அந்த வெப்பத்தை சக்தியைக் கொடுப்பவன் சூரியனே. அவன் இல்லாமல் கண்ணாடிக்கு வெப்பம் கொடுக்கும் ஆற்றல் ஏற்படாது. மேலும் சூரிய ஒளியை அங்ஙனம் ஆக்கக்கூடியதாக அமைந்துள்ள கண்ணாடி யிலேயே நெருப்பெரியத்தக்க சக்தி புறப்படும். அதுபோல பக்குவ நிலையும் வேண்டும். ஞானகுருவும் வேண்டும். ஞானகுருவே ஆணவ முனைப்பை நீக்கி ஞான நிலைக்கு இட்டுச் செல்வார். நயனதீட்சை, ஸ்பரிச தீட்சை, வாசக தீட்சை முதலானவை அளிப்பர். திரு வாதவூரரும் பக்குவநிலை அடைந்திருந்தமை யாலேயே இறைவன் குரு வடிவில் வந்து ஆட்கொண்டருளினார். ஞானப்பால் உண்டு ஞானசம்பந்தம் பெற்ற குழந்தையை மான சீக ஞான குருவாக வரித்து வளர்ந்து வரும் இக்குழந்தையும் பின்னர் கணங்களுக்குத் தலைவன் ஆகும் பேறுபெற்றமையால் கண நாத நாயனார் என்றே போற்றப்படுகின்றார். பெற்றார் வைத்த பெயர் பின்னர் மறைந்து விட்டது. இங்ஙனம் குரு வழிபாடு செய்வதுடன் கோயில் விக்கிரகங்களை வழிபட்டும் மலர் மாலை தொடுத்தும் விளக்கேற்றியும் லிங்க வழிபாடும் இன்னும் இவ்வகையான சரியைத் தொண்டு புரியும் அடியார்க்கு அடியானாகி அவர்களுக்கு வேண்டியன கொடுத்தும் சங் கம வழிபாடும் மேற்கொண்டார். மேலும் தொண்டர்களுக்குப் பயிற்சி அளிக்கும் சிறப் பான தொண்டும் மேற்கொண்டிருந்தார்.

நல்ல நந்தவனப்பணி செய்பவர் நறுந்துணர் மலர் கொய்வோர் பல் மலர்த் தொடை புனைபவர் கொணர் திருமஞ்சனப் பணிக்குள்ளோர் அல்லும் நண்பகலும் திரு அலகிட்டுத் திருமெழுக்கமைப்போர்கள் எல்லை யில் விளக்கெரிப்பவர் திருமுறை எழுது வோர் வாசிப்போர் என இத்தகைய தொண்டு புரிவோர் அவற்றைத் திருத்தமாகச் செய்யும் முறைமைகளை ஐயம் திரிபின்றி விளக்கிக் கூறுவார். உதாரணமாக மாலை தொடுப்பதற் கேற்ற மலர்களின் வகை, மலர் பறிக்கத் தகுந்த நேரம், ஒவ்வொரு மாலைக்கும்

*மனிதனைப் புரிந்துகொண்டால் அவனே ஒரு புத்தகம் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.*

பொருத்தமான மலர். பூசைக் காலத்துக்கு சார்த்த வேண்டிய மாலை வகை, தொடுக்க எடுத்த நார் வகை, தொடுக்கும்போது ஓதிக் கொண்டிருக்க வேண்டிய மந்திரம் அல்லது தேவாரம் தொடுத்த மாலையைச் சார்த்தக் கொடுக்கும்வரை பேணவேண்டிய முறை என்பவற்றைத் தெளிவாக விளக்குவார். அங் ஙனம் தொண்டில் ஈடுபடுவோருக்கு எய்தும் குறைபாடுகளை நீக்குவார். இங்ஙனமாகத் தொண்டுகளை முறைப்படி செய்யவல்லவர் கள் தொகையைப் பெருக்கினார். சிவதொண் டின் மெய்யுணர்வு பெற்ற நாயனார் அன்பும் வாய்மையும் வாய்ந்த இல்லற வாழ்வின ராயும் விளங்கினார். குருலிங்க வழிபாட்டுடன் சிவனடியாரையும் பேணிச் சங்கம வழிபாடும் பேணி வாழ்ந்தார். தான் குருவாக வரித்துக் கொண்ட திருஞானசம்பந்தப் பெருமானுடைய சீரடிகளைப் பரவிப் பெற்ற பேரருளால் கைலையை அடைந்து சிவ கணங்களுக்குத் தலைமை தாங்கும் பெரும் பேறு பெற்றார். தூய தொண்டர்களைப் பெருக்கிய இத் தொண்டரின் குருபூசைத் தினம் பங்குனித் திருவாதிரையாகும். மேற்படி தினத்திலாவது அவரை நினைத்தாவது தூய்மையான பணி களைச் செய்வோமாக.

## அலை பாயும் உள்ளம் அடங்காதா?

எகிப்து நாட்டுப் பாலைவனப் பகுதி ஒன்றில் முற்றும் துறந்த முனிவர்கள் பலர் தங்கி இருந்தார்கள். கடவுளுக்கு என்றே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்திருந்த அவர்கள் மக்களுக்குச் சேவை செய்வதிலும் தவத்திலும் ஈடுபட்டு இருந்தார்கள்.

அந்த முனிவர்கள் கூட்டத்தில் பச்சோமியாஸ் என்ற இளந் துறவி ஒருவர் இருந்தார். உலக இன்பங்கள் அவர் உள்ளத்தை ஈர்த்தன. அதனால் அவர் உள்ளம் துறவு நெறிக்குப் பொருந்தாத தீய எண்ணங்களில் ஆழ்ந்துகொண்டிருந்தது.

தன் நிலையை எண்ணி வருந்திய அவர் தலைமை முனிவரிடம் சென்றார். தன் உள்ளத்தை அலைக்கழிக்கும் தீய எண்ணங்கள் பற்றிச் சொன்னார். "நீங்கள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று வேண்டினார்.

பரிவுடன் எல்லாவற்றையும் கேட்ட தலைமை முனிவர், "அன்பரே! இது சாத்தானின் சோதனையாகவும் இருக்கலாம். மனப் பிரமையாகவும் இருக்கலாம். இப்படிப்பட்ட சோதனைகள் யாருக்கும் ஏற்படலாம். இவற்றில் இருந்து விலக நீர் உண்மையாக விரும்புகிறீரா?" என்று கேட்டார். "ஆமாம்" என்றார் இளந்துறவி.

தலைமை முனிவர் அவரை இன்னொரு முதிய துறவியிடம் அழைத்துச் சென்றார். "இவர் சொற்படி நடந்துகொள். மூன்று மாதம் சென்றதும் உம்மைச் சந்திக்கிறேன்" என்று விடைபெற்றார்.

அந்த முதிய துறவியாரோ இளந்துறவியைக் கடுமையாக வேலை வாங்கினார். தியானம், வேலை இவற்றிற்கு இடையே சிறிது ஓய்வுதான் அவருக்குக் கிடைத்தது. அந்த ஓய்வு நேரத்திலும் ஏதேனும் வேலை ஏவிக் கொண்டிருந்தார் அவர்.

இளந்துறவியோ அவர் என்ன வேலை சொன்னாலும் அதைக் கருத்துடன் செய்து வந்தார். மூன்று மாதங்கள் கழிந்தன. அங்கு வந்த தலைமை முனிவர் இளந்துறவியைப் பார்த்து, "எப்படி இருக்கிறீர்? தீய எண்ணங்கள் இப்பொழுதும் உம்மை ஆட்டிப்படைக்கிறதா?" என்று கேட்டார்.

அவரின் திருவடிகளில் விழுந்த இளந்துறவி, "எனக்கு நல்வழி காட்டினீர். இங்கே எனக்கு ஏராளமான வேலைகள் உள்ளன. ஒன்றை முடித்தவுடன் இன்னொன்று காத்திருக்கிறது. தீய எண்ணங்கள் என் உள்ளத்தில் எழ இங்கே எனக்கு ஓய்வே இல்லையே" என்றார்.

*மனிதனைப் பாவ காரியத்தில் இழுத்துவிடுவது ஆசையும் கோபமும்தான்.*

# தலைவன்

**– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு** அவர்கள் –

பல்வேறு விதத்தில் பல்வேறு காலங்களாக இயங்கிக்கொண்டிருக்கும் இப்பிரபஞ்சத்தை சிருஷ்டித்து நடாத்தி வர கடவுள் ஒருவர் இருந்துதான் ஆகவேண்டும் என்பது ஆஸ்திகர்களது கருத்து. அதற்கு மாறான கருத்து உடையவர்கள் நாஸ்திகர்கள்.

ஒரு காரியம் செய்தால், நடந்தால் அதற்கான விளைவு இருந்தே ஆக வேண்டும். எமது செயல்களுக்கு பலனைத் தருபவர் ஆண்டவனே! என்பதை அடித்துச் சொல்பவர்கள் ஆஸ்திகர்கள். இருந்தால் இருக்கட்டுமே அதற்காக இறையிடம் பக்தி செய்தாக வேண்டுமா? என வினா எழுப்பவும் தயங்குவதில்லை நாஸ்திகர்கள்.

எம்மைக் கேட்டுக்கொண்டா எம்மை இறைவன் படைத்தான்? எம்மை இப்பூமியில் படைத்ததால் எமக்கு எத்துணை சிரமங்கள் என்பவர் ஒரு சாரார்.

“சிரமங்களைத் தீர்க்கவும்தான் இறைவனால் முடியுமே'' இது ஆஸ்திகரது வாதம். நாம் பக்தி செய்தால்த்தான் ஆண்டவன் எமது கஷ்டங்களைப் போக்குவான் என்றால் இயற்கையாக அவன் கிருபாமூர்த்தி கருணைக்கடல் என்கிறீர்களே அது பொய்த்துவிடுமே! என்கிறார்கள் மீண்டும் நாஸ்திகர்கள்.

இவ்வாறு ஆஸ்திகர்களது ஒவ்வொரு கூற்றுக்கும் எதிர்வாதம் காண்பதில் நாஸ்திகர்கள் முனைவதைப் பார்த்தால் எம்மிலும் பார்க்க நாஸ்திகர்கள்தான் அதிக நேரம் ஆண்டவனைப் பற்றி சிந்திப்பதில் நேரம் செலவழிக்கிறார்கள் போல் தெரிகிறது. இல்லையா! நாம் இறைவனை வணங்கும்போது எமது வேண்டுதல்களை சொல்லி வணங்க வேண்டுமா? என்பது சிலரது வினா.

இதற்கு நீலகண்ட தீட்சிதர் தரும் விடையைப் பாருங்கள். இவர் ஒரு சக்தி உபாசகர். தாயே! உன்னை வணங்கும்போது எனது கஷ்டங்களை உன்னிடம் சொல்லக் கூடாது என்பது எனக்கு நன்கு தெரியும். ஆனாலும் உன்னிடம் எனது கஷ்டங்களை வாய் திறந்து மனம் விட்டுச் சொல்லும்போது மனதுக்கு ஒரு தற்காலிக ஆறுதல் கிடைக்கின்றது. ஒரு தெம்பு மனதுள்ளே பிறக்கின்றது. அதனாலே உனக்கு எல்லாம் தெரிந்திருந்தாலும் நான் எனது கஷ்டங்களை மனம் விட்டுச் சொல்லி உன்னை வணங்குகின்றேன். இது நீலகண்ட தீட்சிகரது கருத்து.

எமது மனக் கஷ்டங்களை யாருக்காவது சொல்லி மனம் ஆறுவது சரி. அதில் ஒரு நிம்மதி பிறக்கத்தான் செய்கிறது. ஆனால் அதைக் கண்டவர்களிடம் போய்ச் சொல்லக்கூடாதல்லவா? அதனால் எமக்கும் கேட்பவர்க்கும் நன்மையில்லாமல் போய்விடும். எனவே இவற்றை ஈசனிடம் கூறுதல் சரி தானே?

அதிகமாக இந்துக்கள் தினமும் வீட்டில் பூஜை செய்வார்கள். பூஜை செய்ய அவகாசம் அதிகமாகக் கிடைக்கின்றது. காலையில் பெண்பாலார் அடுக்களையுள் வேலை செய்யும்போது ஆண்கள் இறை வழிபாட்டில் ஈடுபடலாம் அல்லவா?

பூசை என்பது பெரிய அளவில் வீடுகளில் செய்வது சிரமம் என்றால் தினமும்

*ஆயிரம் வீண் வார்த்தைகளைவிட பயனுள்ள இதமான ஒரு நல்ல வார்த்தை சிறந்தது.*

எமது வீட்டில் சுவாமிப் படங்களுக்கு மலர்கள் சாத்தி தீபமேற்றி வழிபடலாம். ஒரு வீட்டில் ஈஸ்வரன், அம்பாள், விஷ்ணு, விநாயகர், ஷண்முகன், சூரியன் என்னும் மூர்த்தங்களை வைத்து வணங்குதல் அவசியம் என்றும் இது பஞ்சாயதன பூசை எனவும் அழைக்கப்படுகின்றது.

இந்த 5 தெய்வங்களுக்கும் விக்கிரகங்கட்குப் பதிலாக இயற்கையாகவே கிடைக்கும் 5 வகைக் கற்களை வைத்து அவற்றில் இம் மூர்த்திகளை ஆவாகனம் செய்து பூசை செய்யும் வழக்கம் உண்டு.

எம்மவரிடையே சுவாமிப் படங்களை வைத்து வணங்கும் வழக்கமே பெரும்பாலான வீடுகளில் உண்டு. சுவாமிப் படங்களையும் தினமும் துடைத்து, பொட்டிட்டு, பூவிட்டு தீபம்காட்டி வணங்கி வரும்போது அதுவே ஒரு ஆலயமாக அமைகின்றது. அங்கே தூய்மையும் அருளும் பொலிகின்றது. எமது மனதில் நம்பிக்கை ஒளி பிறக்கின்றது. தினமும் சுவாமிக்குரிய கடமைகளை செய்து முடித்தபின் எமது காரியங்களை ஆரம்பிக்கும்போது மனதில் ஒரு நிறைவும் மனோதிடமும் பக்கபலமாக அமைகின்றது.

எனவே, கோயிலில் மாத்திரமல்ல வீட்டிலேயும் எமது சுவாமி அறையில் ஒரு புனிதமான சூழ்நிலையை யாம் உருவாக்க முடியும். இங்கே ஆரவாரமின்றி குழப்பமின்றி தெய்வ சிந்தனை செய்ய முடியும். இவ்வாறு செய்பவர்க்கு அதன் உண்மை புலப்படும்.

கிணற்று நீருள் நீர் நிரம்பிய குடத்தை இழுக்கும்போது அதன் கனம் தெரிவதில்லை. ஆனால், குடமானது நீரின் மட்டத்துக்கு வெளியே வந்தவுடன் கனக்க ஆரம்பிக்கின்றது. பெரிய மரங்களைக்கூட பெரும் வெள்ளத்தின் அடியே வைத்தே புரட்டி இழுத்து வருவார்கள் அப்போது அதன் பலம் தோற்றாது.

அதேபோன்றுதான் எமது துன்பங்களும் இறைவழிபாட்டுள் அடங்குமேயானால் எமக்கு இன்பமே அன்றி வேறொன்றும் இல்லை.

## சாயத்திற்கு ஏற்ற துணி

இளைஞரான விவேகானந்தர் முதன் முதலில் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரைச் சந்தித்தார்.

துடுக்கான இளைஞரான அவர், "கடவுள் இருக்கிறாரா? என் கண் முன்னால் கடவுளைக் காட்ட முடியுமா? நான் உங்களைப் பார்ப்பதுபோலக் கடவுளை நேருக்கு நேர் பார்க்கமுடியுமா?" என்று அடுக்கடுக்காகக் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அவருடைய கேள்விகளுக்குப் புன்முறுவல் பூத்த முகத்துடன் பரமஹம்சர் பதில் தந்துகொண்டிருந்தார்.

அங்கிருந்தவர்கள், "குருதேவரே! இவன் நாத்திகன். இவனுக்கு நீங்கள் அறிவுரை சொல்வது தவறு. அதனால் எந்தப் பயனும் விளையப்போவது இல்லை. என்றார்கள்.

அதற்குப் பரமஹம்சர் அமைதியாக "ஏற்கனவே ஒரு நிறச் சாயம் ஏற்பட்ட துணியில் இன்னொரு நிறச் சாயத்தை ஏற்றினால் அந்தச் சாயம் நன்றாக ஏறாது. ஆனால் வெள்ளைத் துணியில் எந்தச் சாயம் ஏற்றினாலும் நன்றாக ஏறும். இந்த இளைஞனின் உள்ளம் வேறு நிறங்களால் களங்கப்படாத வெள்ளைத் துணி போன்றது. இதில் எந்தச் சாயம் ஏறினாலும் நிலைத்து நிற்கும்" என்று பதில் தந்தார்.

*பண்புடனும் மரியாதையுடனும் இருப்பவன் உலகில் எதையும் சாதித்து விடுவான்.*

# சமய வாழ்வு

(தொடர் -19)

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

சென்ற தொடரில் மகாபாரதத்தில் காணப்படும் நட்புப்பற்றி ஆராய்வதாகக் கூறி இருந்தேன். இதிகாசங்களிலே மகாபாரதமும் ஒன்று என்பது அறிவோம். காலம் வேகமாக மாறிக்கொண்டே போகிறது. புதிய கதைகள், புதிய புதிய காவியங்கள், புதிய புதிய உண்மைகள், யுகத்துக்கு யுகம், தலை முறைக்கு தலைமுறை ஆண்டுக்கு ஆண்டு தோன்றிக்கொண்டே இருக்கின்றன. கதை களும் அவை அமைக்கப்பட்ட காலச் சூழ் நிலையும், சம்பவங்களும் நாளடைவில் வலுக் குறைந்து நம்பிக்கைக்கு அளவுகோலான நிகழ்கால வரம்புக்கு நலிந்து போகலாம். கதையும் கற்பனையும்தான் இப்படி அழியும். அழிய முடியும். அழிக்க முடியும்.

ஆனால் சத்தியத்திற்கு என்றும் அழி வில்லை! தர்மத்துக்கு என்றும் அழிவில்லை! கதையும் கற்பனையும் சரீரத்தையும் பிரகிருதி யையும் போல வெறும் உடல்தான். சத்திய மும் தர்மமும் ஆன்மாவையும் மூலப் பிரகிருதி யையும்போல நித்தியமானவை. காலத்தை வென்றுகொண்டே வாழக் கூடியவை. இதை மறுப்பவர் எவருமில்லை.

நெருப்பைத் தொட்டவர்களுக்குத் தான் அது சுடுகிறது. நெருப்புக்குச் சுடு வதில்லை. தருமமும் இப்படி ஒரு நெருப்புத் தான். அறியாமையினாலோ, அல்லது அறிந்து கொண்டே செருக்கின் காரணமாகவோ, தருமத்தை அழிக்க எண்ணி மிதிக்கிறார்கள். அந்தத் தருமத்தாலேயே சுடப்பட்டு அழிக் கப்படுகிறார்கள். தண்ணீரில் உப்பு விழுந் தால் தண்ணீரா கரைகிறது? உப்புத்தானே கரைகிறது. நன்மையைத் தீமை நெருக் கினால் நன்மை அழிவதில்லை. தீமைதான் அழிகிறது.

துரியோதனன், துச்சாதனன், சகுனி போன்ற தீயவர்களையும் இந்தக் கதையில் காண்கிறோம். விதுரன், வீட்டுமன், தருமன், விகர்ணன், அர்ச்சுனன் போன்ற நல்லவர்களை யும் காண்கிறோம். கர்ணனையும் வீமனையும் போல பலசாலிகளைக் காண்கிறோம். குந்தி யையும் காந்தாரியையும் போலத் தாய்மார் களையும், திருதராட்டிரன், பாண்டு போன்ற தகப்பன்மார்களையும் காண்கிறோம். திரௌ பதி, சுபத்திரை, சித்திராங்கதை போன்ற பெண் திலகங்களையும் இந்த மகா காவியத் தில்தான் சந்திக்கிறோம். எல்லாம் தெரிந்து எல்லாவற்றுக்கும் காரணகர்த்தாவாக விளங் கிக்கொண்டே ஒன்றுமறியாத பாமரன்போல் சிரித்துக் கொண்டிருக்கும் பரமாத்மாவான கண்ணன் இதயத்திலிருந்து மறைவானா? அழகு மிளிரும் வாலிபப் பருவத்திலேயே போர்க்களத்தில் வீரமரணம் அடைந்த அபி மன்யுவுக்காக நாம் கண்ணீர் சிந்தாமல் இருப்போமா? எல்லா இன்னல்களுக்கும் அப் பால் குருஷேத்திரக் களத்தில் பதினெட்டு நாட்கள் நிகழ்ந்த யுத்தத்திற்குப்பின் பாண்ட வர்கள் மூலமாக உண்மையும், அறமும் வெற்றி பெற்றனவே அதற்காக நம்முடைய இதயம் விம்மிப் பூரிக்காமல் இருக்குமா?

மிகப் பெரிய ஆலயம் ஒன்றில் நுழைந்து தரிசனத்தை முடித்துக்கொண்டு நிம்மதியோடும் சாந்தியோடும் வெளிவருகிற பக்தனைப்போலப் பத்துப் பருவங்களையும் நூற்றுக்கணக்கான சருக்கங்களையும் உடைய மகாபாரத காவியத்தில் நுழைந்து

***கர்வம் கொண்டிருப்பவனைக் கண்டு வெற்றித் திருமகள் விலகி விடுவாள்.***

எத்தனையோ நல்லவர்களையும் கெட்டவர்களையும் நன்மை தீமை தெரியாதவர்களையும் சந்தித்து விட்டு மன அமைதியோடு வரும்பொழுது நம்முடைய இதயத்தில் முரசு கொட்டுவதுபோல் முழங்கும் எண்ணம்;

**தர்மத்துக்குத்தான் வெற்றி**
**சத்தியத்துக்குத்தான் வெற்றி**
**நேர்மைக்குத்தான் வெற்றி**
**நியாயத்துக்குத்தான் வெற்றி என்பதுதான்.**

மகாபாரதம் போன்ற கட்டுக்கதைகளை எல்லாம் நம்பலாமா? என்று இளைஞர்கள் கேட்பது கேட்கிறது. இதற்குப் பதில் நம்புவதில்த்தான் எல்லாம் இருக்கிறது. நம்பாததில் எதுவும் இல்லை. நாத்திகம் என்பது ஒன்றுமில்லாதது. ஆத்திகம் என்பது எல்லாம் நிறைந்தது.

இன்றைய இளைஞர்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக வில்லிபுத்தூர் ஆழ்வாரின் கைவண்ணத்தின் சாறாக பாரதச் சுருக்கம் எழுதினேன். எனது நோக்கம் பாரதத்தில் காட்டப்பட்ட நட்பைச் சொல்வதுதான்.

கௌரவர் தலைவன் துரியோதனனும், அங்க தேசத்து அரசன் கர்ணனும் நல்ல நண்பர்கள். ஒருநாள் துரியோதனன் அரண்மனையில் கர்ணனும், துரியோதனனின் மனைவி பானுமதியும் சொக்கட்டான் விளையாட்டில் ஈடுபட்டிருந்தனர். அந்தநேரம் துரியோதனன் உள்ளே நுழைந்தான். கணவனைக் கண்டதும் அந்தக் காலத்துப் பண்புக்கு அமைவாக பானுமதி ஆசனத்திலிருந்து எழுந்தாள். விளையாட்டில் தோற்று எழுகிறாள் என்று நினைத்த கர்ணன், பானுமதி இடுப்பில் கட்டியிருந்த ஒட்டியாணத்தை பிடித்து இழுத்தான். இன்னொருவன் மனைவியைத் தொடுவது பிழை என்பதை அறிந்திருந்த கர்ணன், விளையாட்டின் வேகத்தில் அப்படி நடந்து கொண்டான். இதனால் ஒட்டியாணம் அறுந்து மணிகள் நிலத்தில் சிந்தின. கர்ணனுக்குப் பின்னால் வந்துகொண்டிருந்த துரியோதனன், (துரியோதனன் வருவதைக் கர்ணன் பார்க்கவில்லை) இச் சம்பவத்தினால் எந்தவிதச் சலனமும் அடையாமல் மணிகளை எடுக்கவோ, எடுத்துக் கோர்க்கவோ என்றான். கர்ணனோ பானுமதியின் இடையைப் பற்றிய செயலில் துடிதுடித்தான். துரியோதனன் அதனைப் பொருட்படுத்தாது சிறந்த நண்பனாகத் திகழ்ந்தான். இந்த உத்தமமான நண்பனுக்காகவே உயிர் கொடுத்தான் கர்ணன்.

நட்புக்கு உதாரணமாகக் காட்டக் கூடிய துரியோதனன் மகாபாரத வாசகர்களினால் வெறுக்கப்படும் ஒருவனாக மாறியதற்கு காரணம் யாது? சகுனி எனும் "தீநட்பு" நாம் துரியோதனனை வெறுக்குமளவிற்குக் கொண்டுவந்துவிட்டது.

பாண்டவர்களை பழிவாங்கவேண்டும் என்பதனைக் காரணமில்லாக் காரணமாகக் கொண்டவன்தான் சகுனி. தனது சொந்த மருமக்களுக்கு (தாய்மாமன்) நன்மை செய்வதாக நினைத்து அவர்களுக்கு "சவக்குழி" வெட்டியவன்தான் இவன்! சகுனியின் வார்த்தைகளை வேதமாகக் கொண்டு துரியோதனன் செயற்பட்டதுதான் விதியின் செயல்.

பாண்டவர்களுக்காக பரமாத்மா தூதுவனாக வருகிறார். தூதுவனாக வரும் கண்ணனை அரசவையில் ஆசனத்துக்குக் கீழ் பாதாளம் அமைத்துக் கொல்வதற்கு சகுனி, ஆலோசனை வழங்குகிறான். துரியோதனனும் செயற்படுத்த முயலுகிறான். பரமாத்மா தனது விஸ்வரூபத்தைக் காட்டுகிறார். அனைத்து ஜீவராசிகளும் காணத் துடிக்கும் விஸ்வரூபக் காட்சியை காணாத கபோதிகள் சகுனியும் துரியோதனனும் மட்டுமே. தீய நட்பினால் யாருக்கும் கிடைக்காத வாய்ப்பை துரியோதனன் இழந்தான்.

*வாழ்க்கையின் குறிக்கோள் அறிவைப் பெறுவது மட்டுமல்ல, அதைச் செயலாக்குவதே.*

மகாபாரதக் கதையில் திரௌபதையை துகிலுரியப்பட்ட காட்சியை வாசிக்கும் நேயர்களின் கண்களில் நீர் மல்கும் மகா கவி பாரதியைக்கூட கொதித்தெழ வைத்த இடம் இதுதானே! கண்ணிலான் பெற்ற மைந்தன், அந்தப்புரத்தில் நுழைந்து அர சியை, (திரௌபதை) கற்றைக் குழல் பற்றி தெருவில் இழுத்து வருவதற்கு காரணம் சகுனியின் ஆலோசனையும் துரியோதனன் இட்ட கட்டளையும்தானே! ஒற்றைத் துணி யுடன் வந்த திரௌபதியை தன்னுடைய தொடையைத் தட்டி மடியில் வந்து இருக்கு மாறு சொன்னானே? இந்த இழிகுணம் துரி யோதனனுக்கு தீ நட்பு தந்த பரிசல்லவா? சிந்தியுங்கள் இளைஞர்களே! சிந்தியுங்கள்.

நட்பிற்கு ஏற்றவர்களை ஆராய்ந்து பார்த்துத் தெரிவு செய்ய வேண்டும். நட்பைப் போற்றும் நல்லியல்பு படைத்தோர், நட்புச் செய்தபின் நண்பரைக் கைவிட முடியாது. ஆகையால், ஆராய்ந்து பார்த்தே நட்புச் செய்ய வேண்டும். ஆராயாமல் நட்புச் செய் வதுபோலக் கெடுதியானது வேறு எதுவுமே இல்லை. யாருடனும் நட்புச் செய்யுமுன், அவன் குணத்தையும், குடும்பப் பண்பையும், குறையையும், அவனைச் சேர்ந்த சுற்றத்தை யும், இனத்தையும் ஆராய்ந்து பார்த்தே நட்புச் செய்ய வேண்டும். ஒருவனுக்கு வாழ் வில் வரும் பெரு லாபம் அறிவற்றவர் களோடு அறியாமல் நட்புச் செய்திருந்தால், அதை உடனே கைவிட்டு விடுவதேயாகும்.

**"மருவுக மாசு அற்றார் கேண்மை ஒன்று ஈத்தும்**
**ஒருவுக, ஒப்பு இலார் நட்பு"**

(குறள்- 800)

இளைஞர்களின் துன்பத்திற்கு அடுத்த காரணம் அவர்கள் தெரிவு செய்த கல்வியாகும். முக்கியமாக அவர்களினால் தெரிவு செய்யப்படும் கல்வித்துறையாகும். கற்பது, அறிவு வளர்ச்சிக்குத்தான் என்பது இன்று பொருந்தாத ஒன்றாகிவிட்டது என்பது எமது கருத்தாகும். இன்றைய இளைஞனுக்கு சரியான தொழில் கல்வி அவசியமாகும். அவனது துறை ஊடாக நல்ல விடயங் களைச் சுட்டிக்காட்ட முடியும். உலகிலேயே சமயக் கல்வியை பாடத்திட்டத்தில் ஒரு பாடமாகக் கொண்டது நமது நாடாகும். இருந்தும் சமயம் எங்கே போகிறது? இந்தியா வைப் பொறுத்தமட்டில் கால்படும் இடங்களில் எல்லாம் கோயில்கள்தான் காணப்படுகின் றன. ஆனால் அங்கு சமயம் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுவதில்லை. அங்குதான் சமய நம்பிக்கை உச்சமாக இருப்பதைக் காண் கிறோம். எனவே நமது நாட்டில் கல்வித்துறை சரியான திசையில் செல்லவில்லை என்பது கல்வியாளர்களின் கருத்தாக உள்ளது.

இளைஞர்களுக்கு குறிப்பாக மாண வர்களுக்குச் சரியான வழிகாட்டல் எல்லா விடயங்களிலும் தேவைப்படுகிறது. க.பொ.த. உயர்தரம் கற்கும் மாணவர்கள் சரியான பாடங்களைத் தெரிவு செய்வது மிகவும் அவசியமாகும். சில பாடங்கள் எதிர்காலத் தொழில் வாய்ப்பைப் பெரிதும் பாதிக்கின் றது. இதனால் கற்ற கல்விக்கு வேலை இல்லை என்ற அடிப்படையில் "வேலையில் லாப் பட்டதாரிகள்" உருவாகிறார்கள்; அல்லது உருவாக்கப்படுகிறார்கள். தற் போது அறிமுகமாகியுள்ள தொழில் கல்வித் திட்டம் பல குறைபாடுகளைக் கொண்டுள் ளது. இத்திட்டம் மேலும் செழுமையாக்கப் படல் வேண்டும்.

வேலையில்லாத இளைஞர்கள் ஒரு நிலைக்குப் பின்னர் தீ நட்புக் காரணமாக தேவையற்ற செயற்பாடுகளில் தமது தலை களை நுழைத்துக்கொள்கிறார்கள். மீள வழி தெரியாது மாண்டு போகிறார்கள்.

மேலை நாடுகளில் தீய பழக்கங் களுக்கும் போதைப் பொருட்களுக்கும்

*துன்பத்தைக் கண்டு இரங்குவது மனித இயல்பு. அதை நீக்குவது தெய்வீகப் பண்பு.*

அடிமையான இருபாலரும் எங்கள் வாழ்க்கையைத் தொலைத்துவிட்டோம் வழி காட்டுங்கள் என்று ஏங்குகிறார்கள். அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்த பலருடன் உரையாடியபொழுது அவர்கள் குறிப்பிட்ட விடயங்கள் ஆச்சரியமாகவிருந்தன. அவர்கள் நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி என்பதை உணர்ந்து பயணம் புறப்பட்டு "யோகர் சுவாமிகளின்" பிறப்பிடம் காண்பதற்கு வந்திருந்தார்கள். (தொடரும்...

## அர்ச்சுனனின் ஆணவம்

இறைவன் கண்ணனும் அர்ச்சுனனும் யமுனைக் கரை ஓரமாகப் பேசிக்கொண்டே சென்று கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது அர்ச்சுனன் தன் வில்லாற்றலின் பெருமையைப்பற்றித் தனக்குள் நினைத்தான். "மூவுலகிலும் என்னை வெல்லக்கூடிய வில் வீரர் யாரும் கிடையாது. நான் மட்டும் இராமபிரானுக்குத் துணையாக இருந்திருந்தால் அவர் குரங்குகளின் துணையைத் தேடியிருக்க மாட்டார். கடலில் அணைகட்ட இவ்வளவு துன்பப்பட்டிருக்கமாட்டார். அம்புகளால் நான் ஒரே நொடியில் அந்தப் பாலத்தைக் கட்டியிருப்பேன். என்ன செய்வது? நான் அப்பொழுது இல்லையே" என்று எண்ணியபடி புன்முறுவல் பூத்தான்.

அர்ச்சுனனின் ஆணவத்தை அறிந்தார் கண்ணன். "அர்ச்சுனா! ஏன் சிரிக்கிறாய்?" என்று கேட்டார். "கண்ணா! இராமபிரானுக்குத் துணையாக நான் இருந்திருந்தால் என் அம்புகளால் கடலில் பாலம் கட்டியிருப்பேன். பாலம் கட்ட அவர் இவ்வளவு துன்பப் பட்டிருக்க வேண்டாம். அதை நினைத்துத்தான் சிரித்தேன்" என்றான் அர்ச்சுனன்.

"அர்ச்சுனா! நீ நினைப்பது தவறு. வலிமை வாய்ந்த குரங்குகளின் எடையை அம்புப் பாலம் தாங்காது. இல்லாவிட்டால் இராமரே அம்புப்பாலம் கட்டியிருக்கமாட்டாரா?" என்று கேட்டார் கண்ணன்.

"கண்ணா! என்னைக் குறை சொல்வதே உமக்கு வேலை. என் அம்புப் பாலம் குரங்குகளின் எடையைத் தாங்காதா? என்ன பேச்சுப் பேசுகிறீர்? விளையாட்டாகக்கூட என் வில்லாற்றலைக் குறைத்து மதிப்பிடாதீர்" என்று கோபத்துடன் சொன்னான் அர்ச்சுனன்.

"அர்ச்சுனா! கோபம் வேண்டாம். இராமர் காலத்தில் வாழ்ந்த குரங்கு ஒன்று இன்னும் உயிருடன் உள்ளது. நீ இந்த யமுனை ஆற்றில் உன் அம்புகளால் பாலம் கட்டு. நான் அந்தக் குரங்கை வரவழைக்கிறேன்" என்றார் கண்ணன்.

ஒரு நொடிக்குள் யமுனை ஆற்றில் அம்புப் பாலத்தை அமைத்தான் அர்ச்சுனன். "கண்ணா! இந்தப் பாலத்தின் வலிமையைப் பற்றி நான் பெருமை பேசக்கூடாது. எத்தனை பேர் ஒன்று சேர்ந்து என்னென்ன முயற்சி செய்தாலும் இந்தப் பாலம் சிறிதும் அசைந்து கொடுக்காது" என்று பெருமையுடன் சொன்னான்.

"அனுமனே! இங்கே விரைந்து வா" என்று குரல் கொடுத்தார் கண்ணன். உடனே அங்கே பெரிய குரங்கு ஒன்று வந்தது. "அனுமனே இந்தப் பாலத்தின்மீது நடந்து அக்கரைக்குச் சென்று வா" என்றார் கண்ணன். "இந்தக் குரங்கு பாலத்தை உடைக்கப் போகிறதா?" என்று தன்னை மறந்து சிரித்தான் அர்ச்சுனன். அந்தக் குரங்கு மிகுந்த தயக்கத்துடன் தன் வலது காலை மெல்ல அந்தப் பாலத்தின்மேல் வைத்தது. அவ்வளவுதான் அந்தப் பாலம் நொறுங்கி யமுனை ஆற்றிற்குள் மூழ்கியது.

தன் ஆணவம் அழியப்பெற்ற அர்ச்சுனன், "கண்ணா! என் வில்லாற்றலின் வலிமை இவ்வளவுதானா? ஒரு குரங்கே என் வலிமையைத் தூளாக்கி விட்டதே" என்று உள்ளம் நொந்து கேட்டான்.

"அர்ச்சுனா! இந்தக் குரங்குகள் மிக வலிமை வாய்ந்தவை. அதனால்த்தான் இராமரே அம்புப் பாலம் கட்டவில்லை" என்று தேறுதல் சொன்னார் கண்ணன்.

*தீர்மானிக்க மனம்; வழிவகுக்க அறிவு; செய்து முடிக்க கை தேவை.*

# அப்பர் சுவாமிகள் கண்ணாரக் கண்ட கைலாயக் காட்சியில் பிழிந்தெடுத்த தெவிட்டாத் தேன் துளிகள்

– **திரு பு. கதிரித்தம்பி** அவர்கள் –

பேரருள் கடவுளாகிய சிவபெருமான் சைவ குரவர்களாகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமி கள் ஆகிய நால்வரையும் ஆட்கொண்டு சைவத்தின் பெருமையையும், சிறப்பையும் உலகிற்கு அறிய வைத்தார். நால்வருள்ளும் அப்பரைத் துன்பத்தால் வாட்டி, கைலாயக் காட்சியைக் காண வேண்டுமென்ற அவாவையும் ஏற்படுத்தினார். கைலாயக் காட்சியைக் காண வேண்டும் என்ற அவா அவரைத் தூண்ட நடந்தும், புரண்டும், ஊன்கள் சிதைவடைந்தும், விடாப்பிடியாக இறைவனைக் கண்டன்றித் திரும்பமாட்டேன் என்னும் வைராக்கியத்துடன் நகர முற்பட்டார். இவரின் மனநிலை கண்ட சிவபெருமான் பிராமண வடிவம் தாங்கி இவர் முன்தோன்றி எங்கு செல்கின்றீர்? தேவர்களே காணமுடியாத அப்பரம்பொருளை நீயா காணப்போகிறாய். திரும்பிப் போ என்றார். அப்பொழுது அப்பர் "அனித்தியமான உடலைக்கொண்டு நித்திய பரம்பொருளாகிய சிவனைக் கண்டாலன்றித் திரும்பமாட்டேன்" என்றார். இவரின் பக்திச் சுவையைக் கண்ட எம்பெருமான் "அப்பரே எழுந்திரு" என்றார். சிதைந்த உடம்பு பூரண நிலையடைந்து அப்பர் எழுந்து நின்றார். சிவன் அப்பருக்கு "இக் கானகத்தில் உள்ள குளத்தில் மூழ்கி, திருவையாற்றில் எனது காட்சியைக் காண்பாயென்று அருளி மறைந்தருளினார். இதன் பிரகாரம் திருவையாற்றில் கண்டறியாத காட்சியைக் கண்டு பின்வரும் பாடலைப் பாடினார்.

**"மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடி**
**போதொடு நீர் சுமந்தேத்தி புகுவாரவர் பின் புகுவேன்**
**யாதும் சுவடுபடாமல் ஐயாறடைகின்றபோது**
**காதன் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்**
**கண்டேன் அவர்திருப் பாதம் கண்டறியாதன கண்டேன்"**

இப்பாடலை மெய்தான் அரும்பி நெஞ்சம் உருகி கைதான் தலைவைத்துக் கண்ணீர ததும்ப கண்டறியாதன கண்டேன் எனப் பாடி அருளினார்.

அப்பர் சுவாமிகள் கைலாயப் போற்றித் திருத்தாண்டகம் பத்துப் பாடல்களையும் பாடியருளினார். கைலாயத் திருத்தாண்டகத்தினை தெவிட்டாத தேன்துளிப் பாடல்களாக வடித்துள்ளார். அப்பர் சிவனின் புகழைப் பிழிந்தெடுத்துப் பத்துப் பாடல்களுள்ளும் மிளிர வைத்துள்ளார். முதலாம் பாடலில் "வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி" எனத் தொடங்கி "காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி கயிலை மலையானே போற்றி போற்றி" என அருளுகின்றார்.

இரண்டாம் பாடலில் "பிச்சாடல் பேயோடுகந்தாய் போற்றி பிறவியறுக்கும் பிரானே போற்றி" எனத் தொடங்கி,

*மௌனமாக இருக்கத் தெரியாதவனுக்கு நன்றாகப் பேசவும் தெரியாது.*

"பொய்ச்சார் புரமுன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாகமசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி"

என இறைவன் புகழை தேன்துளி சொட்ட அருளுகின்றார்.

மூன்றாம் திருத்தாண்டகத்தில்

"மருவார் புரமுன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றியுள்ளாவி
வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்றதிறமே போற்றி
தேசம் பரவப்படுவாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி"

என தேன் துளிகளைத் தெளிக்கின்றார்.

நான்காவது தாண்டகம்

"வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேவர்க்கும் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீயாடலுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி"

என இறைவன் புகழை அள்ளி வீசுகின்றார்.

ஏழாவது தாண்டகத்தில்,

"பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி"

என இறைவன் புகழைப் போற்றி நிற்கின்றார்.

எட்டாவது தாண்டகத்தில்,

"மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
காவாய் கனகத்திரளே போற்றி"

என இறைவனுக்கு மூப்பு, பிறப்பு, இறப்பு இல்லையென இறைவன் புகழை மானுடர் களுக்கு அறியத் தருகின்றார்.

பத்தாவது தாண்டகத்தில்,

"உண்ணா துறங்காதிருந்தாய் போற்றி
ஓதாதே வேமுணர்ந்தாய் போற்றி
கண்ணா உலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி"

*நாணயமாக நடப்பவர்கள் ஒளிக்கும் இருளுக்கும் அஞ்சவேண்டியதில்லை.*

என இறைவன் உண்பதில்லை, உறங்குவதில்லையென அப்பர் மனிதர்களுக்கு உணர வைத்து பதிகத்தை நிறைவுசெய்து, இறைவன் புகழைப் பிழிந்து, தெவிட்டா இன்ப அமுதத்தை அள்ளிக் கொடுத்துள்ளான்.

அப்பர் கையிலாயக் காட்சியில் கண்ட இறைவனின் புகழை திருத்தாண்டகமூலம் மக்களுக்கு அறிய வைத்து, என்றும் துதிக்க அருள் கூட்டியுள்ளார்.

அப்பரின் கயிலைக் காட்சியை மனத்தில் இருத்தி, கலியுகவரதன் செல்வச்சந்நிதியான் ஆலயம் சென்று அவன் அருளையும் பெற்று பேரின்பப் பெருவாழ்வு பெற்று வாழ்வீராக.

## வித்தகர் மோகன சுவாமி தானே
## விண்ணவர் கூட வியக்கிறார் பாரேன்

எத்தனை பட்டம் எத்தனை விருது
எல்லாம் எங்கள் மோகன சுவாமிக்கு
அத்தனை யும்மவர் சேவைக் குவிருது
அதனால் சுவாமி கொள்வது சிறிது
நித்தம் நித்தம் புதுப்புது யோசனை
நினைத்து நினைத்து ஆற்றும் சாதனை
வித்தகர் மோகன சுவாமி தானே
விண்ணவர் கூட வியக்கிறார் பாரேன்.

-வ. யோகானந்தசிவம்-



## உனை என்றும் மறவோம்

சைவப்புலவர், சைவ சித்தாந்த பண்டிதர், சைவ சித்தாந்த முதுகலைமாணி, ஆன்மீகச் சொற்பொழிவாளர் நித்தியானந்தன் தசீதரன் (நித்தியதசீதரன்) அவர்கள் ஆண்டவன் அடிசேர்ந்து ஆண்டு இரண்டு கடந்துவிட்டது.

அட்சரம் பிசகாத அழுத்தமான உச்சரிப்பும் ஆணித்தரமான கருத்துக்களை வெளிப்படுத்திய திறனும் அவரை ஆசிரியராக - சொற்பொழிவாளராக - வர்ணனையாளராக- பட்டிமன்றப் பேச்சாளராக - நடுவராகப் பல முகங்களுடன் வலம்வர வைத்தது.

சந்நிதியான் ஆச்சிரமத்துடன் மறைந்த நித்தியதசீதரன் நெருக்கமான ஈடுபாடு கொண்டிருந்ததுடன் ஆச்சிரமத்தின் வாராந்த நிகழ்வுகளிலும், எமது மாதாந்த மலையக சுற்றுப்பயணவேளையிலும் நம்மோடு இணைந்து சொற்பொழிவுகள் ஆற்றிச் சிறப்பித்தார். 2016இல் எம்மால் மேற்கொள்ளப்பட்ட வட இந்திய யாத்திரையில் பங்குகொண்டு காசி- நேபாளம்- காத்மண்டு எனப் பல இடங்களிலுமுள்ள ஸ்தலங்களையும் தரிசித்துப் பேறடைந்தார்.

21.04.2019 ஞாயிறன்று அன்னாரின் நினைவாக ஆச்சிரம மூலவருக்கு விசேட பூசை ஆராதனைகளுடன் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது. இறைவன் திருப்பாதங்களில் அன்னாரின் ஆத்மா நித்தியமாக இளைப்பாற சந்நிதியான் ஆச்சிரமம் பிரார்த்திக்கிறது.

*உன் எண்ணம்தான் உனது வாழ்க்கை. உனது வாழ்க்கைதான் உனது எண்ணம்.*

# படங்கள் தரும் பதிவுகள்



பங்குனி மாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



ஏமாற்றி வாழலாம் என எண்ணாதே. வாழ்க்கை உன்னை ஏமாற்றிவிடும்.



பங்குனி மாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும் சரித்திரத்தின் ஒவ்வொரு பக்கமாகும்.

# மனிதனும் மனிதாபிமானமும்

– **திரு பூ.க. இராசரத்தினம்** அவர்கள் –

மனித சமுதாயம், குறிப்பாக தமிழ்ச் சமுதாயம், மனிதன் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு பலரும் விளக்கங்களை வழங்கியுள்ளார்கள். மானுடப் பிறவி சிறந்ததென ஔவையார், திருவள்ளுவர் போன்ற ஞானிகள் மனிதன் வாழ்வதற்கு வேண்டிய அடிப்படைக் கொள்கைகளையும் மனிதன் வாழ்ந்து காட்டவேண்டிய நியதிகளைப் பற்றியும் விளக்கி உள்ளார்கள். மதங்களும் மனத்தின் மகிமை பற்றியும் பல்பரிமாண ரீதியில் விளக்கியுள்ளன.

மனிதன் மனிதத்தன்மையோடு வாழ்வாங்கு வாழ அண்மையில் மறைந்த வள்ளலாரின் கருத்தைக் கவனத்தில் கொள்வது பொருத்தமாகும்.

**"ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற**
**உத்தமர் தம் உறவு வேண்டும்.**
**உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவோர்**
**உறவு கலவாமை வேண்டும்..."**

என்றும் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய பண்பாட்டினையும் உயரிய சிந் தனையை மனதில் இருத்தவேண்டிய தேவை பற்றியும் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

எமது தாய்நாட்டின் மதிப்பு வளர வேண்டுமானால் எமது அற நூல்களின் பெருமையைச் சொல்லிக் கொண்டிருந்தால் போதாது. நாட்டு மக்களின் வாழ்க்கை யையே சான்றாக எடுத்துச் சொல்ல வேண் டும். அந்த அளவுக்கு வாழ்க்கை உயர வேண்டும். "குற்றம் உணர்வான் குணவான்" பிறர் சொல்வதற்கு முன்பே நாம் உணர வேண்டும்.

கடவுளுக்கு ஏதாவது செய்துவிட்டுத் தப்பலாம் என்று எண்ணுவது தவறு. நாட்டுக் குத் தொண்டு செய்வதைக் கண்டு கடவுள் மகிழ்வார் என்ற நம்பிக்கை ஐரோப்பிய நாடு களில் பொதுவாக உள்ளது. நாமாகவே உணர்ந்து நல்லதையே செய்யாவிட்டால் இயற்கையின் தண்டனையை அனுபவிக்க வேண்டிவரும். சென்ற நூற்றாண்டில் இந்தியா வில் சில பகுதிகள் சாதித்துவேஷம் தாண்டவ மாடிய இடங்களில் வெள்ளமும் மின்னலும் தாக்கியபொழுது இயற்கையின் தண்டனை என மகாத்மா காந்தி கூறியுள்ளார்.

"நீதியும், நேர்மை நியாயமும், மனச் சான்று இவைகள் சிறந்து விளங்குமென்றும் எங்கும் மனிதன் நல்லவனாகத் திருந்துவான்" என்றும் காந்தி அடிகள் நம்பினார்.

சில நாடுகளில் குழப்பங்கள் அதி கரிக்கின்றன. அரசாங்கத்தின் பொறுப்பை விட குடிமக்களின் பொறுப்பு அதிகரிக்க வேண்டும். கெட்டவர்களை இனம்கண்டு மக் கள் ஒதுங்கி வாழவேண்டும். மக்கள் ஊட கங்களை, மேடைப்பேச்சை, அறிவை நாக ரிகக் கருவிகளாகப் பயன்படுத்த வேண்டும். மக்கள் ஆட்சியில் சமுதாயத்தைக் காக்கும் மனச் சான்றின் வலிமையும் தெய்வீக உணர்வும் அதிகரிக்க வேண்டும். அறிவியல் வளர்ச்சியும் அறநெறி வளர்ச்சியும் சமுதா யக் கூட்டுறவும் பெருகப் பெருக மனிதரிடம் இரத்தத்தில் வேறுபாடில்லை என்ற தெளிவு ஏற்பட்டு மனிதாபிமானம் மேலோங்கி வளர வாய்ப்புக்கள் உண்டு.

தெய்வீக நம்பிக்கை உடையவர்கள் மனிதாபிமானம் உடையவர்கள். தன்னம்பிக்கை கொண்டிருந்த ஒரு சிலருடைய வரலாறே உலக சரித்திரமாகும். அத்தகைய நம்பிக்கை உள்ளேயிருக்கும் தெய்வீகத்தை வெளியே வரவழைக்கின்றது. மானுடம் மாண்படைகிறது. நம்பிக்கை நல்ல இலட்சியத்துக்கு வழி அமைக்குமே தவிர மறையாது. மறையவும் மாட்டாது. உதாரணவாயிலாக விளக்குவது பொருத்தமாகும்.

ஒரு முறை நூற்றுக்கணக்கான பக்தர்கள் கங்கையில் ஸ்நானம் செய்து இல்லறம் சென்று கொண்டிருந்தார்கள். இக்காட்சியைச் சிவனும் பார்வதியும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

பார்வதி பரமசிவனிடம் மனிதாபிமானம் தொடர்பாக கேள்வியைக் கேட்டார். "கங்கையில் நீராடினால் பாவங்கள் போகும் என்பார்களே. இவர்களுடைய பாவங்கள், கஷ்டங்கள் மறைந்தனபோல் தெரியவில்லையே". "இவர்கள் ஸ்நானம் செய்யவில்லை. தங்கள் உடம்பை நனைத்துக்கொண்டு செல்கிறார்கள். நாளைக்கு ஒரு சம்பவம் மூலம் விளக்க விரும்புகின்றேன்" மறுநாள் பரமசிவன் ஒரு வயோதிபப் பிராமணர்போல் வேடம் தாங்கி மழை வெள்ளத்தில் கிடந்தார். எழும்ப முடியாதவர்போல் தவித்தார். பார்வதி ஒரு இளம் பெண்போல் வேடம் போட்டபடி வெள்ளத்தில் நின்று கொண்டு "ஐயோ என்னுடைய வயதான கணவர் விழுந்து விட்டார்; யாராவது கை கொடுத்து தூக்கிவிடுங்கள்" எனக் கதறினாள்.

பலருக்கு உதவிபுரிய எண்ணம் தோன்றவில்லை. சிலர் கிழவரைத் தூக்கிவிட முன்வந்தார்கள். ஆனால் பார்வதி அவர்களைப் பார்த்து "என் கணவர் ஒரு பாவமும் அறியாதவர். எனவே பாவமற்றவர் தான் இவரைத் தொடலாம். பாவம் செய்தவர் இவரைத் தொட்டால் சாம்பலாகி விடுவார்கள்" எனக் கூறினார். "அப்படியானால் நான் இவரைத் தொடத் தகுதியில்லை. பாவங்கள் செய்திருக்கின்றேன்" எனக் கூறியபடி பலர் முன்வரவில்லை. அன்றைய தினம் உதவி கிடைக்கவில்லை. கடைசியில் ஒருவன் ஸ்நானம் செய்து அந்தப் பக்கமாக வந்து கொண்டிருந்தான்.

"ஐயா புண்ணியவானே தாங்கள் இவரைத் தூக்கிவிடமாட்டீர்களா?" என்று கேட்டாள். "நான் பாவமற்றவன். கங்கையில் நீராடிப் பாவங்களை நீக்கிவிட்டு வருகின்றேன். நான் ஒரு நாடோடி" என்று கூறியபடி கிழவரைத் தூக்கிவிட்டான். உடனே பரமசிவனும் பார்வதியும் அவனுக்குத் தரிசனம் கொடுத்து அருள் புரிந்தனர். அவனுடைய நம்பிக்கை நிறைந்த மனிதாபிமானம் அருள் பெற வழிவகுத்தது.

நல்ல வாழ்வுக்கு நீதி நியாயம் துணையாக அமைகின்றது. அறிஞர் ரொல்ஸ்ரோய் தரும் விளக்கம் பொருத்தமானது. "மனிதன் தன்னை அறியவும் இப்பிரபஞ்சத்துக்குள்ள தொடர்பை அறியவும் கடவுளிடம் ஒரு கருவியைப் பெற்றுள்ளான். இக் கருவியின் பெயர் "நியாயம்". சரியானது எது என்பதை ஒருவன் காணாவிடில் அவன் குருடன் மட்டுமே. ஆனால் கண்டு அதை மறுப்பவன் நேர்மையற்றவனாகின்றான்.

எனவே எல்லா மனிதர்களும் மனிதாபிமானத்தோடு வாழ்ந்தால் இவ்வுலகில் காணப்படுகின்ற பொருத்தமற்ற, நியாயமற்ற செயல்கள் குறைந்து "அதிசய உலகத்தில்" வாழ்வாங்கு வாழலாம்.

*விரோதி உன் குறைகளை பிறரிடம் சொல்வான், நண்பன் உன்னிடம் சொல்லுவான்.*

# அடிமுடி தேடிய விஷ்ணு பிரமன் பட்ட அவலம்

– **திரு அ. சுப்பிரமணியம்** அவர்கள் –

படைப்புக் கடவுளாய பிரமதேவன் பாற்கடலில் பாம்பணைமீது பள்ளிகொண் டிருந்த காத்தற் கடவுளாய பரந்தாமனைத் தட்டி எழுப்பி "நான் படைத்துவிட்ட ஜீவ ராசிகளைக் காக்கும் பொருட்டு உன்னைப் படைத்துவிட நீயோ மிக அலட்சியமாக உறங்குகிறாயே! இது சரியா?" என்றான்.

இதுகேட்டுச் சினந்தெழுந்த முகுந் தன் "எனது உந்திக் கமலத்திலிருந்து பிறந்த நீ வாய்க்கு வந்தபடி பிதற்றாதே. நாவை அடக்கிப் பேசு; இல்லையேல் விபரீதமான விளைவுகளைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும்" என்று மிகவும் ஆவேசமாகக் கூறி னார்.

இதனைச் செவிமடுத்த பிரமன் வெகுண்டெழுந்து இழிநகை செய்து "நான் எனது சுயமுடிவின் படியே படைத்தல் தொழிலைச் செய்து வருகிறேன். அதனால் நானே பெரியவன். நானே பரப்பிரம்மம்" என் றான். மேலும் என்னால் படைக்கப்பெற்ற உனக்கு நான் எவ்வகையில் மகனாக முடி யும் என்று கேட்டான்.

இவ்வாறு இழிவு தரும் வன்முறைக்கு நிகரான பேச்சினைச் செவிமடுத்த பரந் தாமன் சினந்து, "கெடுகுடி சொற்கேளாது" என்றெண்ணியவராய் "அடே பிரமா! உன் னைப் பெற்ற தந்தையை விடவும் நீ பெரிய வனோ? அகந்தை கொண்டு உளறாதே" என்றார். மேலும் "நாம் எல்லோரும் தெய்வக் குழந்தைகள். அதனால் தேவர்களானோம். எம்மையெல்லாம் வழிநடத்தும் பரம்பொருள் ஒருவர் இருக்கிறார். அவர்தான் யாவர்க்கும் மேலாய கடவுள். எம்மையும் சகல ஜீவராசி களையும் இயக்கியவண்ணம் உள்ளார். அதன் காரணமாக இறைவன் 'இயவுள்' எனவும் பேசப்படுகிறார்" என்றும் கூறினார் காத்தல் கடவுளாய முகுந்தன்.

இவ்வாறு இருவரும் சமரிட்டு நிற்கும் போது சிவபெருமான் ஆணவ கன்ம மாயா மலத்திடை இருவரும் கட்டுப்பட்ட நிலை அடைந்த இருவரையும் போரிடுவதிலிருந்து விலக்கி உண்மையை உணரவைக்கும் நோக்கில் சிறு சோதிப் பிழம்பாக இடையே தோன்றி அசரீரியாக இந்தச் சோதியின் அடியையும் முடியையும் முதலில் யார் காணுகிறீர்களோ அவரே பெரியவர். அவரே மேலானவர். அவரே பரம்பொருள். எனவே முயற்சி செய்யுங்கள். சென்று வருவீர். வென்று வருவீர்" என்றார். இது கேட்டவர் இருவரும் அசரீரி வாக்குப்படி அடி முடி தேடப் புறப்பட லாயினர்.

சிவன் சோதிமயமாக நின்ற இரவு தான் மகா சிவராத்திரி எனப்படுகிறது. இத் தினம் மாசி மாத அபரபக்கச் சதுர்த்தசி திதி பொருந்திய நடு இரவாக அமைந்தது. இதனை லிங்கோற்பவ காலம் என்றும் கூறுவர்.

பிரம்மனும் விஷ்ணுவும் கண்ணுக் கும் மனதுக்குமெட்டாத கோடி சூரிய பிழம் பின் சிறு உருவெளித் தோற்றம் கண்டு வியந்து குப்பி விளக்கின் கீழ் மேல் பகுதி களை விரைவில் கண்டுவிடலாம் எனும் நப் பாசையில் தள்ளப்பட்டு விஷ்ணுவானவர் பன்றியாக உருவம் பெற்றுப் பாதாள

*தோல்வியைக் கண்டு நீ பயந்தால் வெற்றி உன்னைக் கண்டு பயப்படும்.*

உலகம் ஏழையும் துளாவிச் சென்று சோதி யின் அடியைக் காண முடியாது களைத்துத் தான் பெரியவனல்ல; என்னும் உண்மை உணர்ந்து ஆணவ கன்மமல மாயா வேதனை யிலிருந்து விடுதலையடைந்து சிவபெருமான் ஒருவரே பரம்பொருள் என்றும் அவரே யாவற் றுக்கும் மேலானவர் என்னும் உண்மையை மன ரீதியாக உணர்ந்து அடியைத் தேடும் முடிவைக் கைவிட்டு எல்லாம்வல்ல இறை வனிடம் வந்து மன்னித்தருளி ஆட்கொள்ள வேண்டுமென்று பாதாரவிந்தம் பணிந்து நின்றார். இது கண்டு புன்னகை பூத்த ஆதி அந்தம் இல்லாத இறைவன் மலபரிகாரம் செய்து உனக்கு உண்மையைப் புரிய வைக்கவே பலப்பரீட்சை வைத்தேன். நீ உண்மையைப் புரிந்து கொண்டாய். அதனால் மகிழ்ந்தேன். எனவே எனது இடது பக்கத்தில் நிற்க" என்று காட்சி தந்தருளி னார். இடப்பக்கத்திலேதான் அர்த்தநாரீஸ்வர வடிவில் வராகமூர்த்தியின் சகோதரியாய உமையம்மை வரப்பிரசாதிகட்கெல்லாம் திருவருள் தந்து வருவது கண்கூடு.

இந்நிலையில் முடியைக் காணப் புறப்பட்ட பிரமதேவன் அன்னப் பறவையாகி மேலுலகம் ஏழிலும் சிறு விளக்குச் சுடரை எட்டித் தொட்டு விடலாம் என்னும் அகங் காரத்தில் பறந்தபோது கிடைக்காமை மட்டு மன்றி வெப்ப மிகுதியால் வதங்கி இறக்கை முழுவதும் கருகிப் பறக்க முடியாது படுக்க "நானே பெரியவன்" என்ற மயக்கம் ஒரு சிறிது நீங்க அலகிலா விளையாடல் செய்த எண்குணத்தான் அருளால் சிறிது அயர்ச்சி நீங்கிக் கீழ் இறங்க எண்ணும்போது தீப் பிழம்பின் முடிமீதிருந்து தாழம்பூ ஒன்று கீழ்நோக்கி விழ அதனை எடுத்த பிரமன், மீண்டும் முருங்கை மரமேறிய வேதாளம் போன்று மலமாயையில் சிக்குண்டு மலரைக் கையில் எடுத்தவன் முடியைக் கண்டதாகச் சாட்சி கூறுமாறு பூவைப் பணித்துக் கொண்டு வந்தான். எல்லாம் அறிபவராய இறைவன் எதுவும் தெரியாதவர்போன்று குதூகலத் துடன் வந்த பிரமனை நோக்கி "முடியைக் கண்டாயா?" என்றார். "ஆம்! கண்டேன்" என்றார். "நீ முடியைத் தொட்டமைக்கான சாட்சி ஏதும் உண்டா?" என்றார். "ஆம். தாழம்பூவே சாட்சி" என்றான். தாழம்பூவை நோக்கிய எல்லாம் வல்ல இறைவனாகிய பரம்பொருள் "இவர் முடியைத் தொட்டாரா? என் முகத்தை நேரில் பார்த்துக் கூறு" என்றார்.

இதுகேட்ட தாழம்பூ சிறிது பதட்டம் அடைந்தபோதும் துணிந்து "ஆம்! முடியில் நானிருந்தபோது வந்து தொட்டவரை வாழ்த் தியதோடு அன்பளிப்பாக என்னையும் அளித் தேன்" என்றது.

இதுகேட்ட சிவன் உக்கிரமாகக் கோபம் கொண்டு "யாம் எல்லாம் அறிபவர் என்று உனக்குத் தெரியுமா? என்றதோடு நீ உண்மைக்குப் புறம்பாகப் பேசுகின்றாய்; எனவே பொய்க்கரி கூறியதால் எங்கள் தலைமேல் அர்ச்சிக்கப்படுவதிலிருந்து விலக் கப்படுகிறாய்" என்றார்.

இவற்றையெல்லாம் பார்த்தும் கேட் டும் நின்று தலை கவிழ்ந்தவனைச் சினந்து நோக்கிய பரம்பொருள் நீ பொய் கூறியது மாத்திரமன்றி ஒரு பொய்யான சாட்சியையும் கொண்டு வந்து ஆணவமிடுக்கில் அறியாமை இருளில் மூழ்கி மக்களால் வழிபடப்பெறும் நிலையை இழந்து போய்விட்டாய். எனவே பூவுலகில் எங்கேயும் உனக்குத் தனியான கோவில்கள் அமையாதிருக்க என்று சாபமிடு கிறேன்" என்றார். இத்தருணம் விழிப்புணர்வு பெற்ற பிரமன் அகந்தையும் ஆணவமும் அகலப்பெற்று எல்லாம் வல்லவரும் எண்குணமுடையவரும் பரம்பொருளுமாய சிவபெருமானது பாதார விந்தங்களைப் பற்றி

*அன்பு செலுத்துதல் ஆணுக்கு அழகு. புரிந்துகொள்ளுதல் பெண்ணுக்கு அழகு.*

"நான் அறிவிழந்து செய்த பெரும் பிழையைப் பொறுத்தருள்க என்று மன்றாடி நின்றான்.

இதுகண்டு மகிழ்ந்த மன்று ஆடியாகிய சிவனார் தனது வலது பக்கம் நிற்க" என்றார். இதுகேட்டு மகிழ்ந்த பிரமனும் விஷ்ணுவும் "அவனருளாலே அவன்தாள் வணங்கித்" தத்தமது படைத்தல், காத்தல் கடமைகளை எவ்வித விக்கினமும் இன்றிச் செய்து வரலாயினர்.

"நான் என்ற அகந்தை மிகுதியினால் முகுந்தனிலும் மேலாக அவதிப்பட்டவர் பிரமனேயாவர் எனலாம்.

"எல்லாம் வல்லவரே; நமக"
"எல்லாம் அறிபவரே; நமக"
"பரம்பொருளே; நமக"

## ஞானச்சுடர் பல்வளமும் பெற்று பல்லாண்டு வாழ்க!

உலகியல் வாழ்வு சிறப்புற வேண்டுமெனின் உடல், உள, சமூக, பொருளாதார வளங்களும், பலமும் அத்தியாவசியமாகும். இந்தவிதத்திலே தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமமும், ஞானச்சுடரும் ஆற்றிவரும் தொடரான பணிகள் என்றும் நாம் மனப்பூர்வமாகப் பாராட்டி நன் மனத்துடன் சைவ கலை பண்பாட்டுப் பேரவைக்கு உறுதுணையாயிருப்பது அவசியமாகும்.

இந்தவிதத்திலே ஞானச்சுடர் தொடர்ந்து பணியாற்ற எமது நல்வாழ்த்துக்கள் உரியதாகும். வாழ்க! வளர்க! நற்பணிகள்.

-நீர்வைமணி-

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**

செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**

செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*பிறர் எதைச் சொன்னாலும் கேட்டுக்கொள். உனக்கு சரி எனத் தெரிவதைச் செய்.*

# வைகாசி மாத வாராந்த நிகழ்வுகள்

03.05.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
சொற்பொழிவு:– "இறை தியானம்"
வழங்குபவர் :– ஸ்வாமி சிதாகாசானந்தா அவர்கள்
(சின்மயா மிஷன்)

---

10.05.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
விடயம் 01 :– "திருவாசகத் தேன்"
வழங்குபவர் :– சைவப்புலவர் சறோஜினிதேவி சிவஞானம் அவர்கள்
விடயம் 02 :– "திருவாசகப் பாடல்கள்"
வழங்குபவர் :– சைவப்புலவர் கவிதா கதிரமலை அவர்கள்
(பக்கவாத்திய சகிதம்)

---

17.05.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
**"வருடாந்த வைகாசிப் பெருவிழா"**
"சித்தர்களும் சிவபூமி மண்ணின் எழுகோலமும்"
என்னும் நூலின் அறிமுகம்

---

24.05.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
சொற்பொழிவு:– "கந்தபுராணம்" (தொடர்)
வழங்குபவர் :– திரு அ. குமாரவேல் அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

31.05.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்
**ஞானச்சுடர் வைகாசி மாத வெளியீடு**
வெளியீட்டுரை :– திரு சி. சிவபாலசிங்கம் அவர்கள்
(இளை. கிராம சேவகர்)
மதிப்பீட்டுரை :– திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்
(ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி)

257ஆவது மலர்

பதிவு இல. QD/10/NEWS/2019

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

